# பொருளியல் நோக்கு

ஜூன்/ஜூலை
1979



மக்கள் வங்கி வெளியீடு

சுற்றுலாத்துறை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சுற்றுலாத்துறை

# அன்றும் இன்றும்

இன்று, (பெரும்பாலும்) செல்வந்த நாடுகளைச் சேர்ந்த சுமார் 26 கோடி மக்கள் வருடாந்தம் சர்வதேச சுற்றுலாக்களில் ஈடுபட்டு வருகின்றனர். 19 ம் நூற்றூண்டிலும் 20 ம் நூற்றூண்டின் ஆரம்ப நாட்களிலும் 'சுற்றுலா' என்பது செல்வந்த நாடுகளில் கூட ஒரு சிலருக்கு மட்டுமே உரித்துடையதாக இருந்தது. ஆனுல், 1920 க்களில் தென் பிரான்சில் கஸினேக்கள் திறக்கப்பட்டமையாலும், வேறு சில காரணிகளினுலும் ''கடலையும், சூரியனையும், மணலையும், செக்ஸினையும் நிரந்தரமாகத் தேடிச்செல்லும்'' நவீன சுற்றுலாத்துறை தோற்றம் பெற்றது. இவ்வாருக, இருபதாம் நூற்றூண்டின் அதியற்புதமான ஓர் ''ஓய்வுக் கைத்தொழிலாக'' சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்தது. வேலை முடிந்த பின்னர் 'சும்மா கிடக்கும்' நேரத்தையே கடந்த காலங்களில் மேற்கத்தைய மக்கள் 'ஓய்வு' எனக்கருதி வந்துள்ளனர். இம் மக்களில் பெருந்தொகையானேரைப் பொறுத்தவரையில், எந்த அலுவலிலும் ஈடுபடாது வேலையிலிருந்து ஒதுங்கி நிற்பதே ஓய்வு என்பதன் அர்த்தமாக இருந்தது. ஆனுல், ஓய்வு நேரங்களில் ஏற்பட்ட தொடர்ந்த அதிகரிப்பும், செல்வச் செழிப்பும் காரணமாக ஓய்வு நேரப் பொழுது போக்குகளைத் தேட வேண்டிய நிர்ப்பந்தம் மக்களுக்கு ஏற்பட்டது. இதன் விளைவாக, ஓய்ந்து கிடப்பதனை பிறிதொரு சந்தை வாய்ப்பாக கருதும் ஒரு நவீன கைத்தொழில் உருவாகியது.


ஒரு காலத்தில் மேலைத்தேச சீமான்கள் ஐரோப்பியத் தலைநகரங்களில் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டனர். ஆனுல், இன்று அந்த நிலைமை இல்லை. புளித்துப் போயிருக்கும் வாழ்க்கை ஓட்டத்திலிருந்து தப்பிச்சென்று புதுமைகளைக் காணவேண்டும் என்ற மேற்கத்தைய மக்களின் மனேபாவம் வளர்ச்சியடைந்துள்ளது. சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் இம் மனேநிலையை நன்கு புரிந்துகொண்டு 'சாதகமான சந்தைகளை' நன்கு பயன்படுத்திக்கொள்கின்றனர். வெகு தொலைவில் அமைந்திருக்கும் கண்டறியப்படாத பிரதேசங்களையும், ''வனுந்திரங்களையுமே'' இன்றைய பயணிகள் நாடி வருகின்றனர். இளைஞர்கள் இன்னும் ஒரு படி மேலே சென்று ''ஹிப்பிகளாக'' மாறி உலகெங்கணும் அலைந்து வருகின்றனர். எவ்வாருயிருப்பினும், இன்றும் கூட சுற்றுலா அமைப்பானது, வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து குறைவிருத்தி நாடுகளை நோக்கிச் செல்வதாகவே இருந்து வருகின்றது. எனவே, இத்துறை பெற்றுத்தரும் அனுகூலங்களில் பலத்த நம்பிக்கை வைத்திருக்கும் வளர்முக நாடுகள், பயணிகளை ''இன்முகத்துடன் வரவேற்கவும், உபசரிக்கவும்'' தொடங்கியுள்ளன. இப்பக்கத்திலிருக்கும் படங்கள் அகிலம் பரந்த சுற்றுலா அமைப்பின் மாறிவரும் தோற்றத்தினை எடுத்துக்காட்டுகின்றன.

1



அன்றும் இன்றும்

2



1. எகிப்திய பாலைவனத்தில் சுற்றுலாப்பயணிகள் (1914).
   நன்றி: ருடோல்ப் சோடர்
2. காட்மன்டுவில் ஹிப்பிகள்.
   நன்றி: அலன் ஹட்சிஸன்
3. கருங்கடல் கரையில் அமைந்திருக்கும் பல்கேரியாவின் 'வெப்பமான' கடற்கரை.
   நன்றி: 'பல்கேரியா டுடே', ஏப்ரல் 1979.
4. உல்லாசமாகக் குளிப்பவர்கள்.
   நன்றி: நிகல் ஓட்டன்

3



4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 5 இதழ் 3/4 ஜூன்/ஜூலை 1979



மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.


**நிரல்கள்**


2 நிகழ்ச்சிக் குறிப்பேடு: ஏப்ரல்/மே 1979

16 கைத்தொழில்: தயார் செய்யப்பட்ட ஆடை ஏற்றுமதிகள்

19 பெருந்தோட்டப் பயிர்கள்: தேயிலைப் பெருந்திட்டம்


**விசேஷ அறிக்கை**


3 சுற்றுலாத்துறை — ஒரு புதிய கைத்தொழிலின் வளர்ச்சி


**சிறப்புக் கட்டுரைகள்**


கல்வின் குமாரசிங்கா 21 இந்திய அபிவிருத்தி உத்திகள்

வாஸ் குணவர்தன 25 பண்ட உடன்படிக்கைகள்

டி. பின்ஹுர் சப்பிதின் 31 இலங்கையில் நெல் களஞ்சியப்படுத்துதல்


**சந்தாதாரர்கள் கவனிக்கவும்:**

எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சில சூழ்நிலைகளால் அச்சடிப்பதில் ஏற்பட்டிருக்கும் தாமதங்களைத் தவிர்க்கும் பொருட்டு, நாம் இரு இதழ்களை (ஜூன் / ஜூலை 1979) ஒருங்கிணைத்துள்ளோம். எவ்வாறிருப்பினும், எமது சந்தாதாரர்கள் 12 தனித்தனி இதழ்களைப்பெற உரித்துடையவர்கள் என்பதைத்தெரிவித்து கொள்கிறோம்.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரைசால்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

**அடுத்த இதழில்**

- அரச துறை முகாமை — இலங்கை நிலை
- தமிழ் தட்டச்சுப்பொறி—மேலும் இலகுவானதும், கையடக்கமானதுமான ஒரு வடிவமைப்பு குறித்த சில சிபார்சுகள்
- 1979 ம் ஆண்டின் முதலரைப்பாகத்தில் இலங்கையின் பொருளாதாரம்

**அட்டைப்படம்**

உள் மனை அலங்கரிப்புக் கலையில் புகழ் பெற்ற, சிருஷ்டியாற்றல் படைத்த ஓவியர் தயா அபேபாலவினுல் இந்த இதழின் அட்டைப்படம் வரையப்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

**ஏப்ரல்**

1 சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பச்சைத் தேயிலை உற்பத்தி செய்வதனை ஊக்குவிக்குமுகமாக தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்ற தேயிலைக் கொழுந்தின் உத்தரவாதவிலையை இருத்தல் 70 சதத்திலிருந்து (ஒரு கிலோ ரூபா 1.45) இருத்தல் 85 சதமாக (ஒரு கிலோ ரூபா 1.87) அதிகரித்திருப்பதாக தேயிலை ஆணையாளர் தெரிவித்தார்.

2 பெருந்தெருக்கள் அபிவிருத்தி, புனருத்தாரணம் என்பவற்றிற்காக வேண்டி சர்வதேச அபிவிருத்தித் தாபனம் (I. D. A.) 16.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை (25.5 கோடி ரூபா) ஸ்ரீ லங்கா அரசாங்கத்திற்குக் கடனுக அளிக்க இணங்கியிருப்பதாக இத்தாபனத்தின் உத்தியோகபூர்வமான செய்தி யொன்றின் மூலம் அறிய முடிகின்றது.

3 1979 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டப் பேச்சின் முன்மொழிவுகளுக்கு அதிகாரமளிக்கும் வகையில், 1979 ம் ஆண்டு 28 ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டமூலம் ஆக்கப்பட்டது. 1979-80 ம் ஆண்டுகளுக்குப் பின்னர் எல்லா வருமானங்களுக்கும் நடைமுறை வருடாந்த அடிப்படையில் வரியறவிடல் இப் புதிய சட்டமூலத்தின் சிறப்பம்சங்களில் ஒன்ருகும்.

10 1958 ல் பஸ்சேவை தேசியமயமாக்கப்பட்டதன் பின்னர், முதல் தடவையாக ( ஸ்ரீ லங்கா மத்திய போக்குவரத்துச் சபையினுல் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்துடன்) துணைச் சேவை மார்க்கங்களில் தனியார் பஸ் சேவை ஆரம்பமானது.

12 ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ''ரஜரட்ட சேவை'' என்னும் தனது முதலாவது பிராந்திய ஒலிபரப்பு நிலையத்தை அனுராதபுரத்தில் நிறுவியது.

14 ஒரு தனியார் நிலையம் (இன்டிபென்டென்ட் டெலிவிஷன் நெட்வேர்க் லிமிட். (I. T. N.) கொழும்பில் குறிப்பிட்ட தூரத்திற்குள் தனது சேவையை ஆரம்பித்ததன் மூலம், ஸ்ரீலங்காவின் முதலாவது தொலைக்காட்சி சேவை ஆரம்பமானது.

15 பிரான்சிடமிருந்து பொருட்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கு, 3.8 கோடி பிராங்க் (ஏறக்குறைய 13.6 கோடி ரூபா) கடன் ஒப்பந்தமொன்றிற்கு இலங்கை பிரான்சிய அரசாங்கத்துடன் கைச்சாத்திட்டது.

17 உள்ளூர் கரும்பு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் வகையில், பதனிடாச் சீனி மீதான இறக்குமதித் தீர்வையை அரசாங்கம் கிலோ ரூபா 2 இலிருந்து ரூபா 6 ஆக அதிகரித்துள்ளது. சாதாரண சீனி இறக்குமதி மீதான தீர்வை (ஒரு கிலோவிற்கு ரூபா 2) யில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

20 ஆசியாவின் சுற்றுலாத்துறை செழிப்பினை அனுபவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனுல் எதிர்பார்க்கப்படுகின்ற சுற்றுப் பயணிகளிற்குப் போதிய வசதிகளை அளிக்கத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வது பெரும் பிரச்சினையாகவிருக்கும். சுற்றுலாத்துறையின் வளர்ச்சியை சமாளிப்பதற்கு 1988 ல் ஆசிய நாடுகள் 9800 கோடி டொலர்களைச் செலவிட வேண்டியிருக்குமென ஒரு போயிங் கம்பனி மேற்கொண்ட ஆய்வு காட்டுவதாக ஆசியன் வோல் ஸ்ட்ரீட் ஜர்னல் அறிக்கை யொன்று தெரிவிக்கின்றது.

**மே**

1 1979 ம் ஆண்டின் 17 ம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச்சபைச் சட்ட மூல விதிகளின் பிரகாரம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நிறுவப்பட்டது. வீடு, கட்டிட நிர்மாணம், வீடமைப்பு அபிவிருத்திக்குத் திட்டமிடல், வீடமைப்பு அபிவிருத்தியில் ஈடுபடுவோருக்கு நில, நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன இவ்வதிகார சபையின் பிரதான நோக்கங்களாகும்.

3 இந்தியாவின் தாஜ் ஹோட்டல் குரூப் பல கோடி ரூபா செலவில் ஸ்ரீ லங்காவில் பல ஹோட்டல்களை நிறுவத் திட்டமிடுவதாக, அதன் பிரதிநிதி யொருவர் கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் கூறினுர். கொழும்பில் 5 நட்சத்திர ஹோட்டலொன்றும், தீவின் ஏனைய பிரபல்யமான சுற்றுலா நிலையங்களில் 3-4 வரையிலான ஹோட்டல்களும் நிறுவப்படுமென செய்திகள் தெரிவிக்கின்றன.

8 1979 ல் வளர்முக நாடுகளுக்கு உதவியாக 720,500 தொன் தானியமும், 150,000 தொன் பால்மாவும், 45,000 தொன் வெண்ணெய்யும் வழங்க பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் வெளிநாட்டமைச்சர்கள் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இதில், இலங்கை 19,000 தொன் தானியத்தைப் பெறும்.

10 1978 ம் ஆண்டிற்கான சீனுவின் தானிய உற்பத்தி அதற்கு முன்னைய வருடக் கணிப்பீடான 29.5 கோடி தொன்களை விடவும் அதிகமாகும் என ஸின்ஹுவா செய்தித் தாபனம் அறிவிக்கின்றது.

கைத்தொழில் நாடுகளின் பாதுகாப்புக் கொள்கை வளர்முக நாடுகளின் வெளிநாடுச் செலாவணி உழைப்பு வாய்ப்பினைக் குறைத்து, வேலையில்லாமையை அதிகரிக்க வைத்திருப்பதன் மூலமும், வருமான வளர்ச்சி விகிதாசாரத்தைக் குறைப்பதன் மூலமும் அந்நாடுகளை நேரடியாகப் பாதித்துள்ளது என உலக வங்கியின் தலைவர் ருெபட் மக்னமரா மணிலாவில் நடைபெற்ற ஐந்தாவது உங்டாட் கூட்டத் தொடரில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

12 பருத்திக் கழிவு, சூரியகதிர் வெப்பக்கருவி, தொலைக்காட்சி-அன்டென்ஞ என்பன மீதான இறக்குமதித் திர்வைகள் முறையே 25 சதவீதத்திலிருந்து 5 சதவீதம், 100 சதவீதத்திலிருந்து 25 சதவீதம், 50 சதவீதத்திலிருந்து 12 சதவீதம் வரை குறைக்கப்பட்டன.


19 பிரேசில் தனது கோப்பி ஏற்றுமதி விலையை இருத்தல் சராசரி 10 அமெரிக்க சதத்தினுல் அதிகரித்துள்ளது என இந்திய பினுன்சியல் எக்ஸ்பிரஸ் செய்தியொன்று தெரிவிக்கின்றது. சென்ற வருட குறைந்த ஏற்றுமதி விலையான 1.35 டொலருடன் ஒப்பிடுமிடத்து, உயர்ரக பச்சைக் கோப்பியை இருத்தல் 1.45 டொலரிற்குக் குறைவாக விற்பனை செய்ய இயலாதென அரசாங்கத்தின் கோப்பிக் கொள்கை முகவராண்மையான பிரேசிலிய கோப்பிக் கொள்கை நிறுவனம் அறிவித்துள்ளது. குறைந்தரக கோப்பியின் தற்போதைய ஏற்றுமதி விலை 1.40 டொலராகும். முன்னர் இதன் விலை 1.30 டொலராக இருந்தது. எவ்வாருயினும், ஒரு வருடத்திற்கு முன்னர் உலக கோப்பி நிரம்பல் குறைவாகவிருந்தபோது பெற்ற விலையை விடவும் புதிய விலைகள் 20 சதவீதம் குறைவானவையாகும்.

25 தேசிய தோட்டத்தொழில் முகாமை நிறுவனம் அமைக்கப்படுவதற்கான சட்டமொன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. தோட்டத்தொழில் துறையில் முகாமைத்துவ திறனை விருத்தி செய்வது இதன் பிரதான நோக்கமாகும்.

ஸ்ரீ லங்கா ஏற்றுமதி அபிவிருத்தி மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் ஸ்ரீ லங்கா ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆக்கத்திற்கான விதிகளை உள்ளடக்கியுள்ளது. நாட்டின் ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பான எல்லா அதிகாரங்களும் இதற்கு அளிக்கப்படும்.

31 ஈரானின் தேசிய எண்ணெய்க் கம்பனி, இவ்வருடம் எண்ணெய் மீது மூன்ருவது மேலதிக கட்டணமொன்றினை அறவிடப் போவதாக அறிவித்துள்ளது. இதன் பிரகாரம், ஈரானிய பளுவற்ற மசகு எண்ணெய் ஒரு பீப்பாவின் விலை 18.47 டொலர்களாகும்; பளுமிக்க மசகு எண்ணெய் ஒரு பீப்பாவின் விலை 17.74 டொலர்களாகும். இவ்விலை யதிகரிப்பு ஜூன் 1 ம் திகதியிலிருந்து அமுலாகுமென உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான பார்ஸ் அறிவித்தது.

Miss. A. Thambiaiyah
(Teacher)



# சுற்றுலாத்துறை

சுற்றுலாத்துறை இன்று ஓர் அகிலம் பரந்த கைத்தொழிலாக மாறியிருக்கின்றது. உலக வர்த்தகத்தின் வளர்ச்சியை விடவும் கூடிய வேகத்தில் அது வளர்ச்சியடைந்து வருகின்றது. இது ஒரு சேவைத்துறைக் கைத்தொழிலாகும். ஒரு நாட்டின் இயற்கைக் காட்சிகளையும், வனப்புக்களையும் பயன்படுத்தி அது இயங்கி வருகின்றது. இப்பொழுது வளர்முக உலகின் பெருந்தொகையான நாடுகள் இத்தொழிலின் விருத்தியில் தமது கவனத்தைச் செலுத்தி வருகின்றன. இலவசமாகக் கிடைக்கும் இயற்கைச் செல்வத்தை ஒரு விற்பனைப் பண்டமாக மாற்றிக்கொள்ள முடியும் என்ற உண்மையை மூன்றுவது மண்டல நாடுகள் இப்பொழுது உணரத் தொடங்கியுள்ளன. 'நோக்கின்' இந்த இதழுக்கான விசேஷ அறிக்கை, சுற்றுலாத்துறையின் சர்வதேசிய, தேசிய ரீதியிலான சாதக பாதகமான விளைவுகளை வாசகர் முன் சமர்ப்பிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. இத்துறையில் நன்மைகளைப்போலவே தீமைகளும் காணப்படுகின்றன என்பதனையும், நன்மைகளை மேலும் கூட்டிக் கொள்வதற்கும், அதே போன்று தீமைகளைக் குறைத்துக் கொள்வதற்கும் பொருத்தமான உத்திகள் உண்டு என்பதனையும் நாம் இங்கு எடுத்து விளக்குவோம். இந்த உச்சமட்ட நலன்களைப் பெற்றுக்கொள்வதில் நமது நாடு இன்னும் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதே இந்த விஷேச அறிக்கையின் மையக்கருவாகும்.

உலகலாவிய ரீதியிலான சுற்றுலாத்துறை அறுபதுக்களின் ஆரம்பத்தில் மேற்கத்திய நாடுகளில் செழிப்புறத் தொடங்கியது. எனவே, 1961 லிருந்து 1976 வரையுள்ள 15 வருடங்களில் சர்வதேச ரீதியில் சுற்றுலாப் பயணிகளின் தொகை மும்மடங்காக அதிகரித்ததுடன், இத்துறை மூலமான சம்பாத்தியம் ஐந்து மடங்காக அதிகரித்தது. இந்த வருமானத்தில் வளர்முக நாடுகளின் பங்கு 10-20 சதவீதமாகவே இருந்து வந்துள்ளது; ஆனால், அண்மையில் இது அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றது. இந்த 10 - 20 சதவீதம் கூட உலக மொத்த ஏற்றுமதியில் வளர்முக நாடுகளின் பங்கினை விடக் கூடியதாகும்.

## தேசிய சர்வதேசிய கண்ணோட்டத்தில்

# ஒரு புதிய கைத்தொழிலின் வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச சுற்றுலாத்துறை மேற்கைரோப்பிய நாடுகளிலிருந்தும், அமெரிக்காவிலிருந்துமே தோற்றம் பெறுகின்றது. ஆனால், இப்பொழுது ஜப்பான், அவுஸ்திரேலியா, கிழக்கைரோப்பிய நாடுகள் என்பவற்றிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலாப்பயணிகள் பிரயாணங்களை மேற்கொண்டு வருகின்றனர். எனவே, சுற்றுலாவானது பெரும்பாலும் செல்வந்த நாடுகளிலிருந்து வறிய நாடுகளை நோக்கிச் செல்வதாகவே இருக்கின்றது.

கைத்தொழில்மய நாடுகளிலிருந்து வளர்முக நாடுகளை நோக்கி நடைபெற்றுவரும் சுற்றுலா அமைப்பினை, தனித்து நோக்குவதனை விடவும் வரலாற்றுப் பின்னணியுடன் நோக்குதல் பொருத்தமானதாக இருக்கும். கடந்த நூறு வருடங்களாக பாரிய அளவில் நடைபெற்று வந்த உழைப்பாளர் இடமாற்றங்களையும் நாம் கவனித்தல் அவசியமாகும். காலனியாதிக்க அமைப்பில், ஐரோப்பியக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிய நிலைமைகளின் கீழ், அடிமைகளைப் போல் உழைப்பதற்காக இலட்சக்கணக்கான ஆசிய, ஆபிரிக்க மக்கள் தமது தாய் நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் வெளியே எடுத்துச் செல்லப்பட்டனர். மறுபுறத்தில், கண்காணிப்பு மட்ட உயர் தொழில்களுக்காக ஐரோப்பியர் இந்நாடுகளுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டனர். மிக அண்மையில், கைத்தொழில்மய நாடுகளின் பாரிய ஆலைகளில் கீழ் மட்டத் தொழில்களில் உழைப்பதற்காக மூன்றுவது மண்டல நாடுகளிலிருந்து மக்கள் அனுப்பப்படுகின்றனர். இம்மக்கள் பெரும்பாலும் நிரந்தரமாகவே இந்நாடுகளில் தங்கி, கீழ் மட்டத் தொழில்களிலிருந்து உள்ளூர் மக்களை விடுவித்து வருகின்றனர். இதனால், மேற்கத்தைய மக்களின் வர்க்க, வருமான அமைப்புக்கள் மாறுதலடைந்து வருகின்றன. எனவே, அதிகரித்த வருமானங்களைப் பெறும் கைத்தொழில் மய நாடுகளின் தொழிலாளர்கள் சுற்றுலாக்களில் ஈடுபடத் தொடங்குகின்றனர். கீழ்மட்டத் தொழில்களை குடிபெயர்ந்து வரும் மூன்றுவது மண்டல நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும், உயர் தொழில்களை தமது மக்களுக்கும் கைத்தொழில் மய நாடுகள் ஓதுக்கி வரும் ஒரு பின்னணியிலேயே சர்வதேச ரீதியிலான சுற்றுலாத் துறை தோற்றம் பெறுகின்றது.

மூன்றுவது உலக நாடுகளிலிருந்து மேற்கத்தைய நாடுகளை நோக்கி மக்கள் குடிபெயர்வது போலவே, கைத்தொழில் மய நாடுகளிலிருந்தும் தொழில் நிமித்தம் மக்கள் வளர்முக நாடுகளுக்குச் செல்கின்றனர்; அதாவது, உலகெங்கணும் கிளைகளைத் தாபித்திருக்கும் பல்தேசிய நிறுவனங்களில் உயர் பதவிகளில் பணி புரிவதற்காக இவர்கள் செல்கின்றனர். எனவே வளர்ச்சியடைந்த உலகிலிருந்து வளர்முக உலகினை சென்றடையும் சுற்றுலா அமைப்பினை இத்தகைய குடியகல்வுப் பின்னணியிலிருந்து நோக்குதல் அவசியமாகும்.

அகிலம் பரந்த சுற்றுலா அமைப்பு (பெரும்பாலும்) ஒரு வழிப் பாதையானதாக இருந்த போதிலும், மறு திசையை நோக்கியும் சிறிதளவான நகர்வு காணப்படுகின்றது. ஆயினும், இது சற்று வித்தியாசமான உருவிலேயே நடைபெற்று வருகின்றது. வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள் நுழைவதனை வளர்ச்சியடைந்த நாடுகளைப் போலவே வளர்முக நாடுகளும் கட்டுப்படுத்தி வருகின்றன. வளர்முக நாடுகளில் செலாவணிக் கட்டுப்பாடுகள் இறுக்கமானவையாக இருப்பதால் வசதிபடைத்தவர்கள் கூட சுற்றுலாக்களை மேற்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். செலாவணிக் கட்டுப்பாடுகள் நெகிழ்ச்சியானவையாக இருக்கும் சந்தர்ப்பங்களில், வளர்முக நாடுகளிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கிச் செல்வதற்கான விசா போன்ற அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வது கடினமானதாக இருக்கின்றது.

**இலங்கைக்கான சுற்றுப்பயணிகளின் வருகை**

மேற்கைரோப்பிய நாடுகளிலிருந்தே இலங்கைக்குப் பெருந்தொகையான சுற்றுலாப்பயணிகள் வருகின்றனர். 1978 ல் நாட்டுக்குள் 192,592 சுற்றுலாப்பயணிகள் வந்திருக்கின்றனர்; இவர்களில் சுமார் 66 சதவீதமானோர் மேற்கைரோப்பிய நாடுகளைச் சேர்ந்தோராவர்; 18.7 சதவீதமானோர் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்; வட அமெரிக்கா, கிழக்கைரோப்பா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து முறையே 6.5%, 3.2%, 3.4% பயணிகள் வருகை தந்தனர். மேற்கு ஜேர்மனியிலிருந்தே மிகப் பெருந் தொகையான (37,030) பயணிகள் வந்தனர்; அதனையடுத்து, பிரான்ஸ் (23,812), ஐக்கிய இராச்சியம் (14,274), ஜப்பான் (8730), சுவீடன் (14,684), வட அமெரிக்கா (12426) ஆகிய நாடுகளிலிருந்து கணிசமான அளவு பயணிகள் இங்கு வருகை தந்தனர்.

வெவ்வேறு பிராந்தியங்களிலிருந்தும் இலங்கைக்கு 1978 ல் வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் விகிதம் கீழே காணப்படும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. பெருந்தொகையான பயணிகள் (45.2 %) ஐரோப்பாவிலிருந்து நேரடியாக இங்கு வருகின்றனர். சுமார் 30 சத வீதத்தினர் இந்திய உப கண்டத்தில் இறங்கி இலங்கைக்கு வருகின்றனர்.

**சுற்றுலாப் பயணிகள் வருகை–1978**

| பிராந்தியம் | சத வீதம் |
|---|---|
| வட அமெரிக்கா | 6.5 |
| மேற்கு ஐரோப்பா | 66.6 |
| கிழக்கு ஐரோப்பா | 3.2 |
| ஆபிரிக்கா | .8 |
| மத்திய கிழக்கு | .7 |
| ஆசியா | 18.7 |
| அவுஸ்திரேலியா | 3.4 |

நிக்கர்மன், டுவர் யுரோபா—சார்ஞே, ஹோட்டல் பிளான், விங்ரெஸ்ஸர் போன்ற சர்வதேச நிறுவனங்களே பெருமளவிலான சுற்றுலாக்களை ஏற்பாடு செய்கின்றன. சுற்றுலாச் சபையின் தரவுகளின் பிரகாரம் 1978 ல் நாட்டுக்குள் வந்த பயணிகள் பற்றிய விவரம் வருமாறு:

| வகை | சத வீதம் |
|---|---|
| வர்த்தகர் | 8.8 |
| தொழில் சார்ந்தோர் | 8.7 |
| நிர்வாக அதிகாரிகள் | 18.7 |
| விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுனர் | 13.3 |
| கல்வியியலாளர் | 7.0 |
| ஏனைய தொழில்களில் ஈடுபட்டோர் | 12.0 |
| தொழில் இல்லை | 29.1 |
| ஓய்வு பெற்றோர் | 2.3 |

(நாட்டுக்குள் வரும் சுற்றுலாப்பயணிகளில் பலர் தமது தரங்களை உயர்த்திக் கூறும் போக்கினைக் காட்டி வருவதால், இத்தரவுகளில் நாம் சற்று எச்சரிக்கையடைய வேண்டியுள்ளது. மேற்கைரோப்பிய நாடுகளிலிருந்து வரும் பெருந்தொகையான பயணிகள் கீழ் மத்தியதர வகுப்பைச் சேர்ந்த தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாக இருப்பதனை ஆய்வுகள் காட்டின.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிகளின் பால், வயதுப் பிரிவு பற்றிய விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| பால் | ஆண் | 60.5 |
| | பெண் | 39.5 |
| வயதுப் பிரிவு | | சத வீதம் |
| 3—19 | | 5.2 |
| 20—29 | | 30.6 |
| 30—39 | | 27.5 |
| 40—49 | | 16.0 |
| 50—59 | | 12.9 |
| 60 மேல் | | 6.6 |

சுற்றுலாப் பயணிகளின் வகை, அவர்கள் எங்கிருந்து இங்கு வருகின்றார்கள் என்ற விவரங்களை மேற்கூறிய தரவுகள் காட்டுகின்றன. அடுத்து நாம் இங்கு எழுப்ப வேண்டிய வினா யாதெனில், சுற்றுலாப் பயணிகள் ஏன் இங்கு வருகிறார்கள் என்பதாகும்.

**பயணிகள் ஏன் வருகின்றார்கள் ?**

இலங்கைக்கும் செல்வந்த கைத்தொழில் நாடுகளுக்குமிடையே நிலவும் வருமான வேறுபாடுகள் காரணமாக சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதில்லை; மேலும், அவர்கள் இலங்கையை இஷ்டபூர்வமாகவும், மனவிருப்புடனும் தெரிவு செய்து வருவதுமில்லை. அந்நாடுகளில் நிலவும் சலிப்பூட்டும் சமூக, உளவியல் ரீதியான பின்னணி, எமது நாட்டைப் பற்றி அவர்களிடையே உருவாக்கப்பட்டிருக்கும் பிம்பம் என்பன காரணமாகவே அவர்கள் இங்கு வருகின்றார்கள். கைத்தொழில் நாகரிகத்தின் பின்னர் மேலைத் தேச நாடுகளின் சமூக - உளவியல் சூழலில் பல மாறுதல்கள் நிகழத் தொடங்கின. இந்த மாறுதல்களின் விளைவாக மக்களுக்கு கூடிய ஓய்வு கிடைத்தது. கைத்தொழில் முதலாளித்துவத்தின் தோற்றத்தையடுத்து, 'ஓய்வு' என்பதனை தனியாகப் பிரித்தெடுத்து அதனை தனியொரு பொருளாக கருதும் மனோபாவம் வளர்ச்சியடைந்தது.

மூன்றாவது உலக நாடுகள் இன்று வழங்கிவரும் சுற்றுலாச் சேவைகள் முற்றுமுழுதாக ஒரு வர்த்தக நடவடிக்கையாகவே இருந்து வருகின்றன; அதாவது, இவை ஏற்கனவே திட்டமிடப்பட்டு, பயணிகளிடம் திணிக்கப்படுகின்றன. ஜாக்ஸ் பக்னி கோர்ட் என்ற பிரெஞ்சு நாட்டின் அபிவிருத்தி ஆய்வாளர், மூன்றாவது மண்டல நாடுகளில் சுற்றுலாத்துறை பற்றி பல விரிவான பரிசீலனைகளை மேற்கொண்டுள்ளார். மூன்றாவது உலக நாடுகளுக்குப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் பொருட்டு மேல் நாடுகளில் வினியோகிக்கப்படும் பிரச்சார அட்டைகளையும், செய்திப் பத்திரிகை, சஞ்சிகை விளம்பரங்களையும் அவர் ஆராய்ந்தார். ஐந்தில் நான்கு பங்கு பிரச்சார அட்டைகளும், மூன்றில் இரண்டு பங்கு சஞ்சிகை விளம்பரங்களும் 'இதமான சூரியனை'ப் பற்றியே எடுத்துக் கூறுகின்றன என அவர் குறிப்பிடுகின்றார். சூரியன் சூட்டினையும், வெளிச்சத்தினையும் தரும் ஒரு மூலம் மட்டுமன்று; அது, உள்ளத்தை உஷார் படுத்தி கற்பனையைத் தூண்டி மண்ணில் சொர்க்கத்தினைத் தோற்றுவிக்கின்றது என இவ்விளம்பரங்கள் பெருமையுடன் குறிப்பிடுகின்றன. பெரும்பாலும் இவ்விளம்பரங்கள் பாலியலினைக் குறியீடாகச் சித்தரித்துக் காட்டுகின்றன; உள்ளூர்ப் பெண்கள், நெஞ்சத்தில் கிளுகிளுப்பினை உருவாக்கி, உணர்வுகளைப் புஷ்பிக்கச் செய்பவர்களாகவும், 'விட்டுக் கொடுப்பவர்களாகவும்' சித்தரிக்கப்படுகின்றனர். கென்யாவின் கடற்கரை பற்றிக் குறிப்பிடும் பிறிதொரு சமூக விஞ்ஞானியான அதொல்லா, ''குறிப்பாக ஜேர்மன் சுற்றுலாப்பயணி வட்டாரங்களில் இப்பகுதி செக்ஸ் பிரியர்களின் சொர்க்கபுரியாகக் கருதப்படுகின்றது'' என்கிறார். 'டூரிஸ்டிக் யூனியன் இன்டர்நசனல்' என்ற நிறுவனம் வருடாந்தம் 100,000 பயணிகளை நாட்டுக்குள் கொண்டு வருகின்றது; அந்நிறுவனத்தைச் சேர்ந்த ஜே. பிஷர் இலங்கையில் நடைபெற்ற பயண முகவர் காங்கிரஸ் மாநாட்டில் வாசித்த கட்டுரையொன்றில், ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகள் ஏன் ஆசிய நாடுகளுக்கு வருகின்றார்கள் என்ற வினாவை எழுப்பினார். இதற்கான பிரதான காரணம், ''மனதுக்கு இதமூட்டி, உந்துதலும், உற்சாகமும் தரும் இடமொன்றைக் காண'' அவர்கள் ஆசைப்படுவதாகும் என அவர் குறிப்பிட்டார்.

இந்த இடங்களின் வனப்புக்கும், வசீகரத்துக்கும் மேலும் பொலிவூட்டும் வகையில், ''நிசப்தம் நிலவும் சூனிய வெளிகளில்'' ''நாகரிகத்திலிருந்து வெகு தூரம் ஒதுங்கி'' வாழும் மனிதர்கள் பற்றியும், விலங்குகள் பற்றியும் எடுத்துக் கூறப்படுகின்றது. மானிடக் குடியிருப்புக்களுக்கான தேவை இடையீடின்றி அதிகரித்து வரும் ஒரு பின்னணியில், பயணிகளின் கவர்ச்சி விசையான ''வனாந்தரச் சூழலை'' பேணிக் காக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில பிரதேசங்களிலிருந்து மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு சரணாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல சுற்றுலா விளம்பரங்கள் புகைப்படங்கள் மூலம், ''நாகரிகத்திலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால் . . . . . .'' நிலவும், வியப்பூட்டும் காட்சிகளை மக்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றன. எந்த ஒரு மூன்றாவது மண்டல நாடும் தனக்கேயுரித்தான ''வினோத மூட்டும் பிம்பத்தினை'' அழித்துக் கொள்வதை சுற்றுலாக் கைத்தொழில் வட்டாரங்கள் விரும்புவதில்லை, ஆனால், ''எல்லா நாடுகளும் தமது பிம்பத்தைப் பேணிக் காக்க முயல்வதில்லை. சிங்கப்பூர் தனது பழைமையான கட்டிடங்களைத் தகர்த்து விட்டு வானளாவ உயர்ந்து நிற்கும் அடுக்கு மாடிக் கட்டிடங்களை நிர்மாணித்து வருகின்றது. நட்பும், தோழமையும் கொண்ட தாய் மக்கள் பாங்கொக்கிலும், பட்டன்காவிலும் தமது புன்னகையை இழந்து, சிறிது சிறிதாக சுற்றுலாப்பயணிகளை வெறுக்கத் தொடங்கியிருக்கின்றனர்'' என ஒரு பயண முகவர் அங்கலாய்க்கின்றார்.

இலங்கையின் சுற்றுலாத்துறையைப் பொறுத்த வரையிலும் இந்த ''பிம்பம்'' மிக முக்கியமானதாகும். ஏனெனில், இந்தப் பிம்பத்தினை நாடியே பயணிகள் இங்கு வருகின்றார்கள். 1967 ல் நடத்தப்பட்ட சுற்றுலாத்துறை குறித்த ஓர் ஆய்வு, இந்த ''வினோதமூட்டும் சூழலை'' ஒரு பிரதான காரணியாக குறிப்பிடுகின்றது. சுமார் 15 சதவீதம் பசுபிக் பயணிகளுக்கு இது ''மிக முக்கியமானதாகவும்'', 44 சதவீதம் பயணிகளுக்கு ''ஓரளவுக்கு முக்கியமானதாகவும்'' இருந்தது. ''சுற்றுலாப்பயணிகள் வித்தியாசமான அனுபவங்களை நாடி நிற்கின்றார்களாதலின் இவ்வம்சத்தினை மேலும் ஊக்குவித்தல் அவசியமாகும்'' என இவ்வாய்வு முடிவுரை வழங்குகின்றது. ''வெப்பமான சூரியன், தெளிவான கடல், எழில் கொஞ்சும் கடற்கரைகள், நிசப்தம், புதிய காட்சிகள், ஓசைகள் . . . . .'' இப்படி ஹோட்டல் செரன்டிப்பின் விளம்பரம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மரகதக்கடல், நீல வானம், இதமும், ஒளியும் அள்ளி வீசும் மௌனம் உறங்கும் சொர்க்க பூமி'' என்கிறது ஹொலிடே ரிசோர்ட்ஸ் நிறுவனத்தின் விளம்பரம். ''எழில்கொஞ்சி விளையாடும் இங்கினியாகலை — வெளியுலகப் பரபரப்புக்களிலிருந்து விலகி, வெகு தொலைவுக்கு அப்பால் வேடுவரும், யானைகளும் சஞ்சாரம் செய்யும் வனந்திரத்தின் நடு மையத்தில் நிசப்தத்தில் துயில்கின்றது. அழகு தேவதையின் மடியில் அமர்ந்து கல்லோயா மௌன ராகங்களில் இனிய கானங்களை மீட்டுகின்றது.'' இது மேர்கன்டைல் டுவர்ஸ் விளம்பரம். ஒரு வானொலி விளம்பரம் இந்த சுலோகத்தினைப் பாவிக்கின்றது: ''சூரியனில் மிதக்கும் உங்கள் தீவு.'' மேற்குறித்த உதாரணங்கள் உள்ளூரில் கிடைக்கும் விளம்பரங்களிலிருந்து பெறப்பட்டவை. உள்ளூர் பயணிகளின் கற்பனையைத் தூண்டி, உணர்வுகளைச் சூ டி எழுப்புவதே அவற்றின் நோக்கமாகும்.

பயணிகளின் கற்பனை உந்துதல் அம்சம் பற்றி பொருளாதாரத் தகவல் பிரிவினால் 1972 ல் நடாத்தப்பட்ட ஓர் ஆய்வு, இக்காரணிகளை நிரூபித்துக் காட்டியது. நாட்டுக்குள் வரும் பயணிகளின் முக்கியமான அவா மகிழ்ச்சியைப் பெறுவதாகும். ''இந்தியாவைப் போலவோ தாய்லாந்தினைப் போலவோ இலங்கையின் கலாச்சாரக் கவர்ச்சிகள் அத்துணை தூரம் விலை போவதில்லை . . .'' எனவே. ''இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எழிலார்ந்த கடற்கரைகள், இயற்கைக் காட்சிகள், எளிதில் புரிந்து கொண்டு நட்புடன் பழகக்கூடிய உள்ளூர் மக்கள் போன்ற அம்சங்களிலேயே கூடிய நம்பிக்கை வைத்துள்ளனர்.'' பயணிகளின் விருப்புக்களைக் கேட்டறிந்து, அவற்றின் அடிப்படையில், பின்வரும் அம்சங்களை மையக் கருவாகக் கொணடு இலங்கையில் சுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்படுதல் வேண்டுமென இவ்வாய்வு சிபார்சு செய்கின்றது. ''உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கைக் காட்சிகள், வினோதமான பழக்க வழக்கங்கள், ப பாடு, வரலாற்றுப் புகழ் வாய்ந்த மண்டபங்கள், கோயில்கள் . . . . இவை யாவும் வனப்பும், வசீகரமும் ஒன்றுடனொன்று கொஞ்சி விளையாடும் இந்த வெப்பமான தீவுக்குச் சொந்தமானவை. இந்நாட்டு மக்கள் நட்புக்கு இனியவர்கள். கலாபூர்வமான உந்துதல் அவர்களது பிதுரார்ஜிதச் சொத்து. பல் வகைப்பட்ட கைவினைப் பொருட்களை இக் கலைஞர்கள் படைத்துத் தருகின்றார்கள். எங்கும் சாந்தி தவழ்கின்றது; அமைதி ஆட்சி செலுத்துகின்றது. வெப்பமூட்டும் சூரியன், களங்கமடையாத கடற்கரைகள், சகலரதும் சுவைகளுக்குப் பொருந்தக் கூடிய வகையிலான வித்தியாசமான ஹோட்டல்கள், வேடிக்கையும் குதூகலமும் தரும் மாலை நேரக் கேளிக்கைகள். இவை யாவற்றினதும் ஓர் அபூர்வமான கலவை — அதன் பெயர் தான் ஸ்ரீ லங்கா, வசீகரத்தீவு.''

''பிம்பத்துக்கு'' நிறையக் கேள்வி இருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை.

### சுற்றுலா ஊக்குவிப்பின் ஆரம்பம்

தற்பொழுது அங்கீகாரம் பெற்றிருக்கும் சுற்றுலாத்துறையானது, 1966 ம் ஆண்டுக்கு முன்னர் எவ்வகையிலும் விருத்தியடைந்திருக்கவில்லை. இக்காலம் வரையில் சுற்றுலாத்துறையை விருத்தி செய்யும் பிரதான தாபனமாக ஓர் அரசாங்க திணைக்களமாக இருந்த சுற்றுலா நிறுவனம் விளங்கியது. அக்காலத்தில் இத்துறையை, ஊக்குவிப்பதற்கான எந்த உடனடி அவசரமும் காணப்படவில்லை. 1960-65 காலத்தில் ஹோட்டல் பாடசாலை தாபிக்கப்பட்டதுடன் சுற்றுலா நிறுவனம் பிரதமரின் கீழ் கொ டுவரப்பட்டது. இக்காலப் பிரிவில் ஹிக்கடுவ வாடி வீடு விருத்தி செய்யப்

## வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம்

சுற்றுலாத்துறை ஓர் சேவைத் துறையாகவிருப்பதனால் (ஏனைய நவீன தயாரிப்புக் கைத்தொழில்களை விடவும்) கூடியளவு தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கக்கூடிய சக்தியுடையதாகும். சுற்றுலாத் துறை நேரடியாக சேவைத் துறையிலும் (உ-ம்: தங்குமிட நிர்மாணம், விடுதிகள்; பிரயாண, போக்குவரத்து முகவர்கள்; பொழுதுபோக்கு நிறுவனங்கள்; சுற்றுலா விற்பனை நிலையங்கள்; ஆகாயப் போக்குவரத்துக் காரியாலயங்கள் போன்றன) மறைமுகமாக வழங்கல் துறையிலும் தொழில்களைத் தோற்றுவிக்கின்றது. 1977 ம் ஆண்டின் இறுதியில் ஸ்ரீ லங்காவின் சுற்றுலாத் தொழில் துறையிலிருந்த தொழில் நிலை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | சேவைத் துறையில் நேரடித் தொழில்வாய்ப்பு .. | 13,716 |
| 2. | வழங்கல் துறையில் மறைமுகத்தொழில்வாய்ப்பு | 18,517 |
| | சுற்றுலாத் துறையில் மொத்த தொழில்வாய்ப்பு | 32,233 |

இத்தொகையை சுற்றுப்பயணிகளின் வருகையுடன் ஒப்பிடின், 1:4.8 என்ற விகிதாசாரமாக இது அமையும். அதாவது, ஒவ்வொரு ஐந்து சுற்றுப்பயணிகளதும் வருகை நாட்டில் ஒரு தொழில் வாய்ப்பினைத் தோற்றுவிக்கின்றது.

சுற்றுலாத் துறையின் தொழில்வாய்ப்பினை ஏற்படுத்தும் சக்தி தொடர்பான ஒரு கருத்தினைப் பெறுவதற்கு, இத்துறையின் மூலதனத் தொழில் விகிதாசாரத்தை ஏனைய நவீன துறைகளுடன் ஒப்பீடு செய்தல் வேண்டும். சுற்றுலாத் துறையில் ஒரு நேரடித் தொழில்வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கான முதலீடு ரூ. 43,000 ஆகும். நாட்டின் சில தெரிவு செய்யப்பட்ட தயாரிப்பு, பதனிடல் கைத்தொழில்களின் ஒப்பீட்டு ரீதியான புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன:

ஒரு தொழில் வாய்ப்பினைத் தோற்றுவிக்கும் துறை என்ற வகையில், பெரும்பாலான உற்பத்திக் கைத்தொழில்களுடன் ஒப்பிடுமிடத்து சுற்றுலாத் துறை சிறந்து விளங்குகின்றது.

1978 நவம்பர் 2 ம் திகதியன்று பண்டாரநாயகா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் சுற்றுலாத் துறை தொடர்பாக நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் திரு. எச். எம். எஸ். சமரநாயகா சமர்ப்பித்த ''சுற்றுலாத் துறையின் பொருளாதாரத் தாக்கங்கள்'' என்ற கட்டுரையிலிருந்து.

### ஒரு நேரடித்தொழில் அலகிற்கான முதலீடு

| | | ரூபா |
|---|---|---|
| 1. | சீமெந்துக் கூட்டுத்தாபனம் .. .. .. .. | 135,000 |
| 2. | கனி மணல் கூட்டுத்தாபனம் .. .. .. .. | 188,000 |
| 3. | இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் .. .. .. | 42,000 |
| 4. | இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் .. .. .. | 132,000 |
| 5. | உப்புக் கூட்டுத்தாபனம் .. .. .. .. | 47,000 |
| 6. | சீனிக் கூட்டுத்தாபனம் .. .. .. .. | 74,000 |
| 7. | மா ஆலைக் கூட்டுத்தாபனம் .. .. .. .. | 59,000 |
| 8. | ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் .. .. .. .. | 34,000 |
| 9. | இலங்கை தோல் தயாரிப்புக் கூட்டுத்தாபனம் .. .. | 25,000 |
| 10. | இலங்கை டயர் கூட்டுத்தாபனம் .. .. .. | 46,000 |
| | எல்லாக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களும் .. .. | 65,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. மேலும், இங்கு ஒரு ஹோட்டலை ஆரம்பிக்குமாறு, உலகெங்கணும் சங்கிலிக் கோவையாக ஹோட்டல்களை நடாத்தி வரும் ஹில்டன் நிறுவனத்துக்கு அழைப்பு விடுவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

எவ்வாறிருப்பினும், 1965-1970 காலப் பிரிவிலேயே சுற்றுலாத்துறை விருத்தியில் சில நிறுவன ரீதியான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. 1966 ல் ஒரு பாராளுமன்றச் சட்டத்தின் மூலம், கொள்கை வகுப்பு நிலையமாக சுற்றுலாச்சபை தாபிக்கப்பட்டது; மேலும், ஹோட்டல் கூட்டுத்தாபனமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வாண்டில் நடைபெற்ற பிரதான ஊக்குவிப்பு நடவடிக்கை யாதெனில், சுற்றுலாத்துறையின் சாத்தியப்பாட்டினை ஆராய்ந்து பத்தாண்டு அபிவிருத்தித் திட்டமொன்றை வகுப்பதற்காக பல நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பை இலங்கை வாடகைக்கு அமர்த்தியமையாகும். இதற்கு அமெரிக்க உதவி கிடைத்தது. இக்குழு தீவில் சுமார் மூன்று நான்கு மாதகாலம் தங்கியிருந்து ஓர் அறிக்கையைத் தயார் செய்தது. அன்றிலிருந்து இன்று வரை நமது நாட்டில் சுற்றுலாத்துறை விஸ்தரிப்பு அந்த அறிக்கையின் உள்ளடக்கங்களுக்கு அமையவே நடைபெற்று வருகின்றது.

தொழில் நுட்ப ரீதியான இந்த அறிக்கையை அக்கால அதிகாரிகள் (பின்னர் வந்தவர்களும் கூட) முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பது இங்கு அவதானிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய விஷயமாகும். குறித்த நிறுவனம் தயாளித்தளித்த சுற்றுலா அமைப்பு குறித்த நகலினை, அதன் தாக்கங்கள், எதிர் விளைவுகள், பொருத்தமின்மைகள் என்பன குறித்து எந்தக் கரிசனையும் செலுத்தாது அதிகாரிகள் ஏற்றுக்கொண்டு விட்டனர். சுற்றுலாத்துறை குறித்த பத்தாண்டுத்திட்டம் 1967 ல் தயாரித்தளிக்கப்பட்டதை யடுத்து, அடுத்து வந்த வருடங்களில் அத்திட்டம் (கால எல்லையில் இரண்டு வருடம் பிந்தியது தவிர) சகல அம்சங்களிலும் மிகவும் விசுவாசமாக பேணப்பட்டு வந்தது. 1970 ல் ஏற்பட்ட அரசாங்க மாற்றம், 1971 ல் ஏற்பட்ட கிளர்ச்சி என்பவற்றின் பின்னணியில் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையில் சற்றுத் தாமதம் ஏற்பட்டது தவிர்க்க முடியாததாக இருந்தது. இக்கால கட்டத்தில் சுற்றுலாத்துறையின் ''பிம்பத்தில் வீழ்ச்சி'' ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது; இருப்பினும், 1972 ன் தேசிய அபிவிருத்தி ஐந்தாண்டுத் திட்டம், நாம் மேலே குறிப்பிட்ட சுற்றுலாத் திட்டத்தின் அடிப்படையையும் உள்ளடக்கமாகக் கொண்டிருந்தது.

இந்த ஹரிஸ் - கெர் திட்டம் நாட்டை ஐந்து சுற்றுலா வாசஸ்தலப் பிராந்தியங்களாக வகுத்திருந்தது. அவையாவன:

(1) கொழும்பு வாசஸ்தலப் பிராந்தியம். நீர்கொழும்பிலிருந்து கல்கிசை வரை. (கவர்ச்சி அம்சங்கள் — நகரமும், கடற்கரைகளும்)

(2) தென் கரை வாசஸ்தலப்பிராந்தியம். பெந்தொட்டையிலிருந்து யால வரை (கவர்ச்சி அம்சங்கள் — கடற்கரைகள்)

(3) கிழக்குக்கரை வாசஸ்தலப்பிராந்தியம். திருகோணமலையிலிருந்து பாசிக்குடா வரை. (கவர்ச்சி அம்சங்கள் — கடற்கரைகள்)

(4) புராதன நகரங்கள் பிராந்தியம். அநுராதபுரம், கண்டி, பொலனறுவை. (கவர்ச்சி — வரலாறு)

(5) மலைநாட்டுப் பிராந்தியம் (கவர்ச்சி அம்சங்கள் — இயற்கைக் காட்சிகள், தேயிலைத் தோட்டங்கள்)

வட பிராந்தியத்தையும் இதனுள் சேர்த்துக்கொண்டதைத் தவிர, மற்ற சகல வகைகளிலும் சுற்றுலாச்சபை இப்பிரிவினைப் பேணி வருகின்றது. வட பிராந்தியம் அப்போது மிகக் குறைந்தளவான பயணிகளையே கவரக்கூடியதாக இருந்தது.

1984 ம் ஆண்டளவில் நாட்டுக்குள் 460,800 பயணிகள் வருவார்களென 1978 ன் சுற்றுலாக் கமிட்டி மதிப்பீடு செய்தது. 1978 ல் இங்கு வந்த பயணிகள் தொகை 192,000 ஆகும். இக்கைத்தொழிலின் வருடாந்த வளர்ச்சி வீதம் தொடர்ந்தும் நிலையானதாக இருந்து வந்துள்ளது. நெருக்கடி நிலவிய வருடங்களிலும் கூட தென்னாசியப் பிராந்திய நாடுகள் இத்துறையில் தொடர்ந்த வளர்ச்சிகளைப் பதிவு செய்திருக்கின்றன. கடந்த 11 வருட காலத்தில் இலங்கை 21 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்திருக்கின்றது.

1966 க்கும் 1978 க்கும் இடையில் சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட அபிவிருத்தியை ஹோட்டல் அறைகளின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பிலிருந்தும் காண முடியும். 1966 ல் நாடெங்கிலுமிருந்த ஹோட்டல் அறைகளின் தொகை 770 ஆக இருந்தது. ஆனால், அடுத்து வந்த பன்னிரண்டு வருடங்களில் இத்தொகை 4,846 ஆக — அதாவது ஆறு மடங்காக — அதிகரித்ததனை அடுத்த பக்கத்திலிருக்கும் காட்டுகின்றது. 1984 ல் எதிர்பார்க்கப்படும் 4,70,000 பயணிகளுக்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு 10,856 அறைகள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது; அதாவது, 6000 அறைகள் மேலதிகமாக அமைக்கப்படுதல் வேண்டும்.

1975 வரை இக் கைத்தொழிலில் இடப்பட்ட மொத்த மூலதனம் ரூ. 40 கோடி என மதிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும், இக்காலம் வரையிலும் இத்துறைக்காக மேற்கொள்ளப்பட்ட சமூக பொது முதலீட்டுச் செலவுகள் ரூ. 20 கோடியாகும்; எனவே, இத்துறைக்கான மொத்தச் செலவீடு ரூ. 60 கோடியாகும். இத்தரவுகளின் பிரகாரம், ஒரு பயணிக்காக சுமார் 5000 ரூபா வரையில் செலவு செய்யப்பட்டிருப்பதனைக் கணிக்க முடிகின்றது. எனவே, 1985 ம் ஆண்டின் இலக்கான 5,00,000 பயணிகளுக்காக முழுக் கைத்தொழிலுக்கும் தேவைப்படும் மொத்த முதலீடு ரூ. 250 கோடியாகும். இத்தொகை துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்ட முதலீட்டின் சுமார் கால் பங்காகும்.

### அன்னியச் செலாவணி வருமானம்

1967-1977 வரையான காலத்தில் இக் கைத்தொழிலிருந்து பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுச் செலாவணி ரூ. 106.3 கோடியாகும்; இதில் கிடைத்த மிகை ரூ. 83 கோடியாகும். 1977 ல் மட்டும் அன்னியச் செலாவணிச் சம்பாத்தியம் 30.4 கோடி ரூபாவாக இருக்குமென சுற்றுலாச் சபை மதிப்பிட்டிருக்கின்றது. இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகள், இரத்தினக்கல் கடத்தல் போன்ற வழிகளில் வெளியே செல்லும் அன்னியச் செலாவணித் தொகை கணக்கிலெடுக்கப்படாததால் இப்புள்ளி விவரங்கள் சற்று மிகைப்படுத்தப்பட்டவை என சிலர் கருதுகின்றனர். மேலும், இக்காலப் பகுதியில் இலங்கை ரூபாவில் ஏற்பட்ட தளம்பல்களும் கணக்கில் எடுக்கப்படவில்லை.

சுற்றுலாத்துறை அதி வேகமாக வளர்ச்சியடைந்து வந்த போதும் மொத்த தேசிய உற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹோட்டல் அறைகள்**

| | 1966 | 1978 |
|---|---|---|
| கொழும்பு நகரம் | 227 | 1310 |
| மா கொழும்பு வாசஸ்தல பிராந்தியம் | 110 | 974 |
| தென்கரை வாசஸ்தலப் பிராந்தியம் | 89 | 1158 |
| கிழக்குக்கரைப் பிராந்தியம் | 23 | 320 |
| மலை நாடு | 151 | 195 |
| புராதன நகர்கள் | 139 | 506 |
| வட பிராந்தியமும் ஏனையவையும் | 31 | 57 |
| கண்டி | — | 326 |
| | 770 | 4846 |

பத்திக்கான அதன் பங்களிப்பு மிகக் குறைவாகவே – அதாவது .07 வீதமாகவே — இருந்து வந்துள்ளது. எவ்வாறிருப்பினும், 1972 ம் ஆண்டு 0.23 சதவீதமாக இருந்து வந்த அதன் பங்களிப்பு, 1977 ல் 0.71 வீதமாக அதிகரித்திருப்பதனை சுற்றுலாச் சபை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இக் கைத்தொழிலை மதிப்பீடு செய்யும் பிறிதொரு அளவுகோல் தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கமாகும். சுற்றுலாச்சபையின் புள்ளிவிபரப்படி 1977 ம் ஆண்டின் முடிவில் சுமார் 32 ஆயிரம் பேர் இத்துறையில் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இவர்களில் 13.7 சதவீதத்தினர் நேரடியாகவும், 18.5 சதவீதத்தினர் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றிருந்தனர். சுற்றுலாத்துறையின் நேரடித் தொழில் வாய்ப்பொன்றை உருவாக்குவதற்கான செலவு சுமார் 43000 ரூபாவாகுமென சபை மதிப்பிட்டுள்ளது. எனினும் இது உருவாக்கப்படும் தொழில் வகையைப் பொறுத்து வித்தியாசப்பட்டுச் செல்லும். 1973 அளவில் ஒவ்வொரு அறையிலும் ஒருவர் அல்லது இருவர் தொழிலில் அமர்த்தப்பட்டிருப்பார்கள் என சுற்றுலாத் திட்டம் எதிர்பார்த்தது. ஆனால், ஒபரோய் போன்ற ஹோட்டல்களில் ஓர் அறைக்கு (1975 ன் ரூபா பெறுமதியில்) சுமார் 300,000 ரூபா வரை செலவாகியுள்ளது. எனவே, இங்கு ஒரு தொழில் வாய்ப்பினை உருவாக்குவதற்கான செலவு 100,000 - 150,000 ரூபா வரையில் இருக்கின்றது. ஆனால், சில சிறிய ஹோட்டல்களைப் பொறுத்த வரையில் இத்தொகை குறைவாக இருக்கும். சுற்றுலாக் கைத்தொழில், தொழில் செறிவுமிக்க தொன்றாக கருதப்பட்ட போதிலும் சார்பு ரீதியாக அது மூலதனச் செறிவுமிக்கதாகவும் இருப்பதனை பின்வரும் தரவுகள் காட்டுகின்றன. இலங்கையில் பாரிய கைத்தொழில்களில் ஒரு தொழில் வாய்ப்பினை உருவாக்குவதற்கு சுமார் 50,000 ரூபா வரையில் தேவைப்படுகின்றது. சிறியளவிலான கைத்தொழில்களில் இதற்கு 250 - 2500 ரூபா வரையிலேயே தேவைப்படுகின்றது.

முதலீடு, அறை விஸ்தரிப்பு, தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் என்பன குறித்த சில தரவுகளை தாம் மேலே காட்டினோம். எனினும், இக் கைத்தொழில் குறித்த ஒரு தெளிவான படத்தைப் பெறவேண்டுமாயின், உலகளாவிய ரீதியில் வைத்து நமது நாட்டின் சுற்றுலாப் பொருளாதாரத்தை அணுகுதல் அவசியமாகும்.

சுற்றுலாத்துறையின் ஒன்றுடன் ஒன்று தொடர்பான சங்கிலிக்கோவை போன்ற பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள், இலங்கையை சுற்றுலா தோற்றம் பெறும் நாடுகளுடன் தொடர்புபடுத்துகின்றன. இரண்டாவதாகக் கூறப்பட்ட நாடுகளில் முதல் நடவடிக்கையாக பயணி தனது பயணத்தை ஆரம்பிக்கின்றார்; அடுத்த அங்கம் பயணத்தை ஏற்பாடு செய்யும் நிறுவனமாகும்; அடுத்து, பயணிகளை ஏற்றி வரும் வானூர்தி தாபனம், இலங்கையில் அவர்களைக் கவனித்துக் கொள்ளும் முகவராண்மை, அவர்கள் தங்கும் ஹோட்டல்கள் என்பன ஏனைய அங்கங்களாகும். பயணிகளின் தாய் நாட்டில் அவர்கள் சென்றடையும் நாட்டின் ''வினோதமான பிம்பம்'' எவ்வாறு விளம்பரப்படுத்தப்படுகின்றது என்பதை நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம்.

வெளிநாட்டு சுற்றுலா நிறுவனங்கள் பயணிகளின் ஏற்பாடுகள் குறித்து உள்ளூர் முகவராண்மைகளுடனும், ஹோட்டல்களுடனும் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றன. இச்சுற்றுலா நிறுவனங்கள் யாவும் மேற்கைரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல்தேசிய நிறுவனங்களாகும்; இவை ஏனைய பல்தேசிய நிறுவனங்களைப் போலவே மூன்றாவது மண்டல நாடுகளில் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. எனவே, இலங்கைச் சுற்றுலாக் கைத்தொழிலின் வெற்றியும், தோல்வியும் பெருமளவில் இந்நிறுவனங்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றன; ஏனெனில், இந்நிறுவனங்களே மேற்கைரோப்பிய நாடுகளில் பயணிகளைத் திரட்டி வருகின்றன. இலங்கை, ஒரு நீண்ட சங்கிலிக்கோவையின் இறுதி முனையாகவே இருந்து வருகின்றது. ஏனைய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள், இந்நிறுவனங்கள் முகவர் நிலையங்களையும், ஹோட்டல்களையும் குறைந்த கட்டணங்களை அறவிடுமாறு நிர்ப்பந்தித்து வந்திருப்பதனைச் சுட்டிக் காட்டியுள்ளன. எனவே, ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுலாக்களைப் பொறுத்தவரையில், அவை இலங்கையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாகவே இருக்கின்றன. அதாவது, பல்தேசிய நிறுவனங்களின் கெடுபிடிகளுக்கேற்ப செழிப்பும் மந்தமும் அடையும் தேயிலையின் நிலையைப் போலவே சுற்றுலாக் கைத்தொழிலின் நிலையும் இருக்கின்றது. இந்தக் கெடுபிடிகளுக்கான ஒரு சிறந்த உதாரணத்தை டியுனீசியாவிலிருந்து காட்ட முடியும்; இங்கு, நிக்கர்மான் நிறுவனம் 1973 ல் தனது இலாப எல்லைகளை அதிகரிக்கும் நோக்கில் சில கட்டணங்களை உயர்த்த விரும்பியது. ஆனால், டியுனீசிய அதிகாரிகள் இதனை ஏற்க மறுத்தனர். இறுதி விளைவாக, இந்த நிறுவனம் டியுனீசியாவுக்கு 1972 ல் 60,000 பயணிகளை அனுப்பியதற்குப் பதிலாக 1973 ல் 12,000 பயணிகளையே அனுப்பி வைத்தது.

மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த ஓர் ஆய்வாளர் இலங்கையில் சுற்றுலாத்துறை பற்றிய ஓர் ஆய்வை மேற்கொண்டார். இவ்வாய்வின் பிரகாரம், 1972 ல் பயணிகள் இங்கு 17.3 கோடி ரூபாவை செலவு செய்திருக்கின்றார்கள்; இதில் 8 கோடி ரூபாவே (40%) இலங்கைக்குக் கிடைத்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் தோற்றம் பெற்ற நாடுகளுக்கு மிகுதி 9.3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி ரூபாவும் (54%) சென்றிருக்கின்றது. சுற்றுலாத்துறைக்காக நேரடியாக அல்லது மறைமுகமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கும், சேவைகளுக்குமான கழிவுகளைச் சேர்த்துப் பார்க்கும் போது இலங்கையின் பங்கு 46 சதவீதத்திலிருந்து 23 சதவீதமாக மேலும் குறைவடைகின்றது என அவர் கூறுகின்றார். ''இலங்கையில் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியால் உண்மையில் நலன் பெறுவோர் பயணிகளை அனுப்பும் முதலாளித்துவ அரசுகளே'' என அவர் மேலும் குறிப்பிடுகின்றார். ''இப்பங்கீட்டினைத் தனது பக்கத்துக்கு சாதகமாக்கிக் கொள்ளும் வாய்ப்பு உடனடி எதிர்காலத்தில் இலங்கைக்கு கிட்டப் போவதில்லை.'' ''தற்போதைய நிலைமைகளின் கீழ் இலங்கை பெறக் கூடிய சாத்தியமான உச்சமட்ட இலாபத்தினை தற்போதைய கொள்கையின் கீழ் அது ஏற்கனவே பெற்றுவிட்டது'' என அவர் முடிவுரை வழங்குகின்றார்.

இலங்கையின் வானூர்தி நிறுவனம் ஐரோப்பாவிலிருந்து (ஏற்கனவே) செலுத்தி ஒதுக்கப்பட்ட ஒரு பயணத்தைத்தானும் மேற்கொள்வதில்லை. எனவே, இலங்கைச் சுற்றுலாக் கைத்தொழிலின் பொது அமைப்பு மாதிரி முன்னைய தேயிலைக் கைத்தொழிலின் இயக்கத்தினை ஒத்ததாகவே இருக்கின்றது. அதாவது, இலங்கை பிறிதொரு நாட்டுடன் (தவிர்க்கமுடியாத வகையில்) ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றது.

''தாய் நாடுகளில்'' இயங்கும் சுற்றுலா நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களை ஒரு நாட்டிலிருந்து தாம் விரும்பும் பிறிதொரு நாட்டுக்கு திருப்பிவிடும் ஆற்றல் பெற்றவை. எனவே, ''பொருத்தமான'' சுற்றுலாப் பின்னணியை மிகக் கவனமாக பேணிக் காப்பது அதிமுக்கியமான ஒரு விஷயமாகும். அதாவது, நாம் ஏற்கனவே குறிப்பிட்ட ''பிம்பத்துக்கு'' பழுதும், பங்கமும் நிகழ்ந்து விடாது பார்த்துக்கொள்வது இலங்கை போன்ற ''பெற்றுக் கொள்ளும் அந்கத்தில்'' இருக்கும் நாடுகளின் கடமையாகும். எனவே, சுற்றுலா ஹோட்டல்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பயணிகளுக்கு காவல் படையினர் துணை செய்தல், சுற்றுலாப் பொலீஸ் நிலையம் போன்ற இன்னோரன்ன அம்சங்கள் இந்த ''பிம்பத்தை''ப் பாதுகாப்பதற்கான சில முயற்சிகளாகும்.

மீண்டும் ஒருமுறை தேயிலைக் கைத்தொழிலையும் சுற்றுலாக் கைத்தொழிலையும் ஒப்பிட்டுப் பார்த்தல் பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில், இவ்விரு துறைகளும் மேலைத்தேய நாடுகளுடன் செங்குத்தாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. தேயிலைத் தொழிலின் ஆரோக்கியமான வளர்ச்சி, எமது ஏற்றுமதிகளை மேல் நாடுகளில் கையாளும் நிறுவனங்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது. எனவே, விலை ஸ்திரமும், பேரம் பேசும் ஆற்றலும் வெகு குறைவாகவே இருக்கின்றது. இருப்பினும், இந்தப் பலவீனங்களுக்கு மத்தியிலும் தேயிலைக் கைத்தொழிலுக்கு சில அனுகூலங்களும் உண்டு. தேயிலையின் சுவையும், சந்தையும் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக படிப்படியாக வளர்க்கப்பட்டு வந்ததாகும்; தேயிலை அருந்துபவர்களை சடுதியாக கோப்பி அருந்துமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுக்க முடியாது. எனவே, தேயிலையின் பொருளாதார ஸ்திரம் இலகுவில் ஆட்டங் காணும் வாய்

( 11ம் பக்கம் பார்க்க )

**சாதகமான செலாவணி மாற்று வீதங்களின் பின்னணியில் . . . .**

வெளிநாட்டுச் செலாவணி மாற்று விகிதாசார அசைவின் சமூக, பொருளாதார பாதிப்புக்கள் பற்றி அடிக்கடி வற்புறுத்தப்படுகின்றது. சென்ற வருடம் ஆகஸ்ட் மாதத்தில், இந் நிலையின் பாதகமான விளைவுகளைச் சுற்றுலாத் துறையுடன் தொடர்புபடுத்தி ஒரு பொருளியலாளர் பரிசீலனை செய்தார்.

''வாய்ப்பான நாணய மாற்று விகிதாசாரமே பெருமளவிலான சுற்றுப்பயணிகளை நாட்டுக்குள் வர உதவியது என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. 1967 நவம்பர் மாதத்திலிருந்த எமது நாணய மாற்று விகிதாசாரம் சுற்றுப்பயணிகளுக்குச் சார்பாக மாறியது. அதிகளவிலான சுற்றுப்பயணிகளைக் கவரும் வகையில், மேலும் நாணய மதிப்பிறக்கம் செய்யுமாறு அனேகர் கோரினர். எமது நாணயமாற்று விகிதாசாரத்தினூடாக சுற்றுப்பயணிகளுக்கு பெருமளவு மானியம் வழங்குகின்ற அதே வேளை, வெளிநாட்டில் பயணம் செய்கின்ற ஓர் இலங்கைப் பிரஜை அதிகரித்த தொகையைச் செலுத்த வண்டியுள்ளது. அண்மையில் நான் வெளிநாடு சென்றிருந்த போது மூன்றாந்தர ஹோட்டல்களில் தங்கியதுடன், அதிகரித்த கட்டணத்தையும் செலுத்த வேண்டியிருந்தது. நான் நெதர்லாந்திலுள்ள ஹேக் நகரிற்குச் சென்றிருந்த போது என்னை அழைத்தவர்கள் இணைந்த குளியலறை வசதியற்ற ஒரு மூன்றாம் தர அறைக்கு 50 டொலர் — அதாவது 100 கில்டர்கள் — செலுத்தினர். 100 கில்டர்களுடன் ஸ்ரீ லங்காவிற்கு வருகின்ற ஒரு டச்சுப் பிரஜை, எமது முதல்தர ஹோட்டலொன்றில் நல்ல வசதியுடன் தங்கி 3-4 தினங்களை இங்கு கழிக்கலாம். நெதர்லாந்தில் வேலையற்றோருக்கு வழங்கப்படுகின்ற உதவிப் படி 1400 கில்டர்கள் அல்லது 700 டொலர்களாகும்; இது இந்நாட்டின் குறைந்தமட்ட வேதனத்தை விட சிறிது குறைவானதாகும். வேலை செய்யாது உதவிப் படியுடன் ஸ்ரீ லங்காவிற்கு வந்து ஒரு மாதத்தை இங்கு கழிப்பதுடன் பணத்தில் அரைவாசியைச் சேமிப்பது ஒரு டச்சுப் பிரஜைக்கு இலாபகரமானதாகும். இதே வேளை, இப் பிரஜை இந்த உதவிப் படியுடன் நெதர்லாந்தில் கூலிக்கு வீடொன்றினைப் பெற முடியாத, வழிப்போக்கனைப் போன்றிருப்பான். தான் முதல்தர ஹோட்டலொன்றில் தங்கி, ஸ்ரீ லங்காவில் இரண்டு வாரங்களை மகிழ்ச்சியுடன் கழித்ததாக ஒரு டாக்ஸிச் சாரதி, சென்ற வாரம் நான் பாரிஸ் நகரிற்குச் சென்றிருந்த போது என்னிடம் கூறினார். அவர்கள் இங்கு வரக் கூடாது என நான் கூறவில்லை. ஆனால், எந்த அளவிற்கு நாம் சுற்றுப் பயணிகளுக்கு மானியம் வழங்குகின்றோம் என்பதனையும், எமது நாட்டில் வாழ்க்கைச் செலவு எவ்வளவு மலிவாக உள்ளது என்பதனையும் இவ்வுதாரணங்கள் காட்டுகின்றன. உலகில் மிகக் குறைந்த செலவுடன் வாழக் கூடிய நாடு இலங்கை என்பதனைக் காட்டும் வகையில் நான் கட்டுரையொன்றும் எழுதியுள்ளேன். வாய்ப்பான நாணய மாற்று விகிதாசாரம் காரணமாக சுற்றுப் பயணிகளிற்கு இது இலாபகரமானதாக இருப்பதுடன், ரூபாய்ப் பெறுமானத்தில் ஏற்படுகின்ற ஒவ்வொரு வீழ்ச்சியும் அதனை மென்மேலும் மலிவானதாக்குகின்றது. இங்கு வசதியுடன் வாழ முடிவதுடன், உதவிப் படியின் அரைவாசியைச் சேமிக்கக் கூடியதாகவிருப்பதனால், வட ஐரோப்பாவிலுள்ள தொழிலற்ற அனைவரும் அதி விரைவில் எமது நாட்டிற்கு வருவர். குழுவாக வருகின்ற சுற்றுப் பயணிகளுக்கு பாரிய ஹோட்டல்களில் விசேட கழிவு கொடுக்கப்படுவதாக நான் கருதுகின்றேன்; சில சமயங்களில் இது 30 சதவீதமாகவிருப்பதுடன், வெளிநாட்டுச் செலாவணியில் நட்டத்தையும் ஏற்படுத்துகின்றது. மேலும், இது மலிந்த வாழ்விடமாக ஸ்ரீ லங்காவை மாற்றுவதுடன், இத்துடன் இணைந்த வகையில் மானியமும் அதிகரிக்கின்றது. குழுக்களுடன் வருகின்ற சுற்றுப்பயணிகள் குறைந்த அளவு செலவு செய்வதுடன், குறைந்த தொகைப் பணத்தை தம்முடன் எடுத்து வருகின்றனர். சுருங்கக் கூறின், வறிய ஐரோப்பியர்கள் ஸ்ரீ லங்காவில் சுகபோகத்துடன் வாழலாம்; ஆனால், பணக்கார இலங்கைப் பிரஜைகள் வெளிநாட்டில் பிச்சைக்காரர்களாக வாழ வேண்டும். நாம் எமது சுற்றுலாத் தொழிலை ஒழுங்கு படுத்தியுள்ள முறை இதுவாகும்.''

'' ஸ்ரீ லங்காவின் சமூக, அரசியல் அபிவிருத்தியில் சுற்றுலாத்துறையின் பங்கு'' எனும் தலைப்பில் 1978 ஆகஸ்ட் 12ம்திகதியன்று நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் கலாநிதி எச். என். எஸ். கருணாதிலகா.

## உள்நாட்டுச் சிறுவரும் வெளிநாட்டுப் பயணிகளும்

ஒரு வெளிநாட்டு இளைஞன் சூரிய அஸ்தமனக் காட்சியைப் படம் பிடிப்பதற்கு, பேருவளைக்கு அண்மையிலுள்ள ஓரிடத்தில் காரை விட்டு இறங்கினன். அவன் பாதையிலிருந்து ஒரு சில டிகளை எடுத்து வைத்ததும், ''பிச்சை! பிச்சை!'' ''ஐந்து ரூபா! பத்து ரூபா'' என்று கைகளை நீட்டிக் கொண்டு குரலெழுப்பிய வண்ணம் வந்த சிறுவர் குழு அவனைச் சூழ்ந்து கொண்டது.

வெறுப்புடன், விரைவாகப் பின்வாங்கிய வனை சிறுவர் கும்பல். வாகனம் வரைக்கும் துரத்திக்கொண்டு வந்தது. எமது நாட்டில் திரும்பத் திரும்ப இடம் பெறுகின்ற வெறுக்கத்தக்க இக் காட்சிகள், சுற்றுலாத் துறையின் மறைமுக விளைவுகளுள் ஒன்ருகும்.

ஒரு தடவை நான் எனது அமெரிக்க நண்பர்கள் சிலரை மலை நாட்டிற்கு ைழைத்துச் சென்றேன். நாம் வாகனத்தை நிறுத்தி, புற்றரையில் இறங்கப் பார்த்த போது, ''பணம்! பணம்!''.என்ற சத்தத்துடன், தமது கைகளை நண்பர்களின் முகத்திற்கு நீட்டிய வண்ணம் சில சிறுவர்கள் அங்கு பிரசன்னமாயினர்.

அரசாங்கமும், சுயாதீன தாபனங்களும் பிச்சைக்காரச் சிறுவர் பிரச்சினை தொடர்பாக கூடிய அக்கறை செலுத்துகின்ற இதே வேளை, ஸ்ரீ லங்கா பெண்கள் சட்டவியலாளர் சங்கத்தினுல் இது பற்றி ஒரு கருத்தரங்கு நடாத்தப்பட்டது. மிக அண்மைக் காலத்தில், சுற்றுப் பயணிகளையும், வெளிநாட்டவர்களையும் கண்டவுடன் பிச்சைக்காரர்களாக மாறும் சிறுவர்களின் இப் பழக்கம் தொடர்பாக சிலர் இக் கருத்தரங்கில் அச்சம் தெரிவித்தனர்.

கடந்த நான்கு மாத காலமாக இந் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்ற ஓர் ஆங்கிலேயரிடம், எமது நாடு தொடர்பாக அவரது கருத்தினை வினவிய போது, ''நல்லதும் கெட்டதுமா?'' என அவர் கேட்டார். ''குறிப்பாக கெட்டவை'' என நான் கூறினேன்.

அவரது உடனடியான பதில், எல்லா இடங்களிலும் சந்தித்த சாதாரண பாடசாலைச் சிறுவர்கள் நிலை அவரைக் கவலைக்குள்ளாக்கியது என்பதாகும். அவர்கள் 'போல் பொய்ன்ட்' பேனுக்கள், புத்தகம், பணம் போன்ற எல்லாவற்றையும் கேட்கின்றனர். ''மேலும், அவர்கள் முரட்டுத்தனமுடையவர்களும்தான்'' ''உண்மையில் நான் வர்களது மொழியைப் புரிந்துகொள்ளவில்லை. அவர்களது குரல், பேசுகின்ற தொனி ஆகிய யாவும் கவலை தருவதாக இருக்கின்றது.'' ''காலிக் கோட்டை, கண்டி வாவி, தேவேந்திர வெளிச்ச வீடு ஆகிய இடங்களில் பாடசாலைச் சிறுவர்களின் தொந்தரவிலிருந்து விடுதலை பெற்று நிற்க என்னுல் முடியாது என்பதனை நான் கண்டேன்.''

சோகமான இக்கதையை நான் மறு தினம் எனது நண்பர்களிடம் கூறிய போது, கொழும்பிலுள்ள பிரதானமான ஆண்கள் பாடசாலையொன்றின் ஆசிரியர் அவரது அனுபவத்தைக் கூறினுர். அப் பாடசாலைக்கு ஒரு வெளிநாட்டவர் வந்த போது, ஒரு கட்டு 'போல் பொய்ன்ட்' பேனுக்களை அவரிடம் கொடுத்து, அவற்றை வேண்டி நின்ற சிறுவர்களிடையே பங்கிடுமாறு வேண்டியுள்ளார்.

''நான் மிகவும் வெட்கப்பட்டேன்' எனக் கூறிய ஆசிரியர், ''ஏன் இவ்வாறு செய்தீர்கள்'' என அவரது மாணவர்களை வினவியபோது, ''அது எமக்குரிய வெளிநாட்டு உதவி ஸார்'' என ஒரு மாணவன் உடனடியாகப் பதில் கூறினுன்.

எமது நாட்டுப் பிரஜையொருவரை மணம் புரிந்து இங்கு வாழும் ஓர் ஆங்கில மாது, சில ஆங்கிலேயர்களுடன் நாட்டைச் சுற்றச் சென்றபோது பெற்ற அண்மைக்கால அனுபவத்தைக் கூறினுர். ''ஏதாவது ஓரிடத்தில் நாம் வாகனத்தை நிறுத்தியவுடன், அதன் யன்னல்களை மூடக் கற்றுக் கொண்டோம்.''

''அஸ்கிரியவில், சுற்றுப் பயணிகள் நிறையவிருந்த வண்டி யொன்று, துவாய் போன்ற பொருட்களை வேண்டிய சிறுவர்களினுலும், வாலிபர்களினுலும் சூழப் பட்டிருந்தது. ஓரிடத்தில் நாம் வாகனத்தை நிறுத்திய போது, வழமையான இளைஞர் கூட்டம் எம்மைச் சூழ வந்தது.''

''எனக்குச் சிங்களம் தெரியுமென்பதனை அவர்கள் அறிந்திருக்க முடியாது. ''இவர்கள் யாரொன்று ரூ. 7.50 பெறுமதியான கூட்டுறவுக் கடைத் துணியினுல் ஆடை அணிந்துள்ளனர்; ஆகையால் இவர்களிடமிருந்து அதிகம் எதி பார்க்கவியலாது'' என அவர்கள் கூறுவதனை நான் கேட்டேன்'' என அம் மாது தனது னுபவங்களை விபரித்தார்.

சுற்றுப் பயணிகளிடம் பிச்சை கேட்பது இலாபகரமானதாகையால், ''பாடசாலைக்கு 'முழுக்குப்'போட்டுவிட்டு, பகற் பொழுதினை கடற்கரையில் கழிப்பதற்கு உள்ளூர்க் கிராமவாசிகள் தமது குழந்தைகளை ஊக்குவிக்கின்றனர்'' என பேருவளையிலுள்ள ஹோட்டல் உரிமையாளர் ஒருவர் எம்மிடம் கூறினுர்.

''சிறுவர் களிடையே நற்பயன் நோக்கினை ஏற்படுத்தல்'' என்ற அம்சம் விரைவில் பாராளுமன்றத்தில் சமாப்பிக்கபடவுள்ள, சிறுவர் பட்டயத்தில் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள பிரதான நோக்கங்களுள் ஒன்ருகும்.

சுற்றுலாத் துறையின் விளைவாக இருபது வருடங்களுக்கு முன்னர் அறவே இல்லாதிருந்த மிகவும் மோசமான ஒரு போக்கு வளர்ச்சியடைந்துள்ளது. எமது சிறு ர்கள் அவர்களது தன்மானம், மதிப்பு, கம்பீரம் என்பவற்றை மீண்டும் பெறும் வகையில், நாம் எம்மிடமுள்ள எல்லாச் சக்திகளையும் ஒன்று திரட்டி இதற்கெதிராகப் போராட வேண்டும். இல்லாவிடில் பண்டைய கலாச்சாரம், பாரிய மரபுரிமை, தார்மீக சமுதாயம் என்பன பற்றிய பேச்சுக்கள் வெறுமனே பயனற்றுப்போய்விடும்.

**ஆன், 1979 மார்ச் 28ந் தேதிய 'போகஸ்' இதழில்.**

### பிச்சைக்காரர்களின் பிரச்சினைகள்

சமூகப் பிரச்சினை தொடர்பான ஆய்வில் முதலாவதாக நான் ''பிச்சையெடுத்தல்'' எனும் விடயம் பற்றி ஆராய்கிறேன்.

நம் நாட்டில் அதிகரித்து வருகின்ற பிரச்சினைகளுள் பிச்சையெடுத்தலுமொன்ருகும். சிறுவர் பிச்சை யெடுத்தல் ஒரு புதிய கடுந்துயர் தரக்கூடிய அம்சமாக மாறியுளளது. நாட்டிற்குள்ளாக இருக்கும் சுற்றுலா இடங்களில் ஒழுங்குபடுத்தப்பட்ட பிச்சையெடுப்பு அபரிமிதமாக நடைபெறுகின்றது. புறக் கோட்டையிலிருந்து நுவரெலியா வரையிலுமுள்ள பட்டினப் பிரதேசங்களில் இது நடந்து வருகின்றது. ஆனுல், சுற்றுலாத் துறையையும், தன் போஷகர்களையும் நேர்முகமாகக் குற்றஞ்சாட்டுவது நியாயமானதா? எமது சமூகததின் இந்த அபாக்கியசாலிகளைப் புனருத்தாரணஞ் செய்யாமைக்கு நாம் உல்லாசப் பயணிகள் சபையைக் குற்றஞ்சாட்ட முடியுமா?

கௌரவ அமைச்சர் அவர்களே!

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் —அதாவது 1966 மே 3 ம் திகதியன்று— ஆரம்பிக்கப்பட்ட சுற்றுலாச் சபையின் ஆரம்பகர்த்தாக்களுள் நீங்களும் ஒருவராவீர்கள். உணமையில், அனறும் அதற்கு முன்னருங்கூட பிச்சையெடுத்தல் நாட்டில் நிலவியது. உண்மையில் அது மகாவம்சத்துடனும், இப்னு பதூதா, நொக்ஸ் போனறவர்கள் வநத போது கூட. இங்கு நிலவியதுடன், இன்றும் எம்முடன் இருக்கின்றது. சுறறுலாத் துறைககு எதிரான தலைமுறையின் பேரப் பிள்ளைகள் இறந்த பின்னரும் கூட பிச்சையெடுததல் எம்முடன் நிலைத்து நிற்கும் . . . .

பிச்சை எடுத்தலிற்கான அடிப்படைக் காரணம் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளின்பாற் பட்டதாகும். பொருளாதார செல்வத்தில் எல்லாத்தரத்தினருக்கும் கூடிய பங்கினை அளித்து வறுமையை ஒழிக்கலாம் என்ற அம்சத்தினை நாம் மறுத்துப் பேசலாம்.

எவ்வாருயினும், நாட்டிற்கு வருகை தருபவர்களுக்கு து ஒரு தொல்லையாகவும், வெளிநாட்டில் நாட்டின் நற்பெயரிற்கு இழுக்காகவும் இருப்பதுடன், வளர்முக நாடொன்றின் வறியோரிற்கு சுற்றுப் பிரயாணி உதவியளிக்குமிடத்து இப் பிரச்சினை மிகவும் மோசமடைகின்றது. பின்னர் இது இவ் வெளிநாட்டுப் போஷிப்பில் தங்கி நின்று செல்வமுழைக்கின்ற— பிச்சைக்காரர் உட்பட்ட, இதில் சம்பந்தப்பட்ட— அனைவரையும் பாதிக்கும். சுற்றுலாச் சபை இது தொடர்பாக நடவடிக்கையெடுத்துள்ளதா? என்ற ஒரு நேர்மையான கேள்வி கேட்கப்படலாம். இத்துர்ப்பாக்கிய சமூகப் பிரச்சினை தொடர்பான எமது ஆழ்ந்த கவனத்தையும், இது தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் காட்டுவதற்கு கீழ்க் காணும் உண்மைகளை எடுத்துரைக்க விரும்புகின்றேன்:

எல்லா வகையான பிச்சைக்காரர்களினதும் பிரச்சினைகளைத் தீர்த்து புனர்வாழ்வளிக்கும் வகையில், நாம் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பு இல்லை. ஆனால், சுற்றுலாத் துறை இதற்கு நேர்மாற்றமானது. அது ஒரு புதிய கைத்தொழில் ஆதலால் பழகி வந்த ருசிகள் அதில் இல்லை. எனவே, பயணிகளை ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டுக்கு திசை திருப்புவது மிக எளிதான ஒரு காரியமாகும்.

**சமூக, கலாச்சார விளைவுகள்**

உல்லாசப் பயணிகள் தங்கள் நாடுகளில் செய்யப்படும் விளம்பரப் பிரசித்தங்களாலும், பலமாக அமைந்துள்ள சமூக - உளவியல் ரீதியான நிலையினாலும் தொடர்ந்து வளர்க்கப்பட்ட சில குறிப்பிட்ட எதிர்பார்ப்புகளுடன் வருகிறார்கள்; இந்த அடிப்படையிலேயே அவர்கள் இலங்கையிலுள்ள நிலைமையில் நடந்துகொள்கின்றனர். மேலும், உல்லாசப் பயணிகள் பெரும்பாலும் கூட்டாகக் காலனி ஆதிக்கவாதிகளாயிருந்த அல்லது காலனி ஆதிக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த செல்வந்த நாடுகளிலிருந்தே வருகின்றனர். அத்துடன், அவர்கள் காலனி ஆதிக்கப் பின்னணியுடன் குறைந்த வருமானமுள்ள ஒரு நாட்டுக்கு வருகின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் பொருள்வளமுள்ள (பெரும்பாலும்) வெள்ளைக்கார நாடுகளிலிருந்தே வருகின்றனரென்ற உண்மை, சமூக நிலைமைகளின் மீது பலமான நேர்விளைவுகளையும், எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. உண்மையில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கைப் பொருளாதாரத்தை உருமாற்றிய பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கும், சுற்றுலாத் துறைக்குமிடையே உறுதியான ஒற்றுமைகள் இருந்து வருகின்றன. சுற்றுலாப் பயணத்துறைப் பொருளாதாரம் தனியொரு சந்தைக் குழுவுடன், அஃதாவது நாடுகளின் குழுவுடன் பிணைக்கப்பட்டுள்ளது; முன்பு எடுத்துக் காட்டப்பட்ட புள்ளி விவரங்கள் இதனைத் தெளிவாக்குகின்றன. மேலும், தோட்டப் பொருளாதாரத்தில் போல, உல்லாசப் பயணிகள் தோட்டக் கைத்தொழிலுடன் வளர்ந்த திட்டுக்களை ஞாபகமூட்டும் திட்டுக்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். (உயர்தரப் பதவிகள் வெள்ளையருக்கென ஒதுக்கிவைக்கப்பட்டு) உள்நாட்டு முகாமை அனுக்கிரமத்திலுள்ள அந்தஸ்து, வர்க்கம் எனும் பெரும்பாலும் கட்புலனாகாத தடைகளால் வேலியிடப்பட்ட தோட்ட பங்களாக்களையும் தோட்டத் துரைமார் கிளப்பையும் போலன்றி, புதிய உல்லாசப் பயணத்துறைக் கட்டுக்கோப்புகள் கிட்டத்தட்ட மாறாத மதில் கொண்ட வேலியடைப்புக்களாகவே உள்ளன. கொழும்புப் பிரதேசத்துக்கு வெளியேயுள்ள உல்லாசப் பயணிகளுக்கான கட்டடங்கள் சுற்றியுள்ள நாட்டுப்புறத்திலிருந்து தொடர்பு துண்டிக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்ட கோட்டைகளாகத் தோற்றுகின்றன. உல்லாசப் பிரயாணிகள் நாடும் ஹோட்டல்களில் பெரும்பாலானவற்றைச் சுற்றி உயரமான சுவர்கள் நிற்கின்றன. அவற்றின் நுழை வாயில்களில் சீருடையணிந்த பாதுகாப்பு ஆளணியினர் காவல் காக்கின்றனர். இத்துடன், அரசாங்க உல்லாசப் பயணத்துறைப் பொலீஸாரும் பாதுகாப்புக் கடமையில் உதவி புரிகின்றனர். உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்கான திட்டத்தைத் தயாரித்த ஹவாயில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்ட கம்பெனி இவ்வகையான பாதுகாப்பு அவசியமென உணர்ந்தது.

ஆதலால், உல்லாசப் பயணிகள் திட்டுக்களில் வதியும் இம்முறை நாட்டுக்குள்ளே ஏனைய மக்களிடமிருந்து சுவரெழுப்பிப் பிரிக்கப்பட்ட செல்வ வளத் தீவுகளை உண்டாக்குகின்றது. உல்லாலாசப் பயணிக்கும் உள்நாட்டு வாசிக்குமிடையே நிகழும் ஊடாட்டம் இந்தத் திட்டு நிலைமையால் ஏற்படுத்தப்படும் பொருளாதார, சமூக, உளவியல் கட்டுக்கோப்பாலேயே பெருமளவுக்கு நிர்ணயிக்கப்படுகிறது. இந்த ஊடாட்டம் எவ்வாறு நிகழ்கின்றதென்பதையும், அது உல்லாசப் பயணியின் நடத்தையையும் உள்நாட்டு வாசியின் நடத்தையையும் எவ்வாறு நெறிப்படுத்துகிறதென்பதையும் ஆராய்ச்சிப் பெறுபேறுகள் எடுத்துக் காட்டுகினறன. உல்லாசப் பயணிகளின் வருகை சில அம்சங்களில் ஒரு புது வகையான பொருளாதார ஆதிக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி, விதேச இன மக்களின் கலாசார பாதிப்பினை உண்டாக்குவதற்குரிய ஒரு வழியாகவும் அமைகின்றதென எடுத்துக்காட்ட விமர்சகர்கள் முயன்றுள்ளனர். எதிர்மறையான விளைவுகளின் இந்த அம்சத்தைத் திருஷ்டாந்தப்படுத்த, பிச்சையெடுக்கும் பிரச்சினை அடிக்கடி உபயோகிக்கப்படுகிறது.

சுற்றுலாத் துறையின் எதிர்மறையான அம்சங்களில் சிலவற்றை நாம் விவரித்ததுடன், சில விஷயங்களில் இத்துறையின் தாக்கம் நாட்டுக்குத் தோட்டப் பொருளாதாரத்தின் அறிமுகத்தை ஒத்திருக்கிறதென்றும் குறிப்பிட்டோம். 19 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற இந்தப் பிற்கூறிய சமூக பொருளாதார ஆக்

(13ம் பக்கம் பார்க்க)

சேவைகள் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை, பராமரிப்புத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து செயல்படுகின்றோம். இச் செய்முறையில் நாம் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் பாரியதும், மிகச் சிறந்ததுமான புனருத்தாரண முகாம்களை நிறுவ உதவுகின்றோம். குறிப்பாக, சுற்றுப் பயணிகள் பெருமளவு விஜயம் செய்கின்ற இடங்களிலேயே இவை நிறுவப்படுகின்றன.

பிச்சை யெடுத்தலின் தோற்றுவாய், அதன் பரிமாணம் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான ஆய்வினைத் தயாரிக்கும் வகையில், மேற்கூறிய திணைக்களங்களுக்கும், சமூக சேவைத் திணைக்களம், நாட்டின் இரு பிரதான பல்கலைக்கழகங்கள் என்பவற்றிற்கும் நாம் உதவுகின்றோம்.

இப் பிரச்சினையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், நாம் பொலீஸ் திணைக்களத்தின் உதவியுடன் நாட்டிற்குள்ளாக உள்ள சுற்றுலா நிலையங்களில் சுற்றுலாப் பொலீஸாரை கடமையிலீடுபடுத்துகின்றோம்.

கடற்கரையில் அதி விரைவாக பணம் உழைக்கும் வகையில், பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களைத் தடுக்கும் நோக்குடன் நாம் சுற்றுப்பயணிகளிடமிருந்து பிச்சை யெடுப்பதன் தீமைகளை பாடசாலைச் சிறார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் சிறப்பாக விளங்கிக் கொள்ளும் வகையில் கல்வி முகாம்களை சிபாரிசு செய்கின்றோம்.

இப் பிரச்சினை தொடர்பாக சுற்றுலாப் பொலீஸாரிற்கு கல்வியூட்டுவதற்கும், இதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய மிகவும் சீர்திருத்தமான நுட்பங்களை அவர்களுக்குக் கற்பிப்பதன் பொருட்டும் நாம் ஒரு புதிய பயிற்சித் திட்டமொன்றினை ஒழுங்குபடுத்துகின்றோம்.

1978 நவம்பர் 2ம் திகதியன்று பண்டாரநாயகா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் சுற்றுலாத்துறை தொடர்பாக நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் சமர்ப்பித்த ''சுற்றுலாத் துறையின் சமூக, கலாச்சார, சூழலியற் தாக்கங்கள்'' என்னும் கட்டுரையில் சுற்றுலாச்சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் திரு. நிமலசிரி டீ சில்வா.

## சுற்றுலாத்துறையும் சுற்றுலாச்சபையும்

சுற்றுலாக் கைத்தொழில் ஒரு ''வெற்றிக் கதை'' என்று வர்ணிக்கக்கூடிய நிலைக்கு இப்பொழுது வந்துவிட்டது.

பயணிகளைக் கவர்வதற்குப் புதிய திட்டமொன்று உருவாக்கப்படக் கூடாதா என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. வெளிப்படையாகச் சொல்தெனில், புதிய திட்டமொன்றுக்கு எந்தக் காரணமும் எனக்குப் புலப்படவில்லை. மேலும், பல்லாண்டுகளுக்குப் பயன்படக்கூடிய திட்ட மொன்றை நாம் ஏற்கனவே கொண்டுள்ளோம். இப்பொழுது செய்ய வேண்டியதென்னவென்றால், கடந்த கால செயற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு, இந்த அசல் திட்டத்தைப் பரிசீலனை செய்து, இதுவரை என்ன செய்யப்பட்டுள்ளதென்பதை மதிப்பிட்டு, எதிர்காலத்துக்குத் திட்டமிடுவதாகும்.

### சுற்றுலாத்துறை பற்றிய பரிசீலனைகள்

இதனை நோக்கிற் கொண்டு, விசேஷ நிபுணத்துவ கமிட்டிகள் அல்லது நபர்களின் உதவியுடன் இலங்கை உல்லாசப் பயண சபையால் பல பரிசீலனைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல பரிசீலனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன; மேலும் சில பூர்த்தி செய்யப்படவிருக்கின்றன. இந்தப் பரிசீலனைகள் கீழ்க்கண்ட அம்சங்களை உள்ளடக்குகின்றன:

(அ) வந்து சேரவிருக்கும் சுற்றுலாப் பயணிகளைப் பற்றிய மதிப்பீட்டின் மீளாய்வும், எதிர்பார்க்கப்படும் பயணிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக இடவசதியையும் மற்றும் வசதிகளையும் விஸ்தரிப்பதற்கான வேலைத்திட்டமும்.

(ஆ) சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்குக் குறிக்கப்பட்டுள்ள இலக்குகளை எய்துவதற்குத் தற்போது கைக்கொள்ளப்படும் விளம்பர, பிரசார முறைகள் போதுமா அல்லது போதாதா என்பதை ஆராய்ந்து, மதிப்பிடல்.

(இ) நாட்டின் சமூக, கலாசார அம்சங்கள் மீதுஇக்கைத்தொழில் ஏற்படுத்தியுள்ள விளைவைப் பரிசீலனை செய்தல்.

(ஈ) கைத்தொழிலின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையின் வேலைத் திட்டம் போதுமா?

(உ) ஊக்குவிப்பு — ஒப்பந்த வியாபாரத் துறையில் இலங்கை இறங்குவதெனில், அமைக்கப்பட வேண்டிய ஸ்தாபனம்.

(ஊ) நாட்டிலுள்ள உள்நாட்டு சுற்றுலாப் பயணத்துறையின் நிலையும், அதனை விரிவாக்குவதற்கான வழிவகைகளும்.

(எ) குறிப்பாகக் கலாசார சுற்றுலாப் பயணத்துறை சம்பந்தமாக பயணிகளின் தரச் சிறப்பை அபிவிருத்தி செய்வதற்குரிய வழிவகைகள்.

(ஏ) புதிய ஹோட்டல்களையும் ஏனைய சேவைகளையும் அங்கீகரிப்பதற்கான அளவுகோல்.

(ஐ) அதிக இல்லங்கள், பிரயாண முகவர் ஸ்தாபனங்கள், சுற்றுலாப் பயண கடைகள் ஆகியவற்றை, அங்கீகரிப்பதற்கான அளவுகோல்.

(ஒ) ஹோட்டல்களுக்கும் மற்றும் உல்லாசப் பயண சேவைகளுக்கும் ஓர் யதார்த்தமான விலை நிர்ணய முறை.

### எதிர்காலத்துக்கான திட்டங்கள்

இந்தப் பரிசீலனைகளிலிருந்து, எதிர்காலத்துக்குக் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதென இலங்கை உல்லாசப் பயண சபை எண்ணியுள்ளது.

1. உல்லாசப் பயண வசதித் தொழில் நடவடிக்கைகள் (ஹோட்டல்கள், பொழுதுபோக்கு நிலையங்கள் முதலியன) மண்டலங்கள் எனப்படும் முன்பே எல்லை குறிக்கப்பட்ட காணிப் பரப்புகளுக்குள் அடக்கப்படும்.

2. துரிதமான அங்கீகாரம் மூலம் அதிக அறைகளையும் மற்றும் வசதிகளையும் அமைப்பது துரிதமாக்கப்படும்.

3. உல்லாசப் பயணிகளுக்கான சகல கட்டடங்களும் சிற்ப முறையிலும் அலங்கார முறையிலும் சுதேசத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும்.

4. பொழுதுபோக்கு நிலையங்கள், உடற் பயிற்சி விளையாட்டுகள், கடைவீதி நிலையங்கள் குறிப்பாக சிற்றுண்டிச் சாலைகள் முதலியவற்றின் உருவில் அதிக வசதிகளையும் சேவைகளையும் ஏற்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்படும். எனினும், அரசாங்கம் ஊக்கமளிக்காத அல்லது எங்களுடைய கலாசார, சமூகப் பின்னணிக்கு அந்நியமான பொழுதுபோக்கு வகைகள் அனுமதிக்கப்படமாட்டா.

5. போட்டிக்காகக் குறைந்த விலைகளை அறவிடல் அல்லது அதிக விலைகளை நிர்ணயித்தல் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காக ஹோட்டல்களிலும், மற்றும் சேவைகளில் தேவையான இடங்களிலும் உண்மை நிலைக்கொத்த விலை நிர்ணய முறையொன்றைப் புகுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6. ஹோட்டல் நெறிக் கோவை, பிரயாண முகவர் ஸ்தாபன நெறிக் கோவை ஆகியவற்றை அமுலுக்குக் கொண்டு வருவதற்கும், அதிதி இல்லங்கள், உல்லாசப் பயண கடைகள், உல்லாசப் பயண வாகனங்கள் முதலியன போன்ற மற்றுஞ் சேவைகளில் தரங்களைப் பராமரிக்க உதவி செய்வதற்காகவும் உல்லாசப் பயண சபையில் ஒரு பிரயாண தரங்கள் திணைக்களம் அமைக்கப்படும்.

7. சுற்றுலாத்துறைக் கல்விக்கான ஒரு பாடசாலையை உள்ளடக்குவதற்காகவும், சபையின் அலுவலர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பயிற்சியளிப்பதற்காகவும், எதிர்கால சவால்களைப் பயனுறுதியுடன் சமாளிக்க அவர்களை நெறிப்படுத்துவதற்காகவும், கைத்தொழிலுக்குப் புதிதாக வருவோருக்கு ஒரு பயிற்சி நிலையமாகப் பயன்படுவதற்காகவும் ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையின் இலக்கையும் நோக்கத்தையும் விரிவாக்க உத்தேசிக்கப்படுகிறது.

8. ஆலோசனைக் கமிட்டிகள் வாயிலாக, இக் கைத்தொழிலுடன் தொடர்புள்ள வர்த்தகர்களுடனும் பொதுத் திணைக்களங்களோடும் நெருங்கிய தொடர்புகள் ஸ்தாபிக்கப்படும். இக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஆலோசனைக் கமிட்டிகளில் அடங்கியிருப்பார்கள்.

9. குடிவரவுப் பகுதி சுங்கப்பகுதி அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தேசத்தின் எல்லைப்புற விதிமுறைகள் பெருமளவுக்குத் தளர்த்தப்படும்.

10. அதிகமான சிறந்த கார்கள், கோச்சுகள், ரெயில் சேவைகள், விமானச் சேவைகளின் உருவத்தில் திறமையான உள்நாட்டுப் போக்குவரத்து முறையொன்றை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. இக் கைத்தொழிலின் உயர் போட்டித் தன்மையைச் சமாளிப்பதற்காகப் புதிய சந்தைப்படுத்தும் கொள்கையொன்று அமுலுக்குக் கொண்டு வரப்படும். இதில் (மற்றும் விஷயங்களுடன்) புதிய பிரசார முறைகளும் இப்பொழுதுள்ளதை விட நல்ல பிரசார வெளியீடுகளும் அடங்கும்.

12. உல்லாசப் பயணத் துறையை நோக்கி நாட்டு மக்களிடையே உற்சாகமும் ஒத்துழைப்பு மனோபாவமும் பொருந்திய ஒரு சூழ்நிலையைச் சிருஷ்டிப்பதற்காக, சமூக உறவுத் திட்டமொன்று அங்குரார்ப்பணஞ் செய்யப்படும்.

13. ஓய்வு கொள்வதற்காகவும் ஸ்தல யாத்திரையின் பேரிலும் விடுமுறையின் பேரிலும் நாட்டுக்குள்ளே பிரயாணஞ் செய்ய நாட்டு மக்களுக்குச் சிக்கனமும், சௌகரியமும் பொருந்திய வசதிகளையும், சேவைகளையும் ஏற்படுத்துவதன் மூலம் உள்நாட்டு சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதில் விசேஷ கவனம் செலுத்தப்படும்.

14. அடுத்துள்ள அயல்நாடுகளிடையே பிரயாணத்துக்கும் பரிவர்த்தனைக்கும் பிரதேச உல்லாசப் பயணத்துறை என்னும் எண்ணக்கரு அதிகமாக வற்புறுத்தப்படும்.

15. பௌத்த சமயம், புராதன நகரங்கள், எங்களுடைய பரம்பரைக் கலைகள், கைப்பணிகள், சங்கீதம், நடனம், எங்களுடைய வாழ்க்கைமுறை ஆகியவற்றின் மூலம் எங்களுடைய சமய, கலாசாரப் பாரம்பரியங்களை உலகுக்கு எடுத்துக் காட்டி கலாசார சுற்றுலாத்துறை என்னும் கருத்து அபிவிருத்தி செய்யப்படும்.

16. சம்பந்தப்பட்ட பொதுத் திணைக்களங்களின் ஒத்துழைப்புடன், பிரயாணிகள் தொல்லைகள் உபத்திரவங்களின்றும் விடுபட்டுச் சந்தோஷமாக இங்கு தங்கியிருப்பதற்கும், எங்களுடைய வாழ்க்கை முறையைக் குலைக்க பிரயாணிகள் செய்யக்கூடிய முயற்சிகளுக்கு ஊக்கமூட்டாதிருப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 11ம் பக்கத் தொடர்ச்சி )

கிரமிப்பு, பொருளாதாரத்தை நாட்டின் தேவைகளிலிருந்து தூரவிலக்கி, ஐரோப்பாவிலுள்ள நுகர்வு நிலையங்களை நோக்கித் திருப்பிவிட்டதெனினும், அது சில நன்மைகளையும் வழங்கியது; அது நிலமானிய சமூகக் கட்டுக்கோப்புக்களைத் தகர்த்துத் தரைமட்டமாக்கியதுடன், நாட்டுக்குள்ளே சமூக உறவுகளை மாற்றுவதற்கும் உதவியது.

சுற்றுலாக் கைத்தொழில் அதே போல இலங்கையின் சமூகக் கட்டுக்கோப்பில் ஒரு திட்டமான உருமாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இலங்கை முன்பு காலனியாக இருந்த ஒரு நாடு. குறைந்த பட்சம் ஓரளவுக்காவது வருமானத்துடன் பரஸ்பர சம்பந்தமுள்ள பலத்த அந்தஸ்து வித்தியாசங்கள் நிலவும் ஒரு வர்க்க அமைப்பைக் கொண்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கும் உள்நாட்டு வாசிகளுக்குமிடையே திரிபுபட்ட வர்க்க ஊடாட்டங்கள் (உதாரணமாகத் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்த உல்லாசப் பயணிகள் உள்நாட்டிலுள்ள மேல் வகுப்பாரை விட அதிக வருமானமுள்ளவர்கள்) உள்நாட்டு வாசிகளின் அந்தஸ்துக்குள் ஐயத்தைப் புகுத்தக் கூடியனவாகும். குறிப்பாக, இலங்கையிலுள்ள நடுத்தர வகுப்பாரையும் மேல் வகுப்பாரையும் விட உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட பணக்கார நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களுககும் இலங்கைத் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்குமிடையே நிகழும் திடீர்ச் சந்திப்புகள் பிற்கூறிய இவ்விரு வகுப்பாரினதும் அந்தஸ்து நிலைகளை அகற்றிவிடக் கூடியனவாதலின் சமத்துவத்தை நோக்கிய ஒரு போக்குக்கு ஊக்கமூட்டுகின்றன. மேலும், குறைந்த அந்தஸ்துள்ள சில இலங்கையர், தொழில்களில் உள்ளவர்களைவிட அதிக வருமானம் ஈட்டுகிறனர். சில ஹோட்டல் ஏவலாட்கள், வாகன சாரதிகள் முதலியோர் சர்வகலாசாலை விரிவுரையாளர்களையும் விட அதிக பணம் சம்பாதிக்கின்றனர். இது நாட்டிலுள்ள வர்க்க அனுக்க்மத்தை அழித்துவிடக் கூடியது. ஆனால், இதே நிலைமைகள் நாட்டுக்குள்ளேயிருக்கும் வேலைகளுகுரிய சன்மானங்கள், ஊக்குவிப்பு முறை ஆகிய பிரச்சினையைத் தீர்க்காமல் விட்டுவிடுகின்றன. தொழில்களில் தேர்ச்சி பெற்றுள்ள தனது திறமைசாலிகளுக்குக் கொடுப்பதைவிட அந்நியர்களின் சலன சித்தங்களையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் ஒரு பணியாளுக்கு அதிக பணம் கொடுக்கும் ஒரு சமுதாயம், ஒருவேளை முன்னுரிமை பெற வேண்டிய விஷயங்களின் அட்டவணையைத் தவருகத் தயாரித்திருக்கக் கூடும்.

காலனி ஆதிக்கம் ஒழியும் சமயத்தில், இலங்கையிலுள்ள மேல் வகுப்பார் கலாசார - வேலைப்பாடமைந்த உள்நாட்டுப் பொருள்களை மிகக் குறைவாகவே மதிப்பிட்டனர். ஏனென்ருல் அவர்களுடைய இரசனைகள் காலனியாதிக்கத் தொடர்பினுல் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. இதற்கு நேர்மாருக, இலங்கைக்கு இப்பொழுது வரும் சுற்றுலாப்பயணி (நிர்ணயமான விதேச பிம்பத்திலிருந்து எழுகின்ற) உள்நாட்டுக் கலாசார நுகர்வைத் தமது நோக்காகக் கொண்டுள்ளார்.

இத் தேவையைத் திருப்தி செய்வதற்காக நாட்டில் கலாசார நடவடிக்கைகள் வளர்ந்துள்ளன. வெளிநாட்டுப் பயணிகள் உள்நாட்டுக் கலாசாரத்தை இவ்விதம் நுகர்ந்து வருவது, உள்நாட்டு மேல் வகுப்பாரின் கண்களைத் திறந்து விட்டுள்ளது. உள்நாட்டு மேல் வகுப்பார் சுதேச கலாசாரத் சொற்ருெடர்களைக் கிரகித்து வரும் இன்றைய பிரத்தியட்சக் காட்சிக்கு இது ஓரளவுக்காவது காரணமாகும். ஆனல் இங்கு, நாம் ஏற்கனவே விவரித்துள்ளது போல், இலங்கையைப் பற்றி சுற்றுலாப் பயணிகளின் மனத்தில் முன்னரே பதிந்துள்ள பிம்பத்துடன், பொருந்துவதில் உள்நாட்டுக் கலாசாரம் திரிபடைகின்றது.

உள்நாட்டிலே ஒப்பியல் ரீதியாக வறுமை நிலவும் ஒரு கடலில் செல்வளம் பொருந்திய தீவுகளைக் காட்டுவதே இந்தத் திரிபுகளுக்கு ஒரு காரணம் என்பதை நாம் ஏற்கனவே குறிப்பாலுணர்த்தியுள்ளோம். உள்நாட்டு மக்களைப் போல அதே நுகர்வுப் போக்குகளைக் கொண்ட சுற்றுலாப் பயணிகள் வருவார்களேயானல், இந்தத் திரிபு விளைவுகள் வெகுவாகக் குறைந்துவிடும். பயணிகளில் இதே நுகர்வுப் போக்குள்ள ஒரேயொரு பகுதியினர் ''ஹிப்பிகள்'' என வர்ணிக்கடுவோராவர். இந்த ''ஹிப்பி'' இனத்தில் நடுத்தர வகுப்பிலிருந்து தற்காலிகமாக விலகியவர்கள், மாணவர்கள், ''ஹிப்பி'' வாழ்க்கை முறையை நிரந்தரமாக மேற்கொண்டவர்கள் ஆகிய மாறுபாடானவர்கள் அங்கம் வகிக்கிருர்கள். அவர்கள் கொழும்பிலுள்ள மலிவான அதிதி வீடுகளிலும், ஹிக்கடுவ போன்ற சுகவாச நிலையங்களிலும் வசிக்கக்கூடியவர்கள். இந்தச் சுகவாச நிலையங்களில் கீழ் நடுத்தர வகுப்பாருக்கென மாற்றப்பட்ட வீடுகளில் அவர்கள் அடிக்கடி தங்குகின்றனர். இங்கு ஒவ்வொருவரும் தனியொரு படுக்கையுடன் இரண்டு அல்லது மூன்று அறைகளைக் கொண்டுள்ளனர். இவ்விடவசதிக்காக அவர்களிடம் நாளொன்றுக்குச் சுமார் 20- ரூபா அறவிடப்படுகிறது. ஹிப்பிகள் குடியேறியுள்ள இன்னோர் இடலான பாசிக்குடாவில் அவர்கள் கிடுகுத் தடுப்புச் சுவர்களுடன் கூடிய வைக்கோலால் வேயப்பட்ட வீடுகளில் வசிக்கின்றனர். இந்தப் பகுதிகளிலெல்லாம் அவர்கள் அந்தந்த இடத்தில் உபயோகிக்கப்படும் உணவையே உட்கொள்கின்றனர்; அந்தந்த இடத்திலுள்ள மக்களுடன் (பெரும்பாலும் தொழிலாளர் வகுப்பாருடன் அல்லது கீழ் நடுத்தர வகுப்பாருடன்) சமத்துவ அடிப்படையில் நெருங்கிப் பழகுகின்றனர்.

17. உல்லாசப் பயணிகள் எங்கள் நாட்டில் தங்கியிருக்கும்போது அவர்களும் எங்கள் சொந்த மக்களும் சந்தோஷமாயிருப்பதற்காக உல்லாசப் பிரயாணிகளுக்கு வழிகாட்டும் நெறிக்கோவை யொன்று புகுத்தப்படும்.

18. கடல் கடந்துவரும் சுற்றுலாப் பிரயாணிகள், உள்நாட்டு பிரயாணிகள் ஆகிய இருசாராரையும் கவர்வதற்காக மகா ஓயா வெந்நீரூற்றுகள், வவுல்பன குகைகள், ரிட்டிகல ஆலயம் முதலியன போன்ற நாட்டிலுள்ள அவ்வளவாகப் பிரபலமடையாத கவர்ச்சிதரும் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படும்.

19. ஜனதிபதியின் வேண்டுகோள்படி ஆண்டொன்றுக்கு 5,00,000 சுற்றுலாப் பயணிகள் என இலக்கு நிர்ணயிக்கப்படவிருக்கிறது. அதன் பின் நிலைமை மீளாய்வு செய்யப்படும்.

20. முடிவாக, இக் கைத்தொழிலுக்குள் ஒரு தேசியக் கண்ணேட்டத்தைப் புகுத்துவதே எங்களுடைய முயற்சியாக இருக்க வேண்டும்.

1978 நவம்பர் 2 ந் திகதியன்று கொழும்பிலுள்ள பண்டாரநாயகா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற ''சுற்றுலாப் பயணத்துறை'' பற்றிய கருத்தரங்கொன்றில் இலங்கை உல்லாசப் பயண சபையின் தலைவர் திரு. சந்திரா என். டீ சொய்ஸா ஆற்றிய உரை.

சில சமயங்களில் சாரம் போன்ற அந்தந்த இடத்தில் அணியப்படும் உடைகளை அவர்கள் அணிவதுடன், வெறுங் காலுடன் நடந்து செல்கின்றனர். அவர்களில் சிலர் நிர்வாணமாகவோ அல்லது அரை நிர்வாணமாகவோ குளிப்பதன் மூலம் பிறரின் கவனத்தை ஈர்த்துள்ளனர். திட்டுகளாக உள்ள உல்லாசப்பயண நிலையங்களிலிருக்கும் உல்லாசப் பயணிகளும் அவ்வப்பொழுது இவ்வழக்கத்தில் ஈடுபடுகிறார்கள். ஆனால் அது பொது மக்களின் கண்களில் படுவதில்லை.

சுற்றுலாப் பயணத் துறையின் எதிர்மறையான தாக்கம் பெரும்பாலும் ''ஹிப்பி'' துராசாரம் எனப்படுவதைக் குறிப்பிட்டே இலங்கையில் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. நாம் ஏற்கனவே ஆராய்ந்துள்ள மற்றும் பெரிய காரணிகளுடன் ஒப்பிடுகையில், உள்நாட்டுச் சமூக, பொருளாதார, கலாசார அரங்கத்தில் ''ஹிப்பிகள்'' ஏற்படுத்தியுள்ள திரிபுகள் சிறியனவே. ஹிப்பி பிரசன்னம் சம்பந்தமாக எழும் மிகையான எதிர்மொழிகளுக்கான காரணத்தை நாட்டிலுள்ள வர்க்க உறவுகளின் அமைப்புக்குள்ளேயும், ஒரு வேளை ஹிப்பிகள் கீழ் வகுப்பாருடன் சமத்துவ அடிப்படையில் பழகி, அவர்களுடைய உணவையும் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு கவனத்தை ஈர்க்கும் உண்மையிலும் நோக்க வேண்டும். இந்த ஒழுக்க முறை காலனி ஆதிக்க வெள்ளையரின் நடத்தையிலிருந்து மிகவும் வேறுபட்டதாகும். மேல் வகுப்பார் இந்தக் காலனி ஆதிக்க வெள்ளையரிடமிருந்தே தாங்கள் பின்பற்றி நடப்பதற்குரிய குறிப்புக்களைப் பெற்றனர். ஹிப்பிகளுக்கிடையே காணப்படும் சற்றே நெறி மிறழ்ந்த சொந்த உறவுகளின் திருஷ்டாந்தத்தை உள்ளே இருந்து டெலிபோனில் கூப்பிட்டதும் வரும் விலைகமளிர், பெண்களுக்குத் துணை போகும் பணம் பெறும் ஆண்கள் ஆகிய கோஷ்டிகளுடன் ஒப்பிட்டு ஆராய வேண்டும்.

பயணிகளுடன் இலங்கையர் ஊடாடும் கோணத்திலிருந்து நோக்கும்போது, குறிப்பாக சுற்றுலாச் சேவைத்துறை ஆளணியினருக்கும் பயணிகளுக்குமிடையே நடைபெறும ஊடாட்டத்தில் இந்த திரிபுகளை ஒருவர் காணக்கூடியதாயிருக்கின்றது. ஆளணியினருக்குப் பயிற்சியளிக்கும் உல்லாசப் பயணச் சபையின் ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையிலிருந்து பயிற்சி முடிந்து வெளியேறுவோரை இரு பொது வகையினராகப் பிரிக்கலாம். அஃதாவது, முகாமையாளர் (பிரதானமாகக் கீழ்மட்ட அல்லது நேரடி மேற்பார்வை புரியும் முகாமையாளர்), தேர்ச்சி பெற்ற உடலுழைப்பு ஊழியர்கள் (சமையல்காரர், ஏவலாட்கள் முதலியோர்). இப்பயிற்சி நெறிகளில் முன்னுரிமை ஆங்கிலம் பேசும் விண்ணப்பதாரர்களுக்கு, அஃதாவது மறைமுகமாக ஆங்கிலம் பேசும் குடும்பங்களின் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிறதெனச் சாட்சியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தேர்ச்சி பெற்ற உடலுழைப்பு வேலைகளை நாடும் போக்கு கீழ் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த ஆங்கிலம் பேசும் இல்லங்களின் புத்திரர்களிடையே காணப்படும் அதே வேளையில், முகாமையாளர் வேலைகளை நாடும் போக்கு மேல் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த ஆங்கிலம் பேசும் இல்லங்களின் புத்திரர்களிடையே காணப்படுகிறது.

பயணிகளை எதிர்பாராமல் சந்திக்கும் போது கைக்கொள்ள வேண்டிய சரியான முறைகள் — அஃதாவது அடிப்படையில் சேவை முறைகள் — இப்பயிற்சி நெறியில் போதிக்கப்படுகின்றன. உறுதியாக விரிந்துள்ள குடும்ப பந்தங்களுடன் கூடிய இலங்கை போன்ற ஒரு நாட்டில், பிறந்த வர்க்கம் (அஃதாவது தாய் அல்லது தந்தையின் சமூக அந்தஸ்து) மிக முக்கியமாகும். ஹோட்டல் ஏவலாளாக அல்லது மதுபான நிலைய ஊழியனாக இருப்பது, இலங்கையிலுள்ள வழமையான சமூக அனுக்கிரமத்தில் குறைந்த கௌரவமும், குறைவான வருமானமுமுள்ள ஒரு வேலையெனக் கருதப்படுகிறது. ஆனால், பயணிகளுக்கான ஹோட்டல்களிலுள்ள அநேக ஏவலாட்கள் (வெயிட்டர்கள்) ஒப்பியல் ரீதியாக ''நல்ல'' நடுத்தர வகுப்புப் பின்னணிகளிலிருந்தும் ''நல்ல'' பாடசாலைகளிலிருந்தும் வருகிறார்கள். இந்த ஹோட்டல்களில் இலங்கையருக்குப் பரிமாறுவது இழிவாகக் கருதப்படுமெனினும், நூற்றுக்கணக்கான வாலிபர்கள் அந்நியர்களுக்கு விரும்பிப் பரிமாறுகிறார்கள். இங்கு சுவாரஸ்யமான வர்க்க நிலைமைகள் மீண்டும் எழுந்துள்ளன. உதாரணமாக, கடற்கரைப் பிரதேசமொன்றிலிருக்கும் ஒரு குறிப்பிட்ட ஹோட்டலில் கீழ் நடுத்தர வகுப்புப் பின்னணியைக் கொண்ட வெயிட்டர்கள் தங்களுடைய சீருடையின் ஒரு பாகமாக (மீண்டும், உல்லாசப் பயணிகளின் உள்ளத்தில் ஒரு விதேச பிம்பத்தைப் பதிப்பதற்காக) சப்பாத்துக்களின்றி சாரம் அணியுமாறு கேட்கப்பட்டனர்.

### அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம்

இலங்கையில் நாளொன்றுக்கு சுற்றுலாப் பயணியொருவரிடமிருந்து பெறப்படும் சராசரிச் வருமானம் உப கண்டத்திலேயே மிக உயர்ந்த தொகையாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், பயணிகளிடமிருந்து உத்தியோகபூர்வமான பெறுவனவுகளின் வளர்ச்சி, பயணிகள் போக்குவரத்தின் வளர்ச்சி விகிதத்தைவிட மிக வேகமாக அதிகரித்து வந்துள்ளது. உல்லாசப் பயணசபையின் ஆராய்ச்சி-திட்டமிடல் பணிப்பாளர் திரு. எச். எம். எஸ். சமரநாயக்காவின் அறிக்கைப்படி, 1968 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் பயணிகளிடமிருந்து பெறப்பட்ட உத்தியோகபூர்வமான பெறுவனவுகளின் வளர்ச்சி மிக உயர்வாயிருந்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் போக்குவரத்தின் சராசரி வருடாந்த வளர்ச்சி விகிதமான 21 சத விகிதத்துடன் ஒப்பிடுகையில் இது வருடந்தோறும் 45 சத விகிதமாயிருந்துள்ளது. நாளொன்றுக்கு பயணியொருவரிடமிருந்து பெறப்படும் சராசரிப் பெறுவனவு கடந்த ஆண்டுகளில் இடையறாது அதிகரித்து வந்துள்ளது. 1967 ஆம் ஆண்டில் 4.5 அமெரிக்க டாலராயிருந்த பெறுவனவு 1977 ஆம் ஆண்டில் 24.3 அமெரிக்க டாலருக்கு அதிகரித்துள்ளது.

இங்குவரும் சுற்றுலாப்பயணியும் சம்பந்தப்பட்ட சேவையாட்களும் விருந்தோம்பும் உறவொன்றில் ஈடுபட்டிருக்கவில்லையென்றாலும், பயணிகளைக் கவர்வதற்கான பிரசுரங்கள் அந்தச் சூழ்நிலையையே ஏற்படுத்துகின்றன. அவர்கள் ஒரு வர்த்தகக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளனர். இதில் மரியாதையான மனித ஊடாட்டம் சந்தைப்படுத்தக்கூடிய ஒரு பண்டத்தின் நிலைக்குக் குறைக்கப்படுகிறது. இந்த அம்சம் உள்நாட்டுச் சேவையாட்களின் மனோபாவங்களை மேலும் மாற்றியமைக்கின்றது. இந்தச் சேவை புரியும் வேலைகளுக்கு நடு

த்தர வகுப்பைச் சேர்ந்த ஆட்கள் கவரப்படுவதற்குப் பிரதான காரணம், பயணத்துறை வசீகர மிக்க ஒரு கைத்தொழில என்று இலங்கையில் பரப்பப்பட்டுள்ள கருத்தாகும். அவர்களும் பரம்பரையான சமூக அமைப்பிலேயே தொழிற்படுகின்றனர்; எனினும், அவர்கள் செய்யும் வேலைகள் அடிப்படையில் பணியாட்கள் செய்யும் வேலைகள் எனக் கருதப்படும் எனினும், அவர்கள் ஒப்பியல் ரீதியாகப் பெரும்பாலும் இனம்களிலிருந்தும் மற்றும் மூலங்களிலிருந்தும் உயர் வருமானம் பெறுகின்றனர். மேலும், பயணப்பொதி காவிகளும், வெயிட்டர்களும் ‘கூட்டிக்கொடுக்கும்’ வேலைகளுக்குள்ளும் அடிக்கடி தள்ளப்படுகின்றனர். வெயிட்டர் பணிபுரியும் பெண்களும் மற்றும் பெண் ஊழியர்களும் வெகு விரைவில் ‘சிருங்காரப் பிரயத்தனங்களுக்கு’ உட்படுத்தப்படுகின்றனர். இதன் விளைவாக, அவர்களுடைய நடுத்தர வகுப்புப் பூர்வோத்தரத்திலிருந்து உதித்த மிருதுவான சீர்மை சிதைந்து, தங்கள் வேலையில் அவர்கள் முன்பு எதிர்பார்த்த வசீகரங்கள் மறைந்து, எரிச்சலும் கடுகடுப்பும் தோன்றி விடுகின்றன.

சுற்றுலாக் கைத்தொழில் வனப்புமிக்க இயற்கைக் காட்சிகள் நிறைந்த பிரதேசங்களின் நடுவே அமைந்துள்ளது. நாட்டில் காலனி ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன்பிருந்த நிலைமையுடன் இதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்போது, புதைபொருளியல் சான்றுகள் எடுத்துக் காட்டியுள்ளது போல், இந்த இடங்கள் நிலையாக ஆலயங்களுக்காகவே உபயோகிக்கப்பட்டன. இந்தக் கோவில்கள் தங்களுடைய சமயக் கடமைகளுக்குப் புறம்பாக, கிராமவாசிகளின் சமூக ஊடாட்டத்துக்குரிய மையங்களாகவும் விளங்கின.

தற்போதுள்ள ஹோட்டல் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ள விதம் அந்நியர்களுக்காக வனப்புமிக்க இயற்கைக் காட்சிகளைக் கொண்ட காணிகளைப் பறித்திருப்பதுடன் மட்டுமன்றி, கடந்த நூற்றாண்டின் பாழ்நிலச் சட்டத்தையும் சில சமயங்களில் ஞாபகமூட்டுகின்றன. விஸ்தாரமான இடப்பரப்புகளில் அவை அமைந்திருப்பதால், விவசாயம், கடற்றொழில் போன்ற பரம்பரைப் பொருளாதாரத் தொழில்களில் ஈடுபடும் வாய்ப்பும் சில சமயங்களில் உள்நாட்டு வாசிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. மீன்பிடியாளருக்குப் பிரவேச வசதி — இது சட்டவிரோதமாயிருந்த போதிலும் — மறுக்கப்படும் கடற்கரைப் பிரதேசங்களில் இந்நிலைமை கடுமையாயுள்ளது. பொதுவாக, கடற்கரைகளை உபயோகிப்பதற்கோ அல்லது கடற்கரைகள் மீது நடந்து செல்வதற்கோ மீன்பிடியாளருக்கு அனுமதி அளிக்கப்படுவதில்லை. ஏனெனில், அவர்கள் குடியேறினால், கடற்கரை மீது ஒரு வித்தியாசமான கலாசாரத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும். அத்துடன், அதிகாரிகளிடமிருந்து வரும் நிர்ப்பந்தங்களினாலும் மீன்பிடியாளர் கடற்கரைக்குச் செல்வதில்லை. பயணிகள் நாடும் இடங்களில் காவல் புரியும் சுற்றுலாத் துறைப் பொலீஸார் இதில் சுறுசுறுப்பாக உதவி புரிகின்றனர். ‘‘எங்களுடைய மக்கள் சுற்றுலாப் பயணிகளுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். இதனால், அவர்களை நாங்கள் துரத்தி விடுகிறோம். இல்லாவிட்டால், நாட்டுக்கு வரும் பணம் நின்றுவிடும்’’ என பெந்தோட்டையிலுள்ள ஒரு ஹோட்டலில் காவல் புரியும் ஒரு பொலீஸ்காரர் கூறுகிறார். கடலுக்குச் செல்வதற்கான வசதி மறுக்கப்படுவது குறித்துச் சில சமயங்களில் மீன்பிடியாளர் சம்பந்தப்பட்ட தங்கள் அதிகாரிகளிடம் ஆட்சேபித்துள்ளனர். ஆனால், அதனால் எப்பயனும் ஏற்படவில்லை. கடற்கரைக்குச் செல்லும் வசதி ஹோட்டல் அதிதிகளுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது எனக் கூறும் அறிவிப்புப் பலகைகள் சில ஹோட்டல்களில் தொங்க விடப்பட்டுள்ளன. இந்தக் குறிப்பு சட்டவிரோதமாகும். ஏனென்றால், நாட்டின் கடற்கரை எல்லைகள் தனியாருக்குச் சொந்தமாயிருக்க முடியாது.

**கலாசாரத்தின் மீது ஏற்பட்டுள்ள தாக்கங்கள்**

இலங்கையைப் பற்றி சுற்றுலாப் பயணிகள் உள்ளத்தில் பதிந்துள்ள பிம்பத்தின் அன்னியத் தன்மை காரணமாக, பயணிகளுக்கான ஹோட்டல்களிலும், மற்றும் இடங்களிலும் பயணிகளுக்கெனப் பிரத்தியேக கலாசார நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தலைமுறை தலைமுறையாக இலங்கையின் ‘உயர்கலைகள்’ எனப்படும் கலைகள் நிலமானியப் பிரபுக்களின் அல்லது அரசர்களின் ஆதரவைப் பெற்று வந்த அதே வேளையில், ‘கீழான கலைகள்’ யாவரும் பங்குபற்றிக் கூடியனவாகக் கிராம மட்டத்தில் இருந்து வந்தன. கண்டி பெரஹரா போன்ற நிலமானிய வகுப்பாரின் கலைகளைப் பொறுத்தவரை, அவற்றின் புதிய போஷகர்களாக உருவாகி வரும் சுற்றுலாப் பயணிகளின் தொகை மேன்மேலும் அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக, குறிப்பாக விசேஷ தரிசன ஸ்தானங்களை அமைப்பதன் மூலமும், அல்லது புதிதாகத் திறக்கப்பட்ட பயணி ஹோட்டல்களுக்கு அருகில் செல்லும் வகையில் வழக்கமான ஊர்வலப் பாதைகளைத் திசை திருப்புவதன் மூலமும், பயணிகள் பிரசன்னமாயிருப்பதற்கு வசதி செய்வதற்காக வழமையான பெரஹராவில் ஒரு திரிபு நேர்கிறது. இந்தத் திரிபைவிட மிகப் பாரதூரமானதென்னவெனில், பயணிகளுக்கு நடத்திக் காட்டப்படும் கலாசார நிகழ்ச்சிகள், சபையோரின் கட்டுக்கோப்பான முன்னெண்ணங்களுக்கு இசைவாயிருப்பதற்காகத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ திரிக்கப்படுகின்றன. பயணி நிலைமையைச் சூழ்ந்துள்ள விதேசியப் பிரபைக்கு இடமளிப்பதற்காக, ஹோட்டல்களில் நடன கோஷ்டிகளின் கச்சேரிகள் மாறியுள்ளமை பிரத்தியட்சம்.

அர்த்தபுஷ்டியான சமூக நிகழ்ச்சிகளில் பரம்பரைக் கிராம நடனங்களை ஆடிக்காட்டல் பொது வழமையாகும். ஆனால், சமூகப் பணியிலிருந்து அவற்றைத் திருப்பி, சம்பந்தமில்லாத சூன்யத்

**அமெரிக்க டொலரில் நாளொன்றுக்கு சுற்றுலாப்பயணி ஒருவரிடமிருந்து பெறப்படும் சராசரி வருமானம்**

| இந்திய உபகண்டம் | | பசிபிக் நாடுகள் | | வளர்ச்சிபெற்ற நாடுகள் | |
|---|---|---|---|---|---|
| பங்களாதேஷ் | 12.1 | தாய்லாந்து | 35.4 | ஸ்பெயின் | 20.4 |
| இந்தியா | 17.2 | பிலிப்பைன்ஸ் | 45.2 | கனடா | 21.4 |
| பாகிஸ்தான் | 22.9 | சிங்கப்பூர் | 58.6 | பிரிட்டன் | 22.6 |
| இலங்கை | 23.7 | | | இத்தாலி | 33.5 |
| | | | | அமெரிக்கா | 39.4 |
| | | | | சுவிட்ஸர்லாந்து | 70.5 |

தில் அவற்றை ஆடிக் காட்டுவதனால், நடனங்களை அவற்றின் சிருஷ்டி ஊற்றுக்கலிளிருந்து அப்பாலிழுத்து விடும் ஒரு போக்கு காணப்படுகிறது. இன்று நாட்டில் ஏற்பட்டு வரும் சமூக மாற்றங்கள், பரம்பரைக் கலைகளை அவற்றின் மூலாதாரங்களிலிருந்து திசை திருப்புகின்றனவென வாதிடலாம். ஆனால், இந்தக் கலைகள் இலங்கையர் ஈடுபடும் சமூக நிகழ்வுப் போக்குகளுடன் தொடர்புள்ளவையாக வைக்கப்பட்டிருக்கும்வரை, அவற்றின் வளர்ச்சியில் ஒரு கட்டுக்கோப்பான தொடர்ச்சி இருக்கும். (உள்நாட்டு மக்களை விட அதிக பணம் கொடுக்கும்) பெரும்பாலும் அந்நியர்களைக் கொண்ட சபையோர் முன்னிலையில் கலைகளைக் காட்டுவதிலும், இரசனைகளுக்குப் பொருத்தமாக அவற்றைத் திரிப்பதிலும், கலையின் கட்டுக்கோப்பான வளர்ச்சி இயலாத காரியமாககப்படுவதுடன், அதன் விளைவாகக் கலையின் வளர்ச்சியும் தடைப்பட்டு விடுகிறது.

சுற்றுலாப் பயணிகளின் கலாசார நுகர்வு பட்டீக்குகளுடன் அல்லது நாடகசாலைக் கூத்துக்களுடன் மட்டும் தொடர்புடையதல்ல; ஆனால் இலங்கையைப் பற்றிய விதேச பிம்பத்தின் மற்றப் பாகத்துடனும் — அஃதாவது இலங்கையின் கடந்த கால வரலாற்றுடனும் — தொடர்புடையதாகும். இவ்விதமாக, அநேக உல்லாசப் பயண நிலையங்களில் பெருந் தொகையான புராதன கலைப்பொருள்கள் விற்பனைக்கிருப்பதை ஒருவர் அடிக்கடி காணக்கூடியதாயிருக்கிறது. இவ்விஷயம் பற்றி இச் சஞ்சிகையில் நாம் இடையறாது வற்புறுத்தி வந்துள்ளோம்.

நாம் மேலே கண்டதுபோல உல்லாசப் பயணத்துறை, அதன் நேர் அம்சம், எதிர்மறை அம்சம் ஆகிய இரு அம்சங்களையும் கொண்டுள்ளது. நேர் அம்சத்தை வலியுறுத்தி, எதிர்மறை அம்சத்தை மட்டுப்படுத்தும் முறைகளைக் காண்பது சாத்தியமாகலாம். இவ்விதமாக, பயணிகள் கொண்டுவரும் டொலர் பணத்தில் இலங்கையின் பங்கு அதிகரிக்கும் விதத்தில், பேரம் பேசுவதன் மூலமும் மற்றும் முறைகள் மூலமும் சுற்றுலாக் கைத்தொழிலின் கட்டுக்கோப்பில் தலையிடுவது சாத்தியமாகும். இதனால் இலங்கை ஹோட்டல் தொழில் மட்டத்தில் மட்டுமன்றி, பயணிகளை ஏற்றிவரும் வாகன மட்டத்திலும், அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள பயணிகளை அனுப்பும் அந்தத்திலும் தலையிட வேண்டியிருக்கலாம். கலாசாரத் துறையில், உல்லாசப் பயண வசதிக் கைத்தொழில் உள்நாட்டுக் கலாசாரத்தின் அபிவிருத்திக்கு ஒரு தூண்டுகோலாகச் செயற்படலாம்; அது, இப்பொழுது நடப்பதைப் போல உள்நாட்டுக் கலாசார அரும்பொருள்களை மறைமுகமாக ஏற்றுமதி செய்யும் ஒன்றாக இருக்க வேண்டியதவசியமில்லை.

இத்தகைய ஆகக்கூடிய பயனுள்ள செயல்முறைகள் கைக்கொள்ளப்படுவதற்கு முழுக் கைத்தொழிலும் கவனமாகவும் நுணுக்கமாகவும் பரிசீலனை செய்யப்பட வேண்டியதவசியமாகும். இது போதிய அளவுக்கு இன்னும் நடைபெறவில்லை.

**கைத்தொழில்**

# தயார் செய்யப்பட்ட ஆடை ஏற்றுமதிகள்

## – ஆசிய நிலைமை

தயாரித்த ஆடை உற்பத்தித் துறையின் மிகத் துரிதமான ஏற்றுமதி விஸ்தரிப்புடன், ஆசியப் பிராந்தியத்திலுள்ள ஆடைத் தயாரிப்புத் தொழில், அமெரிக்காவிலும், பல மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் நிலைபெற்றுள்ள கைத்தொழில்களின் கவனத்தையீர்க்கின்ற ஓர் அம்சமாக மாற்றமடைந்துள்ளது. 1977ல் புதிதுபடுத்தப்பட்ட சர்வதேச பல் நார் ஒப்பந்தம், ஐ. பொ. ச, நோர்வீஜிய நாடுகள், ஐ. அ., கனடா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஆசிய நாடுகள் ஏற்றுமதி செய்த மிகப் பிரபல்யம் வாய்ந்த ஆபரணங்கள் மீது பல்வேறு கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வாய்ப்பளித்தது. அண்மைக் காலங்களில் பல அபிவிருத்தியடைந்த நாட்டுச் சந்தைகளில் கூடியளவு பாதுகாப்பு தொடர்பாக கூக்குரலெழுப்பப்பட்டுள்ளது. பாரிய ஏற்றுமதியாளர்கள் வருட இறுதிக்கு முன்னர் தமது வருடாந்தக் கோட்டாக்களை முடித்துக் கொள்கின்றனர். ஆனால், சந்தையில் தாமதமாகப் பிரவேசிக்கும் வளர்முக நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலவாகும். ஸ்ரீ லங்கா, பங்களாதேஷ், இந்தோனேஷியா பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் என்பன இந்நாடுகளுள் குறிப்பிடத்தக்கனவாகும். நீண்டகால நோக்கில் நிலைமை ஆசிய ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்கமளிக்கக்கூடியதாயில்லை. குறிப்பாக மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச சந்தையின் தேவையை நிறைவு செய்யும் வகையில் இயலளவை ஏற்படுத்தி வருகின்ற ஸ்ரீ லங்கா போன்ற நாடுகளுக்கு இது பொருந்தும். சில ஆசிய உற்பத்தியாளர்களினதும் அபிவிருத்தியடைந்த நாட்டுச் சந்தைகளினதும் தற்போதைய நிலைமை தொடர்பான ஒரு நோக்கு இதற்கான காரணத்தை விளக்கும். பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தித் தாபனம் வெளியிட்ட சில முன்னிகழ்வுக் கூற்றுக்கள் வளர்ந்து வருகின்ற பாதுகாப்புக் கொள்கை தொடர்பாக அச்சம் தெரிவிக்கின்றன. அமைப்பின் 24 அபிவிருத்தியடைந்த சந்தைப் பொருளாதார நாடுகள் எதிர்நோக்குகின்ற மிகப் பிரதான பிரச்சினை எரிபொருளும், வீக்கமுமாகும். மெதுவான வளர்ச்சி பல்வேறு வகைகளில் பாதுகாப்பினை வளர்க்கின்றது; ஏனையோரிற்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய ஒருதலைப்பட்சமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதினின்றும் அங்கத்துவ நாடுகள் தவிர்ந்துகொள்ளும் வகையிலான ''வர்த்தக வாக்குறுதி'' யை அமைச்சர்கள் மீண்டும் புதிதுபடுத்திக் கொள்வார்களென இத்தாபனத்தின் பொதுக் காரியதரிசி நம்பிக்கை தெரிவித்தார். அமெரிக்க அரசாங்கம் பலமான உள்ளூர் அமுக்கத்தினை எதிர்நோக்குவதுடன், அமெரிக்கப் பொருளாதாரம் பின்னோக்கிய நிலைமைக்குள் நுழைகின்றது என்ற முன்னறிவிப்பும் அமெரிக்காவின் இறக்குமதிக் கட்டுப்பாடு தொடர்ந்து நிலவும் என்பதற்குச் சான்றாகவுள்ளது.

### சீனா

மறுபுறத்தில், ஆசியாவின் சிறு ஏற்றுமதி நாடுகளும், ஸ்தாபிதமான ஏற்றுமதியாளர்களும் சீனாவின் பாரிய உற்பத்திச் சக்தியினை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. (புதிய எழுச்சியை அடுத்து) சீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரியளவில் ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழையக்கூடிய சாத்தியக் கூறுகளுண்டு. மலிவான உழைப்பும், பொதுவாக குறைந்த உற்பத்திச் செலவும் அமெரிக்கச் சந்தையில் சீனப் பொருட்களுக்கான கேள்வியை அதிகரித்துள்ளது. (பெரும்பாலான ஆடையுற்பத்தி நாடுகளுக்கு விதித்தது போன்று) ஐக்கிய அமெரிக்கா, சீனாவின் ஆடை ஏற்றுமதிக்கு இறக்குமதிக் கோட்டாக்களை வழங்கியுள்ளது. வெண்மை கலந்த பருத்தி ஏனைய புடைவைகள் என்பவற்றிற்கு அளவுக் கட்டுப்பாடு இல்லாத போதிலும், பருத்திக் கையணி, பருத்தியினாலான நீண்ட காற்சட்டை, சிறுவர், பெரியோரிற்கான பருத்திக் காற்சட்டை, பெண்களின் மேற்சட்டைகள், செயற்கை நார்ச் சுவெட்டர்கள் என்பவற்றிற்கு இது பிரயோகிக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவிற்கும், சீனாவிற்குமிடையில் (எல்லாத் துறைகளையும் உள்ளடக்கிய) வர்த்தக ஒப்பந்தமொன்றினைச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அண்மையில் செய்து கொள்ளப்பட்ட விரிவான வர்த்தக ஒப்பந்தத்தில், சீனா, ''கூடிய விருப்பத்திற்குரிய நாடு'' என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது. இவ் விதியின் மூலம் குறைந்தபட்ச சுங்கவரி விதிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட சில வர்த்தகக் கடன்களிற்கான வசதியும் உண்டு. இவ் வர்த்தக ஒப்பந்தம் அங்கீகரிக்கப்படுமானால் 1978 ல் 100 கோடி டொலராகவிருந்த அமெரிக்க - சீன வர்த்தகம், இவ்வருடம் 200 கோடி டொலராகவும், 1985 ல் 500 கோடி டொலராகவும் அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்துடன் தயாரித்த ஆடை ஏற்றுமதியும் விகிதாசார ரீதியில் அதிகரிக்கும் வாய்ப்புத் தோன்றுகின்றது.

### ஹொங்கொங், தாய்வான், தென் கொரியா

ஆசியாவின் மிகப் பாரிய ஏற்றுமதியாளர்கள் (ஹொங்கொங், தாய்வான், தென் கொரியா) தற்போது சீனா போன்ற புது நாடுகளின் போட்டியை உணர ஆரம்பித்துள்ளனர். 1979 ன் முதற் காற்பகுதியில், ஐ.அ. சந்தையில், இம் மூன்று பாரிய ஏற்றுமதி நாடுகளதும் புடைவை ஏற்றுமதி தீவிரமாக வீழ்ச்சியடைந்ததாகத் தாய்வான் அதிகாரிகள் அவதானித்தனர். உதாரணமாக ஐ. அ. புள்ளிவிவரங்களின் பிரகாரம், மார்ச் மாதத்தில் அமெரிக்காவிற்கான தாய்வானின் புடைவை ஏற்றுமதி ஒரு வருடத்திற்கு முன்னிருந்ததிலும் பார்க்க 32 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது; தென் கொரியாவின் ஏற்றுமதி 24 சதவீதமாகவும் ஜப்பானிய ஏற்றுமதி 41 சதவீதமாகவும் வீழ்ச்சி கண்டது. அமெரிக்க சந்தையின் குறைந்த கேள்வி இவ்வீழ்ச்சிக்கு (ஓரளவு) காரணமாக இருந்ததாக அவர்கள் கருதினர். இத்துடன், சீனா போன்ற புதிய நாடுகளின் போட்டி (முக்கிய) காரணமாயமைந்தது. சீனாவின் போட்டியினால் தாய்வானின் செயற்கை நார் ஸ்வெட்டர் ஏற்றுமதி இவ் வருடம் பெருமளவு வீழ்ச்சியடைந்தமை மிகச் சிறந்த ஓர் உதாரணமாகும். முதற் காற் பகுதியில் அமெரிக்காவுக்கான தாய்வானின் பெண்கள் செயற்கை ஸ்வெட்டர் ஏற்றுமதி 51 சதவீதமாக — அதாவது 211,000 டசினாக — வீழ்ச்சியடைந்தது. இதே வேளை சீனாவின் பெண்கள் செயற்கைச் ஸ்வெட்டர் ஏற்றுமதி 949 சதவீதமாக, அதாவது 203,000 டசினாக உயர்வடைந்தது.

ஐ. அ. ஒப்பந்தக்காரர்கள் இவ் வருடத்திற்கான இரண்டாவது புடைவைப் பேச்சுவார்த்தைகளை ஹொங்கொங், தென் கொரியா, தாய்வான் ஆகிய மூன்று பிரதான ஏற்றுமதியாளர்களுடன் இவ் வருடம் ஜூலை மாதம் ஆரம்பிக்கவுள்ளனர். ஐ. அ. அரசாங்கம் உள்ளூர் புடைவைத் தயாரிப்பாளர்களினதும், காங்கிரசினதும் அமுக்கம் காரணமாக, அமெரிக்க புடைவைக் கைத்தொழிலைப் பாதுகாக்கும் வகையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளவிருப்பதனால், இப்பேச்சுவார்த்தைகளின் விளைவாக மேலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என இந்நாடுகள் எதிர்பார்க்கின்றன.

### பிலிப்பைன்ஸ்

ஒப்பீட்டு ரீதியில் மிக அண்மைக் காலத்தில் ஏற்றுமதிச் சந்தைக்குள் உட்புகுந்த ஆடைத் தயாரிப்பு நாடு பிலிப்பைன்ஸாகும். சென்ற இரு வருடங்களாக பிலிப்பைன்ஸ் ஆடைத் தயாரிப்பாளர்களின் உற்பத்தி இயலளவு வெகுவாக வளர்ச்சியடைந்தபோதிலும், மட்டுப்படுத்தப்பட்ட சந்தை நிலைமைகள் அவர்களைப் பிரச்சினைக்குள்ளாக்கியது. உதாரணமாக, மரபு ரீதியற்ற ஏற்றுமதியாகப் பதியப்பட்டுள்ள உடுதுணி, புடைவைகள் என்பனவற்றின் ஏற்றுமதி, 1975 லிருந்து 25-30 சதவீதமாக அதிகரித்துள்ளது. 1977 ற்கான ஏற்றுமதி 25 கோடி டொலராகும். 1978 ம் ஆண்டிற்கான ஏற்றுமதி மதிப்பீடு 33.8 - 35. கோடி டொலர்களுக்கிடையில் தளம்பியது. 1970 ல் பிலிப்பைன்ஸ் 4 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ஆடைகளையும், புடைவைகளையும் ஏற்றுமதி செய்தது. ஆனால், 1975 ம் ஆண்டிலிருந்து இது மிக வேகமாக அதிகரித்தது. 1979 ம் ஆண்டின் ஏற்றுமதி சென்ற வருட ஏற்றுமதிக்குச் சமமாக அமையுமென பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் மதிப்பிடுகின்றனர். இக்கைத்தொழில் விற்பனை உயர்வை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. மேலும் வருடாந்தம் 1,200 முகாமையாளர்களைப் பயிற்றுவிக்கக் கூடிய, அதி முன்னேற்றகரமான ஆடை ஏற்றுமதித் தொழில் நுட்ப நிலையமொன்று மணிலாவில் நிறுவப்பட்டுள்ளது. இத்துடன் இக்கைத்தொழில் பிலிப்பைன்சின் பாரம்பரியமற்ற ஏற்றுமதித் துறையில் முன்னணி இடத்தைப் பெற்றிருப்பதுடன், 10 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களைக் கொண்டிருப்பதன் மூலம் — அரசாங்கத்திற்கு வெளியில் — நாட்டின் மிகப் பாரிய தொழில் வழங்கு மூலமாகவும் இருக்கின்றது.

ஏனைய ஆசிய ஆடைத் தயாரிப்பாளர்களைப் போன்று, பிலிப்பைன்சும், மரபுரீதியான அபிவிருத்தியடைந்த நாட்டுச் சந்தைகள் மேற்கொள்கின்ற இறக்குமதிக் கோட்டாப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றது. பிலிப்பைன்சின் பல வகையான ஏற்றுமதிகளும் பங்கீட்டு எல்லையை அடைந்தமையால் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டது. ஆகையால், பிலிப்பைன்ஷின் ஆடை ஏற்றுமதி வகையீட்டினை மறுபரிசீலனை செய்யுமாறு இவ்வருடம் பெப்ரவரி மாதம் ஐ. அமெரிக்காவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தற்போது சந்தையில் உள்ள பல புதிய தயாரிப்பாளர்கள் இதனையொத்த நிலையை எதிர்நோக்கலாம். நாட்டின் ஆடை புடைவை ஏற்றுமதிச் சபையின் அதிகாரிகள் விதித்த பங்கீட்டிற்கேற்ப தமது உற்பத்தியையும், ஏற்றுமதியையும் மட்டுப்படுத்துவதில் பிலிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைன்ஸ் ஏற்றுமதியாளர்கள் பிரச்சினைக்குள்ளாகியுள்ளனர். பிலிப்பைன்சின் 1979 ம் ஆண்டிற்கான ஆடை ஏற்றுமதி அதற்கு முன்னைய வருடத்தை விடவும் 116 சதவீதம் அதிகமானதாகும்; ஏற்றுமதியும், வெளிநாட்டு விலை கோரல்களும் தொடர்ந்து அதிகரிக்க வருமானம் 7 கோடி டொலர்களாகவிருந்தது. ஒரு சில தயாரிப்பாளர்கள் மாத்திரம் இதனால் பயன் பெறலாமெனப் பயந்த அரசாங்கம் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டினை அமுலாக்கியது.

இவ்விதிகள் தொடர்பாக பிலிப்பைன்சின் ஏற்றுமதியாளர்கள் செய்த பிரதான முறைப்பாடு யாதெனில், 1979 ம் ஆண்டிற்குரிய ஒவ்வொரு பொருளினதும் கோட்டா 70 சதவீதமாக வீழ்ச்சியடைய நேரிட்டுள்ளது என்பதாகும். ஆனால், இம் மாற்றங்கள் அறிவிக்கப்பட முன்னர், ஏற்கனவே சில ஏற்றுமதியாளர்கள் தமது நிறுவனங்கள் பெற்ற விலை கோரல்களுக்கு ஒப்பந்தம் செய்திருந்தனர். இவற்றை எவ்வாறு நிறைவு செய்யலாம் என்ற இக்கட்டான நிலையில் இவர்களிருக்கின்றனர். அரசாங்கக் கொள்கையிலேற்பட்ட அசைவு காரணமாக, இவ்வருடம் தமது நிறுவனம் 100,000 சோடிகளுக்கும் மேற்பட்ட காற்சட்டை விற்பனையை இழந்துள்ளது என, பிலிப்பைன்சின் முன்னணி ஆடை ஏற்றுமதி நிறுவனமான லெவிஸ்ட்ரவ்ஸ் (பிலிப்) நிறுவனத்தின் பிரதான முகாமையாளர் கூறுகின்றார். பிரித்தானியாவில் மாத்திரம் 1979 ம் ஆண்டிற்கு அவரது நிறுவனம் பெற்றிருந்த 128,000 சோடி கோட்டா 76,000 ஆகக் குறைந்துள்ளதாக அவர் கூறினார்.

தமது நிறுவனம், ப்ளூமிங்டேல், போட் அன்ட் டெய்லர் போன்ற ஐ. அமெரிக்காவின் புகழ்பெற்ற விற்பனை நிறுவனங்களுக்கு அதன் முன்னைய வருட பங்குவீதத்தினை 1979 ம் ஆண்டிற்கும் தருவதாக வாக்களித்துள்ளதாக கிரீன்பீல்ட் கம்பனியின் முகாமையாளர் கூறுன்றார். தற்போது இவ்வர்த்தக நிலையங்கள், நத்தார் விற்பனைக்கான பட்டியலைத் தயாரிப்பதாகவும், அவர்கள் விளம்பரம் செய்யும் பொருட்களை வினியோகிக்க முடியாத நிலையில் தமது நிறுவனம் இருப்பதாகவும் அவர் கூறினார். ''அரசாங்க விதி இவ்வாறு கூறுகின்றது'' என அவர்களிடம் கூற முடியாது. வேறுஎந்த நாடும் இவ்வாறு செய்வதில்லை'' என அவர் கூறினார்.

இப் பொருட்கள் மீது கோட்டாக்களை விதிக்கின்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்ய உதவுமாறு பிலிப்பைன்சின் ஆடைத் தயாரிப்பாளர்கள் ஏசியன் (ASEAN) கூட்டிணைப்பைக் கேட்டுள்ளனர். ஏசியன் அமைப்பிலுள்ள புடைவை, ஆடைத் தயாரிப்பு நாடுகள், தமது உற்பத்திகளுக்கு இறக்குமதிக் கோட்டா வழங்கும் நாடுகளுடன் பிராந்திய அடிப்படையில் ஒப்பந்தம் செய்ய ஆரம்பித்துள்ளன. இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள உறுதியான முயற்சி யாதெனில், அடுத்த ஜனவரியில் ''ஏசியன்'' கூட்டிணைப்பிலிருக்கும் உற்பத்தியாளர்கள் யாவரும் மணிலாவில் ஒரு துணிமணிக் கண்காட்சியை நடத்த இணங்கியிருப்பதாகும். வளர்ந்து வருகின்ற கட்டுப்பாடு, போட்டி என்பவற்றிற்கு மத்தியில் நிலைமையைச் சமாளிக்கக் கூடிய ஆக்கபூர்வமான வழியாக, ஐந்து ''ஏசியன்'' நாடுகளும் நெருங்கி ஒத்துழைக்கலாம்.

தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஸ்ரீ லங்கா ஆகிய நாடுகளும் இத்தகையவொரு நிலையை எதிர்த்து நிற்கவேண்டியேற்படும். இவர்களுக்குப் பிரச்சினைகளிருந்த போதிலும், இவர்களனைவரும் தமது உற்பத்தி இயலளவினை விஸ்தரிப்பதிலும், ஏற்றுமதிச் சந்தைகளைத் தேடுவதிலும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

## இந்தியா

அபிவிருத்தியடைந்த நாடுகளின் பாதுகாப்புக் கொள்கை காரணமாக இந்தியாவின் பருத்திப் புடைவைக் கைத்தொழில் ஏற்றுமதியை அதிகரிப்பது மிகவும் கடினமாகவுள்ளது. இதனால் இந்தியாவின் கைத்தறித்துறை பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. ரூ. 221.37 கோடியாகவிருந்த இந்தியாவின் பருத்திக் கைத்தறிப் பொருள் ஏற்றுமதி, 1978-79 ல் ரூ. 4.19 கோடியாக வீழ்ச்சியடைந்திருப்பதனை இந்தியாவின் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்திக் கவுன்சில் வெளியிட்டுள்ள ஏற்றுமதிப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. ஏற்றுமதியில் எல்லையளவு வீழ்ச்சியேற்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வமான வட்டாரங்கள் கூறின. (பருத்திக் கைத்தறி ஆடை ஏற்றுமதி ஏறக்குறைய ரூ. 31 கோடியாக அதிகரித்த போதிலும்) ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக பொருட்களின் அடிப்படையிலான தரவுகள் காட்டுகின்றன. வேறு வார்த்தைகளில் கூறினால் பட்டுக் கைத்தறிப் புடைவை ஏற்றுமதியிலேற்பட்ட ரூ. 27 கோடி வீழ்ச்சியும், பருத்திக் கைத்தறி அணிகளிலேற்பட்ட ரூ. 8 கோடி வீழ்ச்சியும் ஆடை ஏற்றுமதி வருமான அதிகரிப்பினால் சமப்படுத்தப்பட்டது எனலாம்.

இங்கு அவதானிக்கப்பட வேண்டிய பிரதான அம்சம் யாதெனில் சென்ற ஐந்து வருடங்களாக இந்தியாவின் தயாரித்த ஆடைக் கைத்தொழில் முன்னொருபோதுமில்லாத வகையில் விஸ்தரிப்படைந்திருப்பதாகும். இன்று நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் அதற்குச் சந்தைகள் காணப்படுகின்றன. இவற்றுள் ஐக்கிய அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும் பிரதானமானவையாகும். சென்ற மாதம் இந்தியா ஜப்பானில் நடாத்திய முதலாவது உடுதுணிக் கண்காட்சியின் வாயிலாக அந் நாட்டு சந்தையில் உறுதியான இடத்தைப் பெறுவதற்காக முதலடி எடுத்து வைக்கப்பட்டது. இதுகால வரையும் ஜப்பானியச் சந்தையை இந்தியக் கைத்தொழில் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என இவ்வைபவத்தின் போது உரையாற்றிய இந்திய அரசாங்கப் பேச்சாளர் கூறினார். உதாரணமாக, ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா என்பவற்றிற்கான இந்தியாவின் வருடாந்த ஆடை ஏற்றுமதி முறையே 16 கோடி, 5 கோடி டொலர்களாகவிருந்த அதே வேளை, சென்ற வருடம் ஜப்பானின் பங்கு 80 லட்சம் டொலர்களாகவிருந்தது என அவர் கூறினார். ஆடை ஏற்றுமதி மூலம் வருடாந்தம் 100 கோடி டொலர் இலக்கினை எய்துவதே இந்தியாவின் நோக்கமாகும்.

## பாகிஸ்தான்

ஜவுளி, தயாரித்த ஆடை ஆகிய துறைகளில் பாகிஸ்தானும் புதிய நம்பிக்கை வைத்துள்ளது. பாகிஸ்தானின் ஜவுளிக் கைத்தொழில் சென்ற ஐந்து வருட கால மந்த நிலையிலிருந்து மீட்சி பெறுவதற்கான அடையாளங்களைக் காட்டுவதாக அரசாங்க அறிக்கைகள் கூறுகின்றன. ஏற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப் பெறுமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு, உயர்வான சர்வதேச விலைகள் என்பன காரணமாக 1978 செப்டம்பரிலிருந்து 1979 பெப்ரவரி வரை பாகிஸ்தானின் முறுக்கு நூல் ஏற்றுமதி மாத்திரம் 27 சதவீதம் அதிகரித்திருப்பதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

பாகிஸ்தானின் தயாரிக்கப்பட்ட ஆடைகள், துவாலை, பின்னல் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி தொடர்ந்தும் சாதகமான போக்கினைக் காட்டியதாக அரசாங்க அதிகாரியொருவர் கூறினார். இக் காலக்கட்டத்தில் இப்பொருட்களின் பெறுமானம் முன்னைய வருடத்தை விடவும் 23 சதவீதத்தினால் அதிகரித்திருக்கின்றது என்றும் அவர் சொன்னார். ''தற்போதைய உறுதியான நிலைமை தொடருமாயின் பாகிஸ்தானின் பொருளாதாரத்தில் பருத்தி, பருத்தித் தயாரிப்புக்கள் என்பவற்றின் பங்கு வெகு விரைவில் அதன் ஆரம்பகால நிலைக்கு மீட்சி பெறும்'' என அமைச்சரவையின் பொருளாதார ஒருங்கிணைப்புக் குழு நம்பிக்கை தெரிவித்தது. 1972 ற்கு முன்னர் பருத்தியும், பருத்தித் தயாரிப்புக்களும் பாகிஸ்தானின் பாரிய ஏற்றுமதிப் பொருட்களாக விளங்கின.

அபிவிருத்தியடைந்த நாட்டுச் சந்தைகளில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புக் கொள்கைகளையடுத்து ஏற்றுமதி நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் மீது கோட்டா முறை பிரயோகிக்கப்பட்டது. உறுதியாக ஸ்தாபிதமடையாத பங்களாதேஷ், ஸ்ரீ லங்கா போன்ற ஆடையுற்பத்தி நாடுகள் மீது கோட்டா முறை அமுலாக்கப்பட்ட போதிலும், நன்கு ஸ்தாபிதமடைந்த ஏற்றுமதி நாடுகள் இதனால் பெருமளவு பாதிக்கப்பட்டன. ஸ்ரீ லங்கா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் தமக்கு வழங்கப்பட்ட கோட்டாவினைக்கூட வழங்கும் நிலையிலிருக்கவில்லை. எனவே இத் துறையில் நன்கு ஸ்தாபிதமடைந்துள்ள உற்பத்தியாளர்கள், இந் நிலைமையின் மூலம் கூடிய பயனைப் பெறும் நம்பிக்கையில் இந் நாடுகளுக்குள் நுழைகின்றனர்.

**பங்களாதேஷ்**

பாதுகாப்புக் கொள்கை அதிகரித்து வருகின்ற இந்த யுகத்தில், பங்களாதேஷ் பொருட்கள் மீது மேற்கத்திய நாடுகள் மிகக் குறைந்தளவு தடைகளையே மேற்கொள்கின்றன என்ற பிரச்சாரத்தை வெளிநாட்டு மூலதனத்தைக் கவரும் வகையில் பங்களாதேஷ் வலியுறுத்துகின்றது. அண்மையில், ஐக்கிய அமெரிக்க அரசாங்க உதவியுடன் மீண்டும் ஏற்படுத்தப்பட்ட கடல்கடந்த முதலீட்டுக் காப்புறுதி, அமெரிக்க முதலீட்டாளர்கள் தமது மருந்துப் பொருட்கள், ஆடையணிகள் என்பவற்றுடன் ஏனைய சில கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்வது தொடர்பாக சிந்திக்க வைத்துள்ளது. தென் கொரியா முதலீட்டாளர்கள் ஏற்கனவே ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவியிருப்பதுடன், ஹொங்கொங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் ஆடைத் தயாரிப்பாளர்கள் கூட்டு முயற்சிகள் ஆரம்பிப்பது தொடர்பாக தீவிரமாக ஆராய்வதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. மேலும், பங்களாதேஷின் ஏற்றுமதி முன்னேற்றமடைந்து வருகின்றது. பங்களாதேஷின் பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்களுள் தயாரித்த ஆடைகள் முதலிடம் வகிக்கின்றன.

**இலங்கை**

இச்சூழ்நிலையில் இலங்கையின் நிலை என்ன? 1980 - 1982 ற்கிடையில், அபிவிருத்தியடைந்த நாட்டுச் சந்தைகள் மீதான இலங்கையின் பங்கு குறைவடையுமென தற்போதைய மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் இலங்கையின் உற்பத்தி இயலளவு திட்டமிடப்பட்ட சந்தைப்படுத்தல் அளவை விடக் கூடுதலானதாக இருக்கும். எமது அடுத்து வரும் இதழ்களில் இலங்கை நிலைமை விரிவாகப் பரிசீலனை செய்யப்படும்.

**பெருந்தோட்டப் பயிர்கள்**

# தேயிலை அபிவிருத்திப் பெருந்திட்டம்

இலங்கையின் தேயிலை கைத்தொழில் அபிவிருத்திக்கென அண்மையில் வெளியிடப்பட்ட பெருந்திட்டம், தேயிலை உற்பத்தியை விஸ்தரிப்பதில் ஒரு தீவிரக் கொள்கையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

கனேடிய ஆலோசகர்கள் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்ட இப் பெருந் திட்ட அறிக்கை, ''அனைத்துப் பொருளாதார அளவுகோல்களின்படியும் தேயிலை இலங்கையின் மிக முக்கியமான தனியொரு கைத்தொழில்'' என மதிப்பிட்டுள்ளது. தேயிலைக் கைத்தொழிலானது நாட்டின் மொத்த உழைப்பாளர் தொகையில் ஆறில் ஒரு பங்கினருக்கு தொழில் வாய்ப்பினை வழங்கியுள்ளது. மேலும், மொதத உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதத்தையும், நாட்டின் வெளிநாட்டு செலாவணியின் அரைப்பங்கிற்கும் மேற்பட்ட தொகையையும், அரசாங்க வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கினையும் அது பெற்றுத்தருகின்றது. ''உலகின் எப்பகுதியிலும் எந்தவொரு பெரிய அளவிலான பயிர்ச் செய்கையிலும் பார்க்க, தலா ஒரு ஹெக்டார் நிலத்தில் ஆகக்கூடிய வருமானத்தையும், வேலை வாய்ப்பையும் தேயிலை உருவாக்கித் தருகின்றது. இப் பின்னணியில் பார்க்கும் போது அரசாங்கத்தின் பொதுவான எதிர்மறை மனப்பாங்கை புரிந்துகொள்ளச் சற்றுக் கஷ்டமாக இருக்கின்றது என இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

இப் பெருந்திட்டம் சார்ந்துள்ள புதிய உத்வேகத்துடனான அணுகுமுறை, தேயிலைச் செடிகளின் அடர்த்தியை அதிகரிப்பது, புதிய காணிகளில் மறுநடுகை செய்து, தேயிலை தொழில்சாலைகளை நவீனமயப்படுத்துவது, உயர்ரக பசளைப்பிரயோகம், வீடமைப்பு நிலைமைகளில் அபிவிருத்தி போன்ற அம்சங்களை சிபாரிசு செய்தது.

மறு நடுகையையும், அதன் விளைவாக தேயிலைச் செடிகளின் அடர்த்தியை பராமரிப்பதில் உள்ள இயலாமையையும் ஒரு பாரதூரமான தவறு என இவ்வறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. ''நிலையான பராமரிப்பை அலட்சியம் செய்தமை, முகாமைத்துறையில் கடந்த இரு தசாப்தங்களில் ஏற்பட்ட மிக மோசமான ஒரு தோல்வியாகும்.'' வருடாந்தம் 2 சதவீதமான தேயிலை நிலங்களில் மறு நடுகை செய்வதில் கவனம் செலுத்தியதன் மூலம்

(அடுத்த பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இது எய்தப்படாத ஒரு இலக்கு) வெற்றிடங்களை நிரப்புவதில் உள்ள அலட்சியம் தெரிய வந்தது.

இன்று தேயிலை கைத்தொழிலில் அரசாங்கததுறையே பெரும் பங்கினை வகிக்கின்றது. அரசாங்கத் தோட்டங்கள் ஏறக்குறைய 62 சதவீதமான தேயிலை நிலத்தையும், 80 சதவீத மொத்த தேயிலை உற்பத்தியையும் கொண்டுள்ளது. ஏறக்குறைய 20 சதவீத தனியார் தேயிலை நிலங்கள் 4 ஹெக்டார்களுக்கும், (10 ஏக்கர்) குறைவான சிறு நிலத் துண்டுகளாகவும், 17 வீதமானவை 4 முதல் 20 ஹெக்டார்களுக்கு (10 முதல் 50 ஏக்கர்) இடைப்பட்ட துண்டுகளாகவும் காணப்படுகின்றன.

பெருந்தோட்ட அமைச்சு, ‘‘கூட்டுத்தாபனங்களோ அல்லது கைத்தொழிலோ என்ன செய்ய வேண்டும் என்பது பற்றித் திட்டமர்ன பணிப்புரைகளை தற்போது வழங்குவதில்லை’’ என அறிக்கை (அமைச்சைக்) கண்டனம் செய்கின்றது. உதாரணமாக, ‘‘உற்பத்தி, மறு நடுகை, உள்ளீடு, முதலீடு, தொழிலாளர் சேமநலன் அல்லது இலாபம் போன்றவை தொடர்பாக திட்டமான இலக்குகள் வழங்கப்படவில்லை. கூட்டுத்தாபனங்கள் திறமையாக நிர்வகிக்கப்பட வேண்டும் எனும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, எழுத்துமூலமல்லாத இலக்கு ஒன்று காணப்பட்டது; ஆயினும் இத்திறன், இலாபம் அல்லது உற்பத்தி எனும் வகையில் வரையறுக்கப்பவிடல்லை.

தற்போது உள்ள இரு கூட்டுத்தாபனங்களின் நிறுவன அமைப்பைத் தொடர்ந்தும் பாதுகாப்பதுடன், அவற்றின் உள்ளக அமைப்பையும், நிர்வாகத்தையும் முன்னேற்றத்துடன், உறுதிப்படுத்தவும் வேண்டும் என அறிக்கை வற்புறுத்துகிறது. இவ்விரு கூட்டுத்தாபனங்களும் மேலும் திறமையுடன் இயங்குவதற்கு உதவுவதன் மூலம் எதிர்பார்க்கக்கூடிய குறுகிய கால, நனமைகளை பெறுவது நிச்சயமென்பதுடன், இக்கூட்டுத்தாபனங்களை சிறு பிரிவுகளாகப் பிரித்து நடத்துவதன் மூலம் விளையக்கூடிய நலன்கள் ஐயத்துக்கிடமானவை என்றும் அறிக்கை சுட்டிக்காட்டுகினறது.

பிராந்திய முகாமையாளர்கள் ஏஜென்சி நிலையங்களின் இயக்குனர்களுக்கு இணையானவர்களாயினும், பிராந்தியங்களில் அவர்கள் பெற்றுள்ள இடம் அவர்களது அந்தஸ்தை உயர்த்துகின்றது என அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிராந்திய முகாமையாளர்கள் தோட்டங்களுக்கு அண்மையில் இருப்பது, குறுகிய கால அறிவித்தலில் அவர்கள் வந்து சேரக்கூடிய வசதியை அளிப்பதுடன், தமது பிராந்திய தோட்டங்கள் பற்றிய மிகவும் சிறப்பான அறிவினைப் பெறவும் உதவுகின்றது.

சிறு தேயிலைத்தோட்ட உரிமையாளர்களில் விசேட கவனம் செலுத்துகின்ற நிறுவன அமைப்புகளை அபிவிருத்தி செய்வது பற்றியும் அறிக்கை சிபாரிசு செய்துள்ளது. அத்தகைய அமைப்புகள் தொடர்ந்து அதிகரித்து வரும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நன்மை புரிவதுடன், சில தோட்டங்களை அவற்றின் திறமை குறைந்து விடாமல், பெருந்தோட்ட நிர்வாகத்திலிருந்து சிறு தேயிலை தோட்ட நிர்வாகத்திற்கு அல்லது உரிமைக்காவது மாற்றக்கூடிய தகுதி பெற்றிருக்கவும் வேண்டும் என அறிக்கை குறிப்பிடுகிறது. திட்டத்தின்படி, ‘‘பச்சைத் தேயிலையை உற்பத்தி செய்வதில் சிறு தேயிலைத் தோட்டங்கள் பெருந் தோட்டங்களுடன் வெற்றிகரமாக போட்டியிட முடியும். அறிக்கையின் இந்த அம்சம் ஓர் இலட்சிய நிலையாக தோன்றுகிறது. ஏனெனில், பெருந் தோட்டங்கள் தனியார் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்ட காலத்தில் சிறு தேயிலைத் தோட்டங்களைப் பார்க்கிலும் பாரிய தோட்டங்கள் கைத்தொழிலில் அதிக திறமையுடன் செயற்பட்டமை வெகுவாக விளக்கிக் காட்டப்பட்டது. அத்துடன பெரிய, தோட்டங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு, தொழிலாளர்களின் சேமநலனுக்கான நன்மையளிக்கும் திட்டங்களும் குறைவாகவே இருந்தன.

உயர் நில, இடைநில, தாழ் நிலப் பகுதிகளைச் சேர்ந்த 12 தோட்டங்களின் தொழிலாளர் நிலைமைகள் பற்றிப் பெருந் திட்டம் ஆராய்ந்தது. இவற்றில் நான்கு தோட்டங்கள், தாயகம் மீளும் தொழிலாளர் காரணமாக ஏறக்குறைய அரைப் பங்கு தொழிலாளரை இழந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. ஆயினும், இந்த இழப்புகள் உள்ளே ஏற்பட்ட இடப் பெயர்ச்சியினாலும், இயற்கையான தொழிலாளர் வளர்ச்சியினாலும் ஈடு செய்யப்பட்டன. எனினும், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தினபடி தாயகம் திரும்ப எதிர்பார்க்கப்பட்ட தொகை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், மோசமான தொழிலாளர் பற்றாக்குறை உருவாகியிருக்கும். மலைநாட்டுப் பகுதிகளிலும், பக்கத்தில் கிராமங்கள் இல்லாத தோட்டங்களிலும் தொழிலாளர் பற்றாக்குறை தெளிவான விடயமாகி வருகின்றது. சிங்களத் தொழிலாளரை வேலைக்கமர்த்துவதை அதிகரிக்க வேண்டும் என அறிக்கை சிபாரிசு செய்கின்றது. தமிழ்த் தொழிலாளரை மேலதிகமாக உள்ள பகுதிகளிலிருந்து பற்றாக்குறை பிரதேசங்களுக்கு நகர்த்துவது பற்றியும், உற்பத்தியையும், வேலைப் பயன்பாட்டு மட்டத்தையும் அதிகரிப்பது பற்றியும் சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன. ஆண், பெண் தொழிலாளர்களின் சம்பள வீதங்களை சமப்படுத்துவதும், கொழுந்து பறிக்கும் ஊக்குவிப்பு வீதங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதும், பறிக்கும் கொழுந்தின் நிர்ணய இலக்குகளில் மாற்றங்களைச் செய்வதும், தொழிலாளர் உற்பத்தியில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய பல வழிகள் என கூறப்பட்டுள்ளது. தேயிலை போன்ற பொது உரிமைக் கைத்தொழில் ஒன்றின் வரியமைப்பு முறை பொருத்தமற்றதென பெருந் திட்டம் கருதுகிறது. ஏற்றுமதி வரியும், பெறுமதிக்கேற்ற வரியும் விலை குறைந்த தேயிலைகளுக்கு உயர்ந்த வீத வரிச் சுமைகளை ஏற்படுத்துவதனால் அவை உற்பத்தியாளர்களுக்கு எதிராக செயற்படுகின்றன என அறிக்கை மேலும் சுட்டிக் காட்டியது. இதன் விளைவாக விலைகளில் தளம்பல்கள் ஏற்படுவதுடன், குறைந்த தரமுள்ள தேயிலைகளுக்கான கிராக்கியை அவை அழிந்து விடவும் வழி வகுக்குகினறன.

ஏற்றுமதி வரியை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக நில வள வரி ஒன்றை ஏற்படுத்துவதும் வரி சிபாரிசுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. கிலோகிராம் ஒன்றுக்கு 4 ரூபாவுக்கும் 6 ரூபாவுக்கும இடையிலான பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளக்கூடிய உற்பத்திகளுக்கு நிலையான செலவாக இந்த வரி அமையும். நிறுவனம் மீதான வரி அகற்றப்பட்டு அந்த இடத்தை பெறுமானத்துக்கேற்ற வரி நிறைவு செய்யும். பெறுமானத்துக்கேற்ற வரி அதன் குறைந்தம்ச அளவாக தேயிலை உற்பத்தி

(தொடர்ச்சி 21ம் பக்கம்)

# இந்தியாவின் அபிவிருத்தி உபாயங்கள்

## சுதந்திரத்துக்குப்பிற்பட்ட குழப்பமான நிலைமைகள் குறித்த ஒரு பரிசீலனை

—கல்வின் குமாரசிங்க

1977 ன் பொதுத் தேர்தல், இந்திய அரசியலில் நீண்ட காலமாக தனிப் பெரும் பலம் பெற்றுவிளங்கிய காங்கிரஸ் கட்சியினை வீழ்த்தியது; முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், அந் நாடு சுதந்திரம் பெற்றது முதல் இக்கட்சியே தொடர்ந்து ஆட்சி லகானைக் கையில் வைத்திருந்தது. இக்கட்சியை அகற்றி ஆட்சிக்கு வந்த ஜனதாக் கட்சியும், அதற்கு முன்னர் பதவியிலிருந்த கட்சிகள் எதிர்நோக்கிய எதிர்மாறுன நிலைமைகளையே சமாளிக்க வேண்டியிருந்தது. இந்நிலையில் எவ்வித மாற்றமும் இதுவரை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. 'பொருளியல் நோக்கின்' சிங்கள் வெளியீடான 'ஆர்திக விமசுமா' வின் ஆசிரியர் குழுவில் ஆரம்பத்திலிருந்தே பணிபுரிந்து வரும் திரு. கல்வின் குமாரசிங்கா, (இந்தியாவின் அண்மைய மிக மோசமான அரசியல் நெருக்கடிக்கு முன்னர் எழுதப்பட்ட) இக்கட்டுரையில் தமக்குப் புதிராக இருக்கும் இந்திய அவிருத்தி உத்திகளை விளக்குகின்றுர்.

''மூன்றும் மண்டல நாடுகளானவை, தமக்கேயுரிய வறுமை நிலை, தற்போதைய அபிவிருத்தித் தரம் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு, அவற்றுக்கு முரணில்லாத ஒரு வாழ்க்கை முறையை முதலில் உருவாக்கிக் கொள்ள வேண்டும்; இதனை விடுத்து கானல் நீர் போன்ற மேற்கத்திய வாழ்க்கைத் தரங்களைக் கைக்கொள்ள முனைதல் தவறு. ஆகக் கூடிய மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதத்தை இலக்காகக் கொண்டன்றி, அபிவிருத்திச் செய் முறையில் பெரும்பான்மை மக்கள் பங்கு பெறுதல் நோக்கமாகக் கொண்டே அபிவிருத்தியானது அமைய வேண்டுமென்பதையே இது குறிக்கிறது. அதிகரிக்கும் உற்பத்தியானது, சலுகை பெற்ற ஒரு சிறு வகுப்பினரால் சுருட்டிக் கொள்ளப்படுவதை இது தடுக்கும். மக்களது ஆக்கபூர்வமான சக்திகளைப் பயன்படுத்தி, வறுமைக்கெதிராக ஒரு நேரடித் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதையும் இது குறிக்கிறது. உள்ளூர் நிறுவனங்களிலும், துரிதமான தொழில் நுட்பத் திறனிலும் தங்கியிருத்தலையும் இது ஓரளவு வலியுறுத்துகிறது. புதிய அபிவிருத்தி உபாயமானது, 'மக்களைச் சுற்றி' அபிவிருத்தியைக் கட்டியெழுப்ப வேண்டுமேயன்றி, அபிவிருத்தியைச் சுற்றி மக்களைக் கட்டியெழுப்பக் கூடாது. பெரும்பாலும் உள்ளூர் வளங்களினதும், முயற்சிகளினூடாகவே இதனை எய்த வேண்டியுள்ளது.''

— சுவீடனின் டாக் ஹமர் ஷீல்ட் மூலாதார நிலையக் கருத்தரங்கொன்றில், பாகிஸ்தானின் பொருளாதார நிபுணர் மஹ்பூபுல் ஹக்.

அபிவிருத்தியைப் பற்றிப் பேசும் ஒருவர், உலக வங்கியின் கொள்கைத் திட்டமிடல் பணிப்பாளரான ஹக்கின் இக் கருத்தைச் சுட்டிக் காட்டல் இயல்பானதாகும். புதிய சர்வதேச பொருளாதார அமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென்று கடுமையாக முயற்சி செய்து வருவோரின் சிந்தனைகளில் இவரது கருத்தும் — இதே போன்று அபிவிருத்தியடைந்த, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்த ஏனைய தாராண்மை வாதிகளின் கருத்துக்களும் — காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. புதிய பொருளாதார அமைப்பையும், மேற் கூறிய அபிவிருத்தி முறையையும் உருவாக்க வேண்டுமென்று வாதிட்டு வந்த வளர்முக நாடுகளுள் இந்தியா முன்னணியில் இருந்து வந்துள்ளது. எனவே, அபிவிருத்தியை— இப் ''புது அர்த்தத்தை'' க் கொண்ட அபிவிருத்தியை அல்லது புதிய அபிவிருத்தி உபாயங்களை'' — நோக்கிய இந்தியாவின் பாதையில் அது கைக்கொண்டுவரும் முறைகளை ஆராய்தல் பெரு நன்மை தரும்.

### காதி அமைப்பு

சுய சார்பு என்பதையே 'காடி' என்ற வார்த்தை குறித்து நிற்கிறது. எமக்கு நாம் உதவி புரிந்து கொள்வதென்பதே இதன் பொருள். பல வருடங்களாக மற

[முன்பக்கத் தொடர்ச்சி]

யின் சராசரி செலவை கொண்டிருப்பதுடன், அதன் அளவு 50 சதவீதமாக தொடர்ந்துமிருக்கும்.

தேயிலை மீது உயர்ந்த பங்கு வரி விதிப்புகள் மேற்கொள்ளப்படுவதால், கொழும்பு கப்பற்றளம் வரையிலான விற்பனைகளின் சராசரி விலைகள், மானியம் வழகப்படாத சராசரி உற்பத்திச் செலவுகளிலும் பார்க்க அதிகமாக இருக்கின்றதா என்பதனை அளவுகோலாகக் கொண்டே தேயிலைத் தோட்டங்களின் சாத்தியத் தன்மையை மதிப்பிடுதல் வேண்டும்.

குழு மேற்கொண்ட செலவு ஆய்வுகளிலிருந்து மிகக் குறைந்த உற்பத்தியை தருகின்ற தேயிலைத் தோட்டங்கள் கூட, நிதி ரீதியில் இழப்பைக் காட்டினுலும் இலங்கைக்கு பொருளாதார வருவாய்களை வழங்கும் சாத்தியமுடையவை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தேயிலையின் குறைந்த பொருளாதார வருவாய் என்பதை விட, முதலீட்டு வளங்களின் பற்றுக்குறையே முக்கியமான தடை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆறு தொகுதிகளைக் கொண்ட பெருந்திட்ட அறிக்கை இலங்கை அரசாங்கம் கனேடிய சர்வதேச அபிவிருத்தி சபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் ஹெட்லின் மெஞ்ஜீஸ் அன்ட் அசோசியேட்ஸ் எனும் கனேடிய நிறுவனத்திஞல் தயாரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கப்பட்டிருந்த இக் காந்தியக் கொள்கை இப்போது மீ டும் உயிர் பெற்றுள்ளது. இந்தியப் பொருளாதாரமானது அளவுக்கு மீறிய அளவில், நகர்ப்புறங்களைச் சார்ந்ததாக அமைந்திருந்தது; ஏற்கனவே வறுமையுற்றுக் காணப்படும் கிராமங்களுக்கும் இலட்சக் கணக்கான சலுகையற்ற நகர்ப்புற மக்களுக்கும் இது பெரும் பாதிப்பாக அமைந்தது. எனவே, எல்லா மக்களதும் நலனைக் கருத்திற் கொண்டு, இந்தியப் பொருளாதாரம் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டுமாயின், நிலமற்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்கள், சிறிய மற்றும் விவசாயிகள், சிறு அளவுக் கைத்தொழிலாளர்கள் முதலிய சகலரதும் நிலை உயர்த்தப்படுதல் வேண்டும். இந்தியாவின் 63.2 கோடி மக்களுள் 80 சதவீதத்தினர் கிராமப் பகுதிகளில் வாழ்ந்தாலும் கூட, அப்பகுதிகளின் பிரச்சினைகள் இன்னும் போதுமான அளவு கவனத்திற் கொள்ளப்படவில்லை. இந்தியாவின் கலாசாரம், ஒரு கிராமியக் கலாசாரம் என்பதையும் இதனை எவரும் மாற்ற முடியாதென்பதையும் தற்போதைய அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. "இதனை மாற்ற முயலுபவரே அழிவுக் காளாவார்" என பிரதமர் மொரார்ஜி தேசாய் கூறியமை இங்கு நினைவு கூரத்தக்கது.

இந்தியாவின் விடுதலை இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு காணப்பட்ட இருவர் மகாத்மா காந்தி, நேரு என்போராவர். இந்திய மக்களுக்கு விடுதலையளித்து, நாட்டைச் சுய தேவைப் பூர்த்தியை நோக்கி இட்டுச் செல்ல வேண்டுமென்ற குறிக்கோள்களில் அவர்கள் ஒருமித்த கருத்தைக் கொண்டு காணப்பட்ட போதும், அவர்கள் தெரிவு செய்த முறைகள் வேறுபட்டவை. காந்தியைப் பொறுத்தளவில், கிராமங்களின் அபிவிருத்தியே நாட்டின் அபிவிருத்தியாக விருந்தது. இக் குறிக்கோளை எய்த, கிராமங்கள் தமது தேவைகளை தாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டுமென அவர் கருதினர். கிராமங்களை அவர் வெவ்வேறு அலகுகளாகக் கருதி, அபிவிருத்தியானது, கிராம மட்டத்தில் அமைந்ததாக இருக்க வேண்டுமென விரும்பினர். அத்துடன் அவரது சொந்த ஆளுமையும், வாழ்க்கைத் தத்துவமும் விவசாயப் பாட்டாளி சமூகத்தினதும், கலாசாரத்தினதும் பெறுமானங்களைப் பிரதிபலிப்பனவாக அமைந்திருந்தன.

நேருவோ வித்தியாசமான கருத்தைக் கொ டிருந்தார். காங்கிரஸ் கட்சித் தலைவர்களுட் பெரும்பாலோர் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், அக் கொள்கையில் நம்பிக்கையீனத்தைத் தெரிவித்திருந்த போதும், 1955 ல் அவர், கட்சியானது ஜனநாயக சோஷலிசக் கொள்கையை அதன் இலக்காகக் கொள்ள வேண்டுமென்பதை கட்சி ஏற்று அங்கீகரிக்கச் செய்தார். சில தலைவர்கள் தங்கள் வாழ் நாள் பூராவும் இக் கொள்கையை நிராகரித்து வந்துள்ளனர். ஆனால், அவர் இந்தியாவை நவீனமயப் பாதையில் ஸ்திரமாக நிலை நிறுத்தி, சோஷலிசக் கொள்கையில் காங்கிரஸ் கட்சியை நிலைக்கச் செய்தார். இவ்வகையில், மத்திய (அரசின்) திட்டமிடல், பிரமாண்டமான பொதுத்துறை முதலீடு, பாரிய மூலதனச் செறிவுமிகு கைத்தொழில், கூட்டுறவு உற்பத்தி முறைகள் போன்றன இதன் விளைவாக ஏற்பட்டவை. எனினும், இந்தியாவின் பணக்கார வர்க்கத்தவருக்கும், வறிய மக்கட் பிரிவினருக்குமிடையே வளர்ந்து வந்த வருமானச் சமமின்மையைக் குறைக்கவோ, பெருகிவரும் வேலையின்மைப் பிரச்சினையை நிவர்த்திக்கவோ, அல்லது ஏதாவதொருவகையில் வறுமைப் பிணியை அகற்றி விடவோ உதவவில்லை. நேருவின் கொள்கையில் காணப்பட்ட நல்ல அம்சங்கள் பல காலத்துடன் கரைந்து விட்டன: 1976 ல் பழைய காந்தீய வாதிகள் இந்தியமக்களது பெருமளவு ஆதரவைப் பெறக் கூடியதாக விருந்தனர். ஜனதா கட்சி பெரும் ஆதரவுடன் பதவிக்கு வந்த போது, அதன் பிரதமர், அவரது அரசாங்கத்தின் அணுகு முறையையும், தேர்தலில் பாரத மக்கள் அளித்த தீர்ப்பைப் பற்றித் தாம் என்ன கருதினரென்பதையும் பின்வருமாறு தெரிவித்தார்: "காந்தி காட்டிய வழியிலிருந்து நாமனைவரும் சற்று பிறழ்ந்து நடந்துள்ளோம் என நான் உணர்கிறேன்; பாபுஜி எமக்குப் போதிக்க முனைந்தவற்றை நாம் கற்றுக் கொள்ளவில்லை."

ஏனைய வளர்முக நாடுகளைப் போன்று, இந்தியாவில் மிக அவசரமாகக் கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினை, மிகப் பெரும்பாலான மக்களிடம் காணப்படும் குறைந்த வாழ்க்கைத் தரநிலையெனலாம். இந்தியர் ஒருவரின் சராசரி தலா வருமானம் 1976 ல் சுமார் 150 அமெரிக்க டொலராக மட்டுமே காணப்பட்டது. உலகின் மிக வறுமைப்பட்ட நாடுகளுள் ஒன்றாக இந்தியா காணப்படுகின்றது. நகரங்களைவிட கிராமப்பகுதிகளில் தலா வருமான மட்டம் வெகு குறைவாகக் காணப்பட்டது. மாகாணங்களில் பணக்கார விவசாயிகள் சர்வசாதாரணமாகக் காணப்பட்ட போதும் இந்நிலையில் மாற்றங்கள் காணப்படவில்லை. நாட்டின் ஜனத்தொகையில் அரைப் பங்கினருக்கும் கூடிய தொகையினர் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே வாழ்க்கை நடத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராம மட்டத்தில் பெரு உற்பத்தி முறைகளைக் கையாளல், கிராமிய விவசாயிகள், சிறு வினைத் திறன் தொழிலாளர்கள் ஆகியோரது தேவைகளைத் தீர்த்து வைப்பதில் முன்னுரிமை வழங்கல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இவ்வறுமை நிலைக்கு பாரியளவில் நிவாரணம் காணலாமென ஜனதா கட்சி திட்டமிட்டது. முன்னைய அரசாங்கமானது, தனது நவீன தொழில் நுட்பம், முதலீட்டு மாதிரிகள் என்பனவற்றின் காரணமாக, உள்ளூர் மக்களின் அடிப்படைத் தேவைகளை இனங்கண்டு தீர்த்து வைக்கத் தவறியது என ஜனதா அரசாங்கம் கூறியது. அத்துடன், கோடிக் கணக்கான மக்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கக் கூடிய வகையில், மத்தியப்படுத்தப்பட்ட பாரியளவு கைத்தொழில்கள் இருந்தனவென்றாலும், நாட்டின் வேலையின்மைப் பிரச்சினையை முற்றாகத் தீர்த்து வைக்கும் வகையில், இக் கைத்தொழில்களை நிறுவுவதற்குப் போதுமான நிதி மூல வளங்கள் நாட்டில் இல்லையெனவும் அக்கட்சி கூறியது.

இந்தியாவின் 45 கோடி கிராமிய ஏழை மக்களுடன் தொடர்புற்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஜனதாக் கட்சியின், 38 பக்க கொள்கை விளக்க அறிக்கை தெளிவாகக் காட்டிற்று. அத்துடன், நகர்சார் கைத்தொழில்களைவிட கிராமியக் கைத்தொழில்களுக்கு முன்னுரிமை, கைத்தொழிலை விட விவசாயத்துக்கு கூடிய முக்கியத்துவம் என்பனவற்றை உண்மையிலேயே வழங்கியது.

பண்ணைத் துறைக்கான அரசாசாங்கத்தின் முதலீடு 27 சதவீதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்து 40 சதவீதமாக அதிகரிக்க வேண்டுமெனவும், விவசாயிகளுக்கான கடன்களை வழங்கும் விஷயத்தில் மேலும் ஒரு தாராளக் கடன் கொள்கையொன்றுவகுக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது. கிராம மட்டத்தின் வங்கிக் கிளைகளால் சேமிக்கப்பட்ட கடன்கள் மீண்டும் அதே கிராமத்தின் விவசாயிகளுக்கு விவசாயக் கடனாக வழங்கப்படும்.

''வங்கித்துறை: அபிவிருத்திக்கான ஓர் ஆயுதம்'' என்ற தலைப்பில் இந்திய ஸ்டேட் வங்கியைச் சேர்ந்த டி. எஸ். ரோய் எழுதியுள்ள சட்டுரை யொன்றில், இந்தியாவின் 1 வது ஐந்தாண்டு திட்டத்தை மேற்கோள் காட்டி, இந்த யோசனை சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்டதெனக் கூறுகிறார். இது இப்போது தான் செயற்படுத்தப்படுகிறது போலத் தோன்றுகிறது. இதற்கொரு இலகுவான உதாரணமாக, கிராமியக் கைவினைஞர்கள் மறைந்து செல்லும் தமது கைத்தொழில்களைக் காப்பாற்றிக் கொள்ளக் கைகொடுத்து உதவும் திட்டம் அமைந்து காணப்படுகிறது. பணிக்க (பூர்வீகக் குடிகள்) குடும்பங்கள் கைத்தறித் துணிமணிகளை உற்பத்தி செய்ய கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளமை இதற்கு நல்ல தொரு எடுத்துக்காட்டாகும். இதே போன்று கிராமங்களைச் சேர்ந்த கொல்லர்கள், சப்பாத்துத் தைப்போர், தையற்காரர்கள் போன்ற எண்ணற்ற வகைத் தொழிலாளர்கள் தங்களது உற்பத்தியைப் பெருக்கவென, கடன் வசதிகள், பயிற்சி, ஆயுதங்கள், உபகரணங்கள் என்பன வெல்லாம் வழங்கப்படுகின்றன. கிராமப் பகுதிகளுக்கான இந்திய வங்கிச் சேவைகள், பெரும்பாலும் ஒரு சிறுபான்மைப் பிரிவினரின் ஏகபோகக் கட்டுப்பாட்டில் தங்கியிருந்தாலும் கூட, சில இந்திய வங்கிகள், தமது பழங்கால வங்கிக் கோட்பாடுகளைக் கைவிட்டு, நாட்டின் தற்போதைய சமூக பொருளாதாரத் தேவைகளுக்கேற்பத் தங்களை மாற்றியமைத்து, அபிவிருத்தி வங்கித் துறையில் தமது கவனத்தைச் செலுத்தி வருகின்றன.

காந்தியத் தத்துவங்களில் அபார நம்பிக்கை யுள்ளவரும் அவை அப்படியே பின்பற்றப்பட வேண்டுமென நம்புபவரும் தான், தற்போதைய துணைப் பிரதமரும், நிதி யமைச்சருமான சரண் சிங். நேரு கால காங்கிரஸ் அரசியல் வாதி யென்ற வகையில் இந்தியா எதிர்காலத்தில் எங்ஙனம் திகழ வேண்டுமென்ற இலட்சிய நோக்கொன்றைக் கொண்டிருந்தார் அவர். பாரிய கைத்தொழிலாக்கக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத அவர், ''திரும்பவும் கிராமத்துக்கே'' என்ற கொள்கைக்காகப் பலமாக வாதாடி வந்தவர். அவரது பொருளாதார நோக்கு, கடந்த ஆண்டு வெளிவந்த அவரது ''இந்தியாவின் பொருளாதாரக் கொள்கை: காந்திய மூலக் கொள்கைகள்'' என்ற நூலில் வெளியிடப்பட்டிருந்தது.

''பெரும்பாலான நாடுகளில், விவசாயம், தொழில் செறிவு மிகு கைத்தொழில்களின் அபிவிருத்தி என்பன முதலில் ஏற்பட்டன. மகாத்மா காந்தி முன்வைத்த இக் கொள்கைகள் பெருமளவு நன்மைகளைத் தந்துள்ளன'' என அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

மகாத்மாவின் உண்மையான சீடர்களுள் ஒருவராகத் தம்மை இனங் காட்டிக் கொள்ளுவதன் மூலம், அவர் ஒரு வகையில் ஜனரஞ்சகக் கொள்கையைப் பிரதிபலிக்க முயற்சி செய்கிறார் எனலாம். சிங்கின் பொருளாதாரக் கொள்கைகள் பற்றி அவரது நூல் மேலும் இப்படிக் கூறுகிறது:

''இந்நாடு அழிவிலிருந்து காப்பாற்றப்பட வேண்டின், அபிவிருத்தித் துறையில், நேருவின் கொள்கைகள் கைவிடப்பட்டு, காந்திய அணுகு முறை அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். அதாவது மீட்சிக்கு நாம் காந்தியடிகளிடம் திரும்பிச் செல்ல வேண்டும். இன்றைய இந்தியாவுக்கு மட்டுமன்றி, 2000 ம் ஆண்டின் இந்தியாவுக்கும் அவரது சிந்தனைகள் ஓரளவில் சம்பந்தமுடையனவாகக் காணப்படுகின்றன.''

இந்தியப் பொருளாதாரத்தில் அமைப்பு ரீதியான மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற அளவுக்கு சரண் சிங் வாதிடுகிறார். அவர் கூறும் பிரகாரம், இலட்சக்கணக்கான கிராமிய பாமர விவசாய சொந்தக்காரர்களும், (இவர்களே அவரது அதிகாரத்தின் அடிப்படையாக உள்ளனர்) சிறு அளவுக் கைத்தொழிலாளர்களும் ஒரு கம நல மானிய அமைப்பிலிருந்து பிரிந்து, ஜப்பானிய அமைப்பைப் போன்ற ஒரு முதலாளித்துவ அமைப்பொன்றை உருவாக்குதல் வேண்டும். ஆனல், காந்தியக் கொள்கைகள் பொதிந்தவையாக இவ்வமைப்புத் திகழ வேண்டும். இதே வேளை, இந்தியாவின் கிராமாபிவிருத்திக்கென சரண் சிங் கொண்டுள்ள எண்ணக் கருத்துக்கள் போன்ற கொள்கைகளை காந்தியடிகள் கொண்டிருந்திருப்பாரா என்ற விஷயம் குறித்து இப்போது சந்தேகம் கிளப்பப்படுகிறது.

எத்தகைய கலப்பு முயற்சிகளையும் விரும்பாத சிங்கின் போக்கு, நேருவின் கொள்கைகளை அவர் நிராகரிக்கிறார் என்பதற்குத் தெளிவான ஆதாரமாக விளங்குகிறது. அவர் கூறுவது இது:

''காந்தியக் கொள்கைகளை இந்தியா பாரதூரமாக வெறுத்தொதுக்கிய அதே சமயம், ஏனைய நாடுகள் — குறிப்பாக சீன, வியட்னும், தன்ஸானியா என்பன — காந்தியக் கொள்கைகளின் அடியமைந்த திட்டமிடல் எங்ஙனம் அடிப்படையில் வெற்றியைத் தருமென்பதை ஏனைய உலக நாடுகளுக்கு வெற்றிகரமாக உணர்த்தின. இந்தியாவுடன் ஒப்பிடுகையில், சீன அபிவிருத்தித்துறையில் வெற்றி பெற்றிருப்பின் அல்லது அந்நாட்டு மக்களது உணவு, உடை, வாழிட நிலைமைகள் இந்தியர்களை விட சிறப்பாகக் காணப்படின், காந்தியின் போதனைகளிலிருந்து அந்நாடு நிறையப் பாடங்கள் படித்துள்ள தென்பது ஒரு காரணமாகலாம்''

அண்மைய பேட்டி யொன்றில் கருத்துத் தெரிவித்த சிங், ஜப்பானிய அபிவிருத்தி நெறியையே தாம் இந்தியாவுக்கும் அறிமுகம் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

''1956 வரை ஜப்பானியப் பொருளாதாரமானது, குடும்ப முயற்சிகளைக் கொண்டதாகவே அமைந்தது. 1956 க்குப் பின்னரே கனரகக் கைத்தொழில்கள் அங்கு வந்தன. மூலதனம் சேர்ந்து, உழைப்பு பாவிக்கப்பட்டதுடன் அவர்கள் கனரகக் கைத்தொழில்களை நோக்கித் திரும்பினர். அதனைத் தொடர்ந்து ஏற்றுமதிச் சந்தைகளை அபிவிருத்தி செய்து கொள்ள அவர்களால் முடிந்தது. கால முழுவதும் மக்கள் விவசாயத்திலேயே தங்கியிருப்பதை நான் விரும்பவில்லை. விவசாய உற்பத்தி உயர வேண்டும்; அதன் மூலம் கிராமவாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களது வருமானம் பெருகி, கொள்வனவுச் சக்தி அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் விவசாயமல்லாத பொருள்களுக்கான கேள்வி பெருகி, கைத்தொழில், விவசாயமல்லாத பொருள்களின் உற்பத்தி கிராமங்களில் நிலை பெற்றுப் பெருகும். இதுவே ஜனநாயக நாடுகளிலெங்கும் காணப்பட்ட பொருளாதார அபிவிருத்திச் செய்முறையாகும்.''

பொருளாதாரச் சக்திகளைக் கருதிற் கொண்டு பார்க்கையில் இவ்வச்சம் மேலும் வலுவடைகிறது. இந்தியாவின் சக்திவாய்ந்த நகர்ப்புற மத்திய தர வர்க்கத்தவர் பெரும் வர்த்தகர்கள், குறித்த நலன்களை நோக்காகக் கொண்டு செயற்படுவோர் (இவர்களே சுமையைத் தாங்க வேண்டியவர்கள்) ஆகியோரது எதிர்ப்புகளை, — தமது புதிய கிராமிய முதலாளித்துவ அமைப்பை உருவாக்குவதில் — சரண் சிங் எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஜனதாக் கட்சிக்குள்ளே காணப்படும் கருத்து வேறுபாடுகளைக் கொண்ட சக்திகள் கூட இப் பொருளாதாரக் கொள்கையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுமெனக் கூற முடியாது. உண்மையில், ஜனதா அரசாங்கத்தைச் சேர்ந்த சோஷலிஸ்ட்டுகளைப் பொறுத்தளவில், சிங் முன் வைக்கும் தனியார் சொத்துடமையைப் பேணிப் பாதுகாக்கும் திட்டமானது பெரும் இக்கட்டான ஒரு நிலையைத் தோற்றுவிக்கலாம்.

(சரண் சிங்கின் அதிகாரக் கோபுரத்தின் அடித்தளமாக விளங்கும்) பணக்கார விவசாயிகளது (இவர்களைச சிறு முதலாளித்துவ வாதிகள், குலாக்ஸ் எனவும் அழைப்பர்) பக்கம் அதிகம் சார்ந்திருக்கும் சிங்கின் கொள்கைகளே ஆகப் பெருமளவு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. இவரது சிந்தனைப் போக்குக்கு பாமர விவசாயிகளிடமிருந்து — குறிப்பாகக் காணி நிலமற்ற விவசாயிகளிடமிருந்து — பெருமளவு எதிர்ப்பு தோன்றுமென்பது வெளிப்படை. ஏனெனில் இவ் விவசாயிகளது தியாகத்திலேயே மேற்சொன்ன 'குலாக்ஸ்' வர்த்தகத்தவரது முன்னேற்றம் ஏற்படும். 'பார் ஈஸ்டேர்ண் இக்கனமிக் ரிவியூ' சஞ்சிகைக்கு சரண் சிங் அண்மையில் அளித்த பேட்டியொன்றில் இத்தகைய ஒரு கொள்கையிலுள்ள உள்ளார்ந்த அபாயம் தெளிவாகத் தென்படுகிறது.

''பண்ணைகளோ, காணிகளோ இல்லாத பாமர விவசாயிகளின் நிலை என்ன?'' என்ற நிருபரது கேள்விக்குப் பதிலளித்த சரண், ''ஒருவன் காணி இன்றி இருப்பின் அவனை விவசாயி என்றழைக்க முடியாது; அவன் ஒரு பாமரன், உழவன்; எனவே அவனொரு தொழிலாளி. தொழிலாளிக்கு காணி வழங்குதற்கு காணி எதுவும் இல்லையே!'' என்று சொன்னார்.

கீழ்தத்ரக் குழுக்களைச் சேர்ந்த சிறிய பாமர விவசாயிகள் முற்று முழுதாகத் தம்மில் தங்கியிருக்கவோ, அல்லது அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளின் பலாபலன்களை முற்றுக அனுபவிக்கவோ முடியாத நிலையிலுள்ளனர் என்பது தற்போது அதிகமதிகமாக உணரப்பட்டு வருகிறது. சில வேளைகளில், இக் கொள்கைகளை அமுல் செய்வோரது, கவனம், அவர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பகுதிகளை விட்டும் அப்பால் திருப்பப்பட்டு விட்டதோ என ஐயுறத்தக்க வகையில் காணப்படுகிறது. செல்வாக்கு மிகு இந்திய பத்திரிகை ஆசிரியரும் விமர்சகருமான ரொமேஷ் தாப்பர் கூறியது இங்கு மேற்கோள் காட்டத் தக்கது:

''அன்ெருரு நாள், கல்விமான்கள், திட்டக் கமிஷன் உறுப்பினர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோர் நிறைந்திருந்த பொருளாதாரக் கொள்கை பற்றிய கருத்தரங்கொன்றில், இக் கருத்தரங்கில் கலந்து கொண்டோர் முதன் முதல் ஒரு கிராமத்துக்குச் சென்றது எப்போது என்ற கேள்வியை முன்னுள் அமைச்சர் தபாய் கேட்டார். இக் கருத்தரங்கு கிராமத்தைப் பற்றியதாகவே இருந்தது. நிரம்பி வழிந்த இக் கருத்தரங்கு அறையிலிருந்த ஒருவராவது கடந்த 10 ஆண்டுகளுக்குள் ஒரு கிராமத்துக்காவது செல்லவில்லையென எனக்குத் தெரிய வருகிறது. ஒருவர் அவரது சொந்தக் கிராமத்துக்கு 15 வருடத்துக்கு முன்னர் சென்றிருந்தார். பிரச்சினையின் அடிப்படையே இதுதான்! தாம் தொடர்ந்து வாழ்ந்து வரும் நகர்ப்புறத்தின் மிகச் சிறிய பிரச்சினைகள் குறித்தே சரியான விளக்கமற்றிருக்கும் பணித்துறை ஆட்சி அதிகாரிகள், கிராமம் பற்றி அறிந்திருப்பர் என்பதை எங்ஙனம் நாம் எதிர்பார்க்க முடியும். பணித்துறையாட்சியின் திறன்மிக்க அதிகாரிகள் மாவட்டங்களுக்கு வெளியே நகர்ப்புறங்களைத் தங்கள் தொழில் இடங்களாக மாற்றிக் கொள்ள முயலும் இன்றைய நிலையில், கிராமப் பகுதிகள் படிப்படியாக கைவிடப்பட்டு ஒதுக்கப்பட்டு வருகின்றன. எப்படியாயினும், வறுமையுற்ற இச் சமஷ்

**தலா மொத்த தேசிய உற்பத்தி 200 டொலருக்கும் குறைவான நாடுகள்**

| நாடு | தலா மொத்த தேசிய.உற்பத்தி (டொலரில்) | ஜனத் தொகை (பத்து லட்சங்களில் |
|---|---|---|
| சியாரலியோன் | 200 | 3.1 |
| ஸ்ரீ லங்கா | 200 | 14.0 |
| தன்ஸானியா | 200 | 15.5 |
| பெனின் | 200 | 3.3 |
| கம்பியா | 200 | 0.5 |
| பாகிஸ்தான் | 190 | 73.4 |
| ஆப்கானிஸ்தான் | 190 | 14.3 |
| கொமரோஸ் | 180 | 0.4 |
| வியட்னும் | 170 | 50.4 |
| நைகர் | 160 | 4.9 |
| மொஸாம்பிக் | 160 | 9.6 |
| கினி பிஸாவு | 160 | 0.9 |
| இந்தியா | 150 | 631.7 |
| மலாவி | 140 | 5.6 |
| பர்மா | 140 | 31.5 |
| கேப் வேர்ட் | 140 | 0.3 |
| ஸயரே | 130 | 6.1 |
| புருண்டி | 130 | 4.1 |
| சாட் | 130 | 4.2 |
| ருவண்டா | 130 | 4.3 |
| சோமாலியா | 110 | 3.7 |
| நேபாளம் | 110 | 13.1 |
| மேல் வோல்டா | 110 | 6.3 |
| எதியோப்பியா | 110 | 29.3 |
| மாலைதீவு | 110 | 0.1 |
| மாலி | 110 | 6.1 |
| வங்காளதேசம் | 90 | 82.7 |
| லாவோஸ் | 90 | 3.3 |
| பூட்டான் | 80 | 1.2 |
| சராசரி | 142 | மொத்தம் 1,043.9 |

மூலம்: 1978 உலக வங்கி வரைப்படத் தொகுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக் குடியரசில், தலை நகர்களில் தொழில் புரிவது பெரும் பலன்களையும் பரிசுகளையும் தரும் இன்றைய நிலையில், ஏன் ஒருவர் மாவட்டங்களில் — கிராமப் பகுதிகளில் — பணி புரிய முன்வர வேண்டும்? . . . . .''

ஜனதா அரசாங்கம் பின்பற்றி வரும் அபிவிருத்தி உபாயங்களில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளும், காலத்துக்குக் காலம் தோன்றிவரும் மாறுபாடுகளும் இவையே. எடுத்துக் காட்டாக, தொழிற் சங்கங்களின் ஒரு பிரிவினரின் சார்பாக, சில அமைச்சர்கள் மேற்கொண்ட தீவிரப் போக்கும், சில கைத்தொழில்களையும் பெரும் கைத்தொழில் நிறுவனங்களையும் தேசியமயமாக்க வேண்டுமென மேற்கொண்ட இயக்கமும் ஒரு புறமும், நிலச் சுவாந்தார்கள், பெரும் விவசாயிகள், கைத்தொழில் அதிபர்கள் முதலியோருக்கு ஆதரவு வழங்கியமை மறுபுறமும் காணப்பட்டமை இவற்றுள் வெளிப்படையானவை எனச் சுட்டிக் காட்டலாம். இவ்வகையில் பிரதமரே ஒரு இக்கட்டான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன், இவற்றை எங்ஙனம் சமாளிக்கிறார் என்ற விஷயத்தில் அவர் வெகு கவனமாக இருத்தல் வேண்டும். உதாரணமாக, நிதியமைச்சர் சரண் சிங் தமது அமைச்சில் எத்தகைய தலையீட்டையும் பொறுக்கமாட்டார்; அத்தகைய ஒரு நிலை ஜனதாக் கட்சியின் ஒட்டு வேலை செய்யப்பட்டுள்ள கட்சியின் சிதறலுக்கே வழி செய்யும். எனவே பிரதமர் மொரார்ஜியும் இவ்விபரீத விளையாட்டில் இறங்கமாட்டார்.

1977-78 ல் இந்தியா, மொத்த தேசிய உற்பத்தியில் விசாலமான முன்னேற்றத்தைக் காட்டியதுடன், வெளிநாட்டுச் சொத்து இருப்பில் ஒரு சாதனையையும் ஏற்படுத்தியது. மேலும், உலகின் கைத்தொழில் நாடுகளில் ஆறாவது ஸ்தானத்தையும் அது எட்டிப்பிடித்தது. ஆனால், கோடிக் கணக்கான அதன் கிராமியப் பாமர மக்களுக்கும், நகர்ப்புற வறிய மக்கட் பிரிவினருக்கும் இது எதனை குறிக்கிறது? இவ்வகையில் ஜனதாக் கட்சியின் கொள்கைக் கூற்று எத்துணை யதார்த்தமானதாக அமைந்தது? மேலே மேற்கோள் காட்டிய மஹ்பூபுல் ஹக்கின் கூற்று குறிப்பிடுவது போன்று, மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பை இலக்

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

# பண்ட உடன்படிக்கைகள்

## வளர்முக நாடுகளின் பேரம் பேசும் ஆற்றல், எதிர்கால வாய்ப்புக்கள் என்பன குறித்த ஒரு பரிசீலனை

— வாஸ் குணவர்தனா

பண்டங்கள் தொடர்பான பிரேரணைகள் உங்டாட் மகாநாட்டு நிகழ்ச்சி நிரல்களிலும் கலந்துரையாடல்களிலும் முக்கிய இடத்தைப்பிடித்து வருகின்றன. இவ்வருடம் மணிலாவில் நடைபெறும் 5 வது உங்டாட் மகாநாட்டிலும் இவ்விஷயம் முக்கிய இடத்தைப் பெறுமென்பது சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவாக தெரிகிறது. அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக, பண்டப் பிரச்சினைகள் சர்வதேச ஸ்தாபனங்களில் கலந்துரையாடப்பட்டும், கவனஞ் செலுத்தப்பட்டும் வந்துள்ளன. இத்துறையில் பல வருட கால அனுபவமிக்க, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) வாஸ் குணவர்த்தனா, பண்டங்கள் தொடர்பான துறைகளின் அபிவிருத்திகளை இங்கே சுருக்கித் தர முயல்கிறார்.

பண்ட ஒப்பந்தங்கள் பற்றிய பிரச்சினை ஜெனீவாவில் 1927 ல் நடைபெற்ற உலக பொருளாதார மகாநாட்டில் முதன் முதல் ஆராயப்பட்டது. நாடுகளின் கூட்டமைப்பின் (LEAGUE OF NATIONS) ஆதரவுடன் இம் மகாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. அக் காலத்திற் காணப்பட்ட சட்டவிதிகள் பிரத்தியேகமான தனிப்பட்ட அரசாங்கத் தொடர்பற்ற, ஒப்பந்தங்களாகவே காணப்பட்டன. 1933 அளவில் நாடுகளின் கூட்டமைப்பானது, நாணய பொருளாதார மகாநாடொன்றை லண்டனில் கூட்டிய போது, அரசாங்கங்களுக்கிடையேயான கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள், உற்பத்தியாளர்களது தொகை தொடர்பான ஏற்பாடுகளை விட (CARTEL) நிச்சயமாக மேலானவையாகவும் விரும்பத்தக்கவையாகவும் கருதப்பட்டன. முதலாவதாக பண்டமானது சர்வதேச வர்த்தகத்துக்கு அதி முக்கியமானதாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, இறக்குமதி செய்யும் நாடுகளில் நுகர்வு நலன்களின் கூட்டுறவை பாதுகாக்கவும், உற்பத்தியாளர்களின் ஆகக்கூடிய தொகையினரையும் உள்ளடக்கும் வகையில் இந்த ஒப்பந்தங்கள் அமைய வேண்டும். நியாயமான வருமானம் தரக்கூடிய மட்டத்தில் சகலருக்கும் நன்மை தரக்கூடிய விதத்தில் விலை மட்டங்களை நிர்ணயிக்க வேண்டும். இறுதியாக சந்தையின் சமநிலை வளர்ச்சியொன்றை அனுமதிக்கத் தக்க வகையில் அது நெகிழ்ச்சியுள்ளதாக இருக்க வேண்டும்.

### நாடுகளின் கூட்டமைப்பின் மீள்பார்வை

1937 ல் அப்போது காணப்பட்ட ஒப்பந்த ஏற்பாடுகளை பரிசீலனை செய்யவென நாடுகளின் கூட்டமைப்பால் விசேட ஏற்பாடு செய்யப்பட்டது. தனியார் துறைக்குரிய குணாதிசயங்களை கொண்ட தொகை ஒப்பந்தத்துக்கும், அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள ஒப்பந்தத்துக்குமிடையே தெளிவான வேறுபாடு வரையப்பட்டது. முன்னைய திட்டம் விநியோகங்களைக் கட்டுப்படுத்தி விலைகளை உயர்த்தவென உருவாக்கப்பட்டிருந்த அதே வேளை, மிக அண்மைக் காலத் திட்டங்கள், இருப்பிலுள்ள பொருள்களில் கட்டுப்பாட்டைக் கொணர்வதன் மூலம், விலைகளை ஸ்திரப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. உற்பத்தியாளர்களதும், நுகர்வாளர்களதும் கூட்டுக் கட்டுப்பாட்டில் இயங்கும் ''அவசரகாலப் பாவிப்புக் கையிருப்புத் திட்ட''மொன்றை ஸ்தாபிக்கவும் கமிட்டி சிபார்சு செய்தது.

### ஹவானா சாசனம்

வர்த்தகம், தொழில் வாய்ப்பு என்பன தொடர்பான சர்வதேச மகா நாடொன்றைக் கூட்டுவ

தென 1946 ம் ஆண்டு பெப்ரவரி 18 ம் திகதிய தீர்மான மொழி மூலம், ஐ. நா. வின் பொருளாதார சமூக கவுன்சில் தீர்மானித்தது. 57 நாடுகள் பங்குபற்றிய இம் மகாநாடு, 1947 டிசம்பர் மாதம் முதல், 1948 மார்ச் வரை கலந்துரையாடி சர்வதேச வர்த்தக ஸ்தாபனமொன்றுக்கான ''ஹவானு சாசனத்தை'' வரைந்தது. இது மகாநாட்டிற் பங்கு கொண்ட நாடுகளின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. சர்வதேச வர்த்தக ஸ்தாபனத்தின் சாசனமானது, இந்த ஸ்தாபனத்தில் அங்கத்துவம் பெற்ற நாடுகள், தமது பரஸ்பர வர்த்தக உறவுகளை நடத்துவது தொடர்பான ஒரு ஒழுக்கக் கோவையாகும். சர்வதேச பண்ட ஒப்பந்தங்களின் நோக்கம், ''கேள்வி நிரம்பல் நிலைமைகளுக்கிடையே, ஒரு நீண்ட கால சமநிலையைப் பேணத்தக்க அம்சங்களைக் கருத்திற் கொண்டு, நுகர்வாளருக்கு நியாயமான விலைகளையும், அதே போன்று உற்பத்தியாளருக்கு நியாயமான வருமானத்தையும் தரத்தக்க விலைகளின் அடிப்படையில் ஒரு நியாயமான அளவு ஸ்திரத் தன்மையை'' ஏற்படுத்த கருவியாக இருத்தலேயாகும். பண்ட ஏற்பாடுகள் தொடர்பாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தேவையான பொது நடைமுறைகளையும், இச் சாசனம் ஸ்தாபித்தது; பூர்வாங்க ஆய்வு, பேச்சு வார்த்தைகளில் பரந்த அளவில் கலந்து கொள்ளல், நிர்வாகம், எல்லாப்படி நிலைகளிலும் முழுப் பிரசாரம் என்பவற்றை யெல்லாம் இது உள்ளடக்கியிருந்தது. இந்த ஹவானு சாசனத்தை எந்நாடாவது ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட, பண்ட ஏற்பாடுகள் பற்றிய முடிவுகள் அதன் செயற்பாடு தொடர்பான கோட்பாடுகள் 1950 ல் ஐ. நா. சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

### பழைய மாதிரி

பண்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக கடந்த 50 ஆண்டுகளாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், சிறியளவு வெற்றியே கிடைத்தது. கோதுமை, கொக்கோ, கோப்பி, சீனி, தகரம் ஆகிய பண்டங்களுக்கான ஐந்து ஒப்பந்தங்கள் இன்றுள. இவற்றுள் எவையேனும் இப்போது செயற்படவில்லை. ஒப்பந்தங்கள் மூன்று முக்கிய அடிப்படை முறைகளைக் கொண்டிருந்தன. பன்முகத் தொடர்புகள், கோட்டா ஏற்பாடுகள், பாதுகாப்புக் கையிருப்புத் திட்டம் என்பனவே இவையாகும்.

சர்வதேச கோதுமை ஒப்பந்தம் ஒரு பன்முக கொள்வனவு விற்பனவு இணக்கமாகும். வாங்கலும் விற்றலும் இங்கு இறக்குமதி ஏற்றுமதி கோட்டா என வரையறுத்துக் குறிப்பிடப்பட்டுள்ளன. கோட்டாக்கள் விற்பனை செய்யப்படும் உண்மையான விலை ஆகக் கூடிய, ஆகக் குறைந்த விலைகளுக்கிடையே ஏறி இறங்க விடப்பட்டுள்ளன. விலையானது இம் மட்டங்களுக்குட் பட்டிருக்கும் வரை, ஒப்பந்தம் சந்தைப் பொறி முறையுடன் தலையிடாது. மொத்த ஏற்றுமதிக்கோட்டாக்களுக்குச் சமானமாக, மொத்த இறக்குமதிக் கோட்டாக்கள் எப்போதும் இருக்கவேண்டுமென்பது பொறிமுறையின் அடிப்படைத் தேவையாகும். இத்தகைய ஒப்பந்தம் உற்பத்தியில் எத்தகைய கட்டுப்பாட்டையும் கொண்டுவராது என்பதுடன், புதிய அல்லது மலிவான உற்பத்தியாளர்கள் உருவாவதை இது தடை செய்யவும் மாட்டாது.

கோட்டா ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தங்கள், ஒவ்வொரு நாட்டுக்கும் குறித்த கோட்டாக்களை ஒதுக்குவதன் மூலம், உற்பத்தி செய்யக் கூடிய அல்லது ஏற்றுமதி செய்யக் கூடிய தொகையை ஒழுங்குபடுத்தும். இத்தகைய ஏற்பாடுகளுக்கு கோப்பி, சீனி ஒப்பந்தங்கள் உதாரணமாகத் திகழ்கின்றன. அவற்

(25ம் பக்கத் தொடர்ச்சி)

காகக் கொண்டன்றி, அபிவிருத்திச் செய்முறையில் பெரும்பான்மை மக்கள் பங்கு பெறுதலை நோக்கமாகக் கொண்டே அபிவிருத்தியானது அமைந்திருக்க வேண்டு மென்பதை இது குறிக்கிறது. அதிகரிக்கும் உற்பத்தியானது சலுகை பெற்ற ஒரு சிறு மக்கட் பிரிவினரால் சுருட்டிக் கொள்ளப்படுவதை இது தடுக்கும். அத்துடன், அவ்வபிவிருத்தியின் பலாபலன்களை மக்களுட் பெரும்பான்மையினர் பங்கிட்டுக்கொள்ள இது உதவு மென்பதையும் இங்கு குறிப்பிடலாம். அபிவிருத்தியின் பொருள், இந்தியாவின் அபிவிருத்தி முயற்சிகளுள் அதன் இடம் என்ன என்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நாம் திரும்பச் செல்வோம். மக்களின் தேவையையறிந்து அவற்றை நிறைவேற்றுத பட்சத்தில், இந்திய மக்கள் தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேறு மார்க்கங்களைத் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயப்பாடு தோன்றக் கூடும். 1977 ம் ஆண்டு ஏப்ரல் 15 ம் திகதிய இதழில் 'டைம்ஸ் ஒப் இந்தியா' அப்போது தெரிவித்த கருத்துக்கள் இங்கு கவனிக்கத்தக்கன: ''இலட்சக் கணக்கான மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் நாம் தோல்வி கண்டதன் விளைவாக மக்களது சுதந்திரம் மறைந்தது; இவ் விஷயத்தில் நாம் இன்றைய முறை தோல்வியுறின் சில வேளை இச் சுதந்திரமானது நிரந்தரமாகவே மறைந்து விடக் கூடும்.''

இத்தகைய பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்களுள் ஒன்று காத்திரமான அரசியற் தலைமையாகும்; இது ''மக்களின் இறைமை'' யை முற்று முழுதாக அங்கீகரிக்கவும் வேண்டும். 1977 டிசம்பர் மாதம் அருசோவில் கூடிய 77 குழு நாடுகளின் 4 வது அமைச்சர்கள் மட்ட மகாநாட்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அருசா பிரகடனம் தெளிவாகக் குறிப்பிட்டமை போன்று, ''ஒரு நாட்டின் அபிவிருத்தி பொது மக்களாலேயே மேற்கொள்ளப்படுகிறது: பணத்தினாலன்று; பணமும் அது பிரதிநிதித்துவம் செய்யும் செல்வமும் அபிவிருத்தியின் விளைவேயன்றி அதன் அடிப்படையன்று. அபிவிருத்தியின் நான்கு முற்தேவைகளாவன: ''மக்கள், நிலம் நல்ல கொள்கைகள், நல்ல தலைமை'' என்பனவாம்.'' இன்றைய கட்டத்தில் இந்தியாவின் அபிவிருத்தியைப் பொறுத்தளவில் இது நன்கு பொருந்தும். ஆனால், பொருளாதார, சமூக, அரசியற் துறைகளிற் காணப்படும் வேறுபாடுகளும், வித்தியாசங்களுமே இதுவரை ஜனதா அரசின் சக்தியை உறிஞ்சி வந்துள்ளன. இந்நிலையில், மத்தியில், உயர்மட்டத்தில் காணப்பட வேண்டிய அதிமுக்கிய அம்சம் சிறந்த தலைமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றின் சந்தைப் பங்கு வீதத்துடன், கோட்டா ஏற்பாடுகளானவை தற்போதைய உற்பத்தியையும் அல்லது ஏற்றுமதியையும் கட்டுப்படுத்தி விடலாம். மேலும், வெளியாரிடமிருந்து வரும் இறக்குமதிகளை நுகர்வு நாடுகள் கட்டுப்படுத்தாத பட்சத்தில் அல்லது எல்லா உற்பத்தியாளர்களையும் ஒப்பந்தம் உள்ளடக்கியிராதபட்சத்தில், அவை உடைந்து விட நேரலாம். உதாரணமாக, சீனி ஒப்பந்தமானது, உலகச் சந்தையில் 40 சதவீதத்தை உள்ளடக்கி, பொது நலவாய நாடுகளிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் வர்த்தகம் செய்வதைத் தவிர்க்கிறது.

அவசரகாலப் பாவிப்புக் கையிருப்பு ஒப்பந்தமானது விலை ஸ்திரத் தன்மையை வைத்திருப்பதற்கான ஓர் ஏற்பாடாகும். விலைகள் ஆகக் குறைவாக இருக்கும் சமயத்தில், சந்தையிலிருந்து வினியோகப் பொருள்களை வாபஸ் பெறுவதன் மூலமும், கொள்வனவு செய்வதன் மூலமும் இது சாதிக்கப்படுகிறது. விலைப்போக்கில் வலோற்காரமாகத் தலையிடாது, குறைந்த விலைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்து, உயர் விலைகளில் விற்பனை செய்வதன் மூலம், தளம்பல் நிலைமைகளை வைத்திருப்பதே கையிருப்புத் தொகையை வைத்திருப்பதன் நோக்கமாகும். சர்வதேச தகர ஒப்பந்தம், சர்வதேச கொக்கோ ஒப்பந்தம் என்ற இரண்டும் ஓரளவு கையிருப்புத் தொகை நடைமுறையிலும், ஓரளவு ஏற்றுமதிக் கோட்டாக் கட்டுப்பாட்டுத் திட்ட முறையிலும் தங்கியுள்ளன.

ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ், விசேட அவதானம் செலுத்தவென 'உங்டாட்' ஸ்தாபனத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ள 10 ''அதிமுக்கிய'' பண்டங்களுள் நான்கைப் பொறுத்தளவில் ஏற்றுமதி, இறக்குமதி நாடுகளிடையே ஒப்பந்தங்கள் உள. ஆனால், முன்னர் குறிப்பிட்டது இன்னும் செயற்படுவதில்லை. சுமார் 20 ஆண்டுகளுக்கும் அதிகமாக, இருந்து வந்த தகர ஒப்பந்தமானது 1978 ஆரம்பத்தில் சந்தைக் கட்டுப்பாட்டை இழந்தது. அத்துடன் விலைகளும் ''உயர் மட்ட'' விலைகளைவிட உயர்ந்தன. அடிக்கடி அதிகரிக்கும் விலைகளைத் தவிர்க்க எவ்வகையிலாவது உதவக் கூடிய வகையில், இக்கையிருப்பு இருக்கவில்லை: மிகவும் சிறிய ஒரு தொகையாக அது (20,000 தொன்) இருந்ததே அதற்குக் காரணம். கோப்பி ஒப்பந்தமானது, உற்பத்தியாளர்களது ஒருமுக நடவடிக்கைகள் காரணமாக உடைந்தது. உலகில் காணப்பட்ட சீனியின் மேலதிக நிரம்பல், ஒப்பந்தத்தைப் பின்பற்ற ஐக்கிய அமெரிக்கா தவறியமை, ஒப்பந்தத்தில் இணைய ஐரோப்பிய பொருளாதார சமூகம் மறுத்தமை போன்ற காரணங்கள் ஒன்றிணைந்து 1978 ஜனவரியில் அமுலுக்கு வந்த சீனி ஒப்பந்தத்தைச் சீர்குலைத்தன. இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளும், சந்தை விலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டன.

பழைய முறையிலான பண்டத்துக்குப் பண்டம் என்ற அணுகுமுறை அவ்வளவு நன்றாக இயங்காததுடன் அது தோல்வியடைந்தது. எனினும், இவ்வேற்பாடுகள், சர்வதேச விலைகளில் குறுகிய கால ஸ்திரமற்ற நிலைமைகளைக் குறைத்தல் போன்ற குறுகிய இலக்குகளைக் கொண்டிருந்ததுடன், பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு கருவியாக அவை திகழ வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. மேலும், செல்வ நாடுகளிலிருந்து வறிய நாடுகளுக்கு வருமானத்தை இடமாற்றம் செய்தற்கான வழிவகையையும் இது கொண்டிருக்கவில்லை. மேலதிக உற்பத்திகளை கைத்தொழில் நாடுகளிலிருந்து வளர்முக நாடுகளுக்கு யதார்த்தமான முறையில் இடமாற்றம் செய்ய வேண்டுமென்ற உற்பத்தி நாடுகளின் பொது அபிலாஷைகள் பாரம்பரிய ஒப்பந்தங்களுக்கு வெளியேதான் காணப்பட்டன.

**பண்டங்கள் தொடர்பான ஒருங்கிணைப்புத் திட்டம்**

பண்டங்கள் தொடர்பான உங்டாடின் ஒருங்கிணைந்த திட்டம் இப் ''பழைய திட்ட''த்திலிருந்தும் வேறுபட்டதாகும். அத்துடன், இது பல பண்ட பொது நிதி தொடர்பான பண்ட ஒப்பந்தங்களை உருவாக்குதற்கான ஒரு முயற்சியாகவும் அமைந்தது. சர்வதேச ரீதியில் தொடரான ஒரு கையிருப்பை உருவாக்கல், அவற்றை நிதிப்படுத்தலுக்கான ஒரு பொது நிதி, வர்த்தகத்தில் பன்முக ஈடுபாடு, நட்டஈட்டு நிதிப்படுத்தல், வளர்முக நாடுகளில் பதப்படுத்தலை விஸ்தரித்தல் இத்திட்டத்தின் பிரதான அம்சங்களாக இருந்தன. பல்வேறு பண்டங்களை உள்ளடக்கல், சர்வதேசக் கையிருப்புத் தொகை, களஞ்சியப்படுத்தற் செலவுகளை பங்கீடு செய்து பரப்பி விடவென ஒரு பொது நிதியை உருவாக்கல் என்பன பாரம்பரிய (பழைய) அணுகு முறைக்கும், உங்டாட் கோட்பாட்டுக்கு மிடையேயான பிரதான வேறுபாடுகளாகும். இக்கூட்டுப் பிரேரணைகளிலுள்ள முக்கியத்துவமானது, பல்வேறு ஏற்றுமதிப் பண்டங்களுக்கான தீர்வுகளை உள்ளடக்குவதாக அமைந்தது. பண்ட உற்பத்திக்கான நீண்ட கால அபிவிருத்தி தொடர்பான ஏற்பாடுகள், முதலீடுகள், சந்தைகள் முதலியனவற்றை இவை உள்ளடக்குகின்றன. இவ்வகையில், வர்த்தகத்தில் ஏற்படும் சடுதியான நிலைகுலைவுக்கான தீர்வாக மட்டும் இவை அமையவில்லை. பரந்தமைந்த ஒரு தூர நோக்கில் வேறுபட்ட பல பொருளாதார சந்தர்ப்பங்களை எதிர்கொள்ளுமுகமாகவே, எந்தவொரு பண்ட ஏற்பாடுகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளும் நடத்தப்பட வேண்டும். தங்களது தேசிய மூலவளங்களில், பூரண கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டிய உரிமையை வளர்முக நாடுகள் கொண்டிருக்க வேண்டுமென்ற கருத்தையும் இது ஏற்றுக் கொள்கிறது.

**பத்து முக்கிய பண்டங்கள்**

தொடரான பல பண்டங்களின் பிரச்சினைகள் பற்றி ஆராயப் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்ய, ஒருங்கிணைந்த திட்டமே நன்றென கருதப்படுகிறது. ஆரம்பத்தில் 18 பண்டங்களுக்கான பட்டியலொன்று சிபார்சு செய்யப்பட்டது. அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடியதாக இருந்தமையும், இப் பண்டங்களுள் 60 சதவீதமானவை வளர்முக நாடுகளின் முதற் பொருள் ஏற்றுமதிகளாக விருந்தமையும் இதற்குக் காரணம், இந்த 18 பண்டங்களுள் பத்தை ''முக்கிய'' பண்டங்களாக, பொது நிதியின் அவதானத்தைச் செலுத்தவென இனம் காணப்பட்ட கோப்பி, கொக்கோ, தேயிலை, சீனி, பருத்தி, சணல், றப்பர், கடின தும்பு, செம்பு, தகரம் என்பன இவற்றுள்ளடங்குகின்றன. இம் முக்கிய பண்டங்களுடன், வாழை, கோதுமை, அரிசி, இறைச்சி, கம்பளி, இரும்புத் தாது, போக்ஸைட் என்ற 7 பண்டங்களும் சேர்ந்து 17 பண்டங்கள் ஒருங்கிணைந்த திட்ட ஏற்பாடுகளுக்

கென கருத்திற் கொள்ளப்படவுள்ளன. இப்பண்டங்கள் தொடர்பான வர்த்தகம், பெரும்பான்மையான வளர்முக நாடுகளை உள்ளடக்குகின்றன.

### பொது நிதி

தனிப்பட்ட பண்ட ஸ்தாபனங்களுக்கான நிதி மூலமாகவே பொது நிதி உருவாயிற்று. கையிருப்புக்களை வாங்கியும், விற்றும், கைவசம் வைத்திருந்தும், அகற்றியும் தனித் தனிப் பண்ட வர்த்தகத்தில் இவை வர்த்தகம் செய்கின்றன. எனினும், அமைப்பு ரீதியற்ற சந்தைகளில், விலை ஆதாரத்தை அளிக்கவென, விதிவிலக்கான ஒரு வகையில், வரையறுக்கப்பட்ட ஒரு காலத்துக்கு இது தலையீடு செய்யலாம்.

நைரோபியில் 1976 ல் நடைபெற்ற உங்டாட் 4 மகாநாட்டின் அரசியல் இணக்கத்தைத் தொடர்ந்து, பொது நிதியொன்றை உருவாக்குவது தொடர்பான நீண்ட பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றுள்ளன. இறுதியாக 75 கோடி டொலர் பாதுகாப்புக் கையிருப்பு நிதியை ஸ்தாபிக்கவென, 1979 மார்ச் மாதத்தில் இணக்கம் காணப்பட்டது. இந்நிதியிற் பங்கு கொள்ளும் ஒவ்வொரு நாடும் குறைந்தது 1 டொலரையாவது செலுத்த வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது. மீதித் தொகை பேச்சு வார்த்தை நடத்தும் குழுக்களிடமிருந்து வருமென எதிர்பார்க்கப்பட்டது. 68 % குழு ‘ஆ’ விலிருந்தும் (மேற்கத்திய சந்தைப் பொருளாதார நாடுகள்), 17 % குழு ‘ஈ’ யிலிருந்தும் (சோஷலிஸ நாடுகள்), 5 % சீனாவிலிருந்தும், 10 % 77 குழு நாடுகளிலிருந்தும் (வளர்முக நாடுகள்) பெறப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

நிதி எங்ஙனம் செலவிடப்படுமென்பதைத் தீர்மானிக்கும் வாக்கெடுப்பு விஷயத்தில் மூன்றாம் மண்டல நாடுகளுக்கு ஒரு சலுகை வழங்கப்பட்டுள்ளது. 77 குழு நாடுகள் 47 சதவீதமான வாக்குப் பலத்தைக் கொண்டுள்ளன. ‘‘ஆ’’ குழு நாடுகள் 42 சதவீதமான வாக்குப் பலத்தைக் கொண்டுள்ளன. ‘‘ஈ’’ குழு நாடுகள் 8 சதவீத வாக்குப் பலத்தையும், சீனா 3 சதவீதத்தையும் கொண்டுள்ளன. இந்நிதி ஆரம்பக் கட்டத் தொகையாக 40 கோடி டொலரைக் கொண்டிருக்கும்; உலக விலைகளில் வீழ்ச்சி ஏற்படுகையில், பண்டங்களைக் கொள்வனவு செய்யவும், உயர் உலக விலைகள் நிலவுகையில் அவற்றை விற்பனை செய்யவும் மேற் கொள்ளப்படும் வர்த்தகச் செயல்முறை நடவடிக்கைகளுக்கு இந்நிதி பயன்படும். றிசேர்வ் கையிருப்பு முகாமையாளர்கள் இப்பணியை மேற் கொள்வர். அளவுக்கு மீறிய தளம்பல் நிலையைத் தவிர்க்க இது உதவும். இந்நிதித்திட்டமானது 35 கோடி டொலர் நிதியைக் கொண்ட ஒரு இரண்டாம் கட்ட நிதியையும் கொண்டிருக்கும். ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் பண்ட வர்த்தகத்தை அபிவிருத்தி செய்யும் இதுபோன்ற ஏனைய நடவடிக்கைகளுக்கு இந்நிதி செலவிடப்படும். நிதியின் தீர்மானம் மேற்கொள்ளும் செய்முறையில் செல்வ, வறிய நாடுகளுக்கும், பண்ட உற்பத்தி நுகர்வு நாடுகளுக்குமிடையே வழங்கப்பட வேண்டிய முக்கியத்துவ விஷயமே இன்னும் தீர்க்கப்படாதுள்ளது.

1979 மார்ச் 20 ம் திகதி ஜெனீவாவில் பொது இணக்கமொன்று ஏற்பட்ட பின்னர், ஐ. நா. வின் அண்மைய இதழான ‘‘அபிவிருத்திக் கலந்துரையாடல்’’ என்ற சஞ்சிகையில், பிரபல விமர்சகரான இயன்கெஸ்ட், இணக்கமொன்று ஏற்படுத்தத் தடையாகவுள்ள சில பிரச்னைகளை எடுத்து ஆராய்ந்துள்ளார். அவர் அதில் கூறுவது வருமாறு:

> பேச்சுக்கள் இன்னும் முடியவில்லை; இணக்கத்தை வலுப்படுத்தவென ஓர் இடைக்காலக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. ஒப்பந்த விதிகளிற் கைச்சாத்திடவென, அநேகமாக வருட இறுதிக்கு முன்னதாக ஒரு மகாநாடு மீண்டும் கூடும். 1.36 மில்லியன் டொலர் செலவில் மேலும் 7 வார காலம் தேவையென அங்டாட் ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது.
>
> 1981 க்குப் பின்னரே இந்நிதி செயற்படத் தொடங்குமென நம்பப்படுகிறது; செயற்பாட்டு மையமாக அநேகமாக லண்டனே இருக்குமெனவும் தெரிகிறது.
>
> இறுதிப் பூர்வாங்க நிகழ்ச்சிகள் பல முக்கிய தீர்மானங்களைக் கொணர்ந்தன: ‘ஈ’ குழு தனது வாக்குரிமைப் பங்குக்கும், பங்களிப்புக்கும் எதிர்ப்புத் தெரிவித்தது; 2 வது கட்ட நிதி ஸ்திரமாக இயங்கப் போதிய பணமில்லையென ஆபிரிக்க நாடுகள் பெரும் கவலை தெரிவித்தன; சிறிய மேற்கத்திய நாடுகள் — அயர்லாந்து, நியூ சிலாந்து என்பன — உத்தேச 1 மில்லியன் டொலர் செலுத்துகை நியாயமற்றதென நீண்ட காலமாக வாதாடி வந்துள்ளன. மேலதிக கொடுப்பனவுகளினின்றும் அவற்றுக்கு நிவாரணம் வழங்கவென புதிய திட்டமொன்று வரையப்பட வேண்டியுள்ளது.
>
> ஐக்கிய அமெரிக்காவும் திருப்தியற்றதாகவே உள்ளது. ‘ஆ’ குழுவின் பங்கில் 19 சதவீதத்துக்கு அதிகமாக எதையும் செலுத்துவதில்லையென, அமெரிக்கர்கள் தீர்மானித்துள்ளனர், அத்துடன் வாக்குரிமை தொடர்பான ஒதுக்கீடுகள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவையெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இது ஒரு ‘‘தெளிவான சமநிலையற்ற தன்மையை’’க் காட்டிற்றென, அமெரிக்கத் தூதுக்குழுத் தலைவரான அலென் வென்ஸ் தெரிவித்தார். குழுக்களுக்கான வாக்குரிமை பற்றிய கொள்கைகள், ‘‘எங்களை வழுக்கும் ஒரு சரிவில் விட்டுள்ளதுடன்; ஓர் அபாயகரமான முன்னுதாரணத்தையும் உருவாக்கி விடுமென’’ பிரிட்டிஷ் தூதுக் குழு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.
>
> இருபது லட்சம் டொலர் ஆரம்ப முதலீடு என்ற உங்டாடின் மூலத்திட்டத்தை.மேற்கத்திய கைத்தொழில் நாடுகள், குறித்த மட்டத்திலும் வெகு குறைவாக வைத்திருந்தன. விலைத் தளம்பலைக் கட்டுப்படுத்துதற்கு, இந்நிதியானது பண்டச் சந்தையிற் தலையிடாதென அவர்களது பிரதிநிதிகள் சுட்டிக் காட்டுகின்றனர். அத்துடன், தனிப்பட்ட பண்ட ஒப்பந்தங்கள் சார்பு ரீதியாக சுதந்திரமாக விடப்படுமென அவர்கள் உணர்கின்றனர். ஒரு பாதுகாப்புக் கையிருப்பின் முகாமையாளர் நிதியுடன் இணைவது பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளச் சுதந்திரமுடையவராவர். இங்ஙனம் அவர் தீர்மானிக்கும் பட்சத்தில், இந்நிதியையே அவர் தமது ஒரே மூல நிதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன், தமது கையிருப்பின் அதியுச்ச நிதித் தேவையை மதிப்பீடு செய்து அதில் மூன்றிலொரு பங்கை நிதியில் இணைப்புச் செய்வர். அத்துடன், களஞ்சியத்தில் வைக்க வேண்டிய கையிருப்புப் பற்றியும் மதிப்பீடு செய்வார். இவற்றையும், தனது சொந்த மூலதனத்தையும் பாவித்து, ஒப்பந்தத்துக்குத் தேவையான அளவு பணத்தை நிதி சேர்த்துக் கொள்ளும். உங்டாடின் பொதுப் பண்டத் திட்டத்தை இந்நிதி மீட்டெடுக்குமா என்பதே அதி முக்கியமான உடனடிக் கேள்வியாகும்.

### புதிய மாதிரிகள்

புதிய ஒரு பொருளாதார அமைப்பு உருவாக்கப்பட்டு வரும் இன்றைய நிலையில், புதிய ஒரு உற்பத்தி மாதிரியையும் வர்த்தகப் போக்கையும் எற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பண்டங்கள் முக்கியமான ஒரு இடத்தை வகிப்பதன் காரணமாக, பண்டங்கள் தொடர்பான ஒருங்கிணைந்த திட்டமானது, வளர்முக நாடு நாடுகளின் ஒவ்வொரு பிரதான ஏற்றுமதிப் பண்டத்தினதும் ஒருங்குபடுத்தப்பட்ட திட்டத்துடன், வர்த்தகத்தை ஸ்திரமயமாக்கவும் உண்மை வருமானத்தைப் பெறவும், இது போன்று வேறு பல நன்மைகளைப் பெறவும் வழி செய்யுமென எதிர்பார்க்கிறது. முக்கிய பண்டங்கள் தொடர்பான இவ்வொப்பந்தமானது, அட்டவணைப்படுத்தல், ஆகக் கூடியதும் குறைந்ததுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைப் போக்குகளை நிர்ணயித்தலும் அவற்றை சரி செய்து கொள்ளலும், தற் பாதுகாப்புக் கையிருப்பு, நிரம்பல் தொகையைப் பெற்றுக்கொள்ள வசதி என்பனவற்றுக்கு வழிசெய்யும். அத்துடன், சந்தை அமைப்புக்குள் மூன்றும் உலக நாடுகளின் முதனிலை உற்பத்திப் பொருள்களை ஒருங்கிணைத்தல், சந்தைத் தகவல் உருவாக்கம், சந்தை முகாமை என்பனவற்றை மேற்கொள்ளவும் இது வழி செய்கிறது.

### ஏனைய திட்டங்கள்

நட்ட வீட்டு நிதிக்கான சர்வதேச நாணய நிதியின் திட்டம், லோம் ஒப்பந்தத்தின் கீழான ஸ்டேபெக்ஸ் திட்டம் போன்ற பல பல பண்டத் திட்டங்களும் உள. இவ்வகையிற் சிபார்சு செய்யப்பட்டுள்ள இன்னொரு திட்டம் தான், முதல் உற்பத்தி ஏற்றுமதிகள், முடிந்த பொருள் இறக்குமதிகள் என்ற இரண்டுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தும் அட்டவணைப்படுத்தல் திட்டமாகும். நிதி நட்ட வீட்டு அணுகுமுறையானது, சம்பாத்திய ஸ்திரத் தன்மைக்கு ஒரு ஊன்கோல் போன்றதாகும். பண்ட ஒப்பந்தங்கள் மூலம் இது சாத்தியமாகிறது. ஒருங்கிணைந்த திட்டத்தில், ஒரு முக்கிய அம்சமாக இதனை உட்டாட் ஏற்றுள்ளது. இவ்வசதியானது, பண்ட ஏற்றுமதி வீழ்ச்சிகள் அல்லது மொத்த ஏற்றுமதி வீழ்ச்சிகள் — இது இரண்டிலும் எது பெரிதோ — அவற்றுக்கு மெய் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தின் அடிப்படையில், நட்டவீடு வழங்குவதைக் குறிக்கிறது. இவ் விஷயத்திற்கென சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகளுள், ஏற்றுமதி மீட்சிக்கென உதவிக் கொடுப்பனவுகளை அதிகரித்தல், சென்மதி நிலுவைப்ப பரீட்சையை தளர்த்தல் என்பன அடங்குகின்றன. நட்டவீட்டு அணுகுமுறையானது வளர்ச்சியடைந்த நாடுகளின் செல்வாக்கைப் பெற்றிருப்பதுடன், இவற்றுக்கான காரணங்களும் வெளிப்படையாகவுள்ளன. இவை சந்தைப் பொறி முறையில் தலையிடுவதில்லை. மேலும், தற்போதுள்ளது போன்று, இத்திட்டம் சர்வதேச நாணய நிதியிடம் ஒப்படைக்கப்படின், இதன் மீதான கட்டுப்பாடு, பணத்தை வழங்கும் முதலாம் மண்டல நாடுகளின் கையிலேயே சிக்கியிருக்கும்.

ஐரோப்பிய பொதுச் சந்தையின் 9 நாடுகளையும், 52 ஆபிரிக்க, கரிபியன், பசிபிக் நாடுகளையும் உள்ளடக்கியுள்ள ஸ்டேபெக்ஸ் திட்டமும் ஒரு நட்டவீட்டுத் திட்டமாகும். 1977 ல் அமுல் செய்யப்பட்ட இத் திட்டம், குறைந்த உலகக் கேள்வி, பயிர் உற்பத்தி வீழ்ச்சி போன்றவற்றின் நிமித்தம் ஏற்றுமதிப் பெறுமதிகளில் ஏற்படும் நட்டங்களுக்கு காப்புறுதி வழங்கும் வகையிலான ஒரு திட்டமாக விளங்குகிறது. குறை விருத்தி நாடுகள், தாம் பெறும் தொகைகளைச் மீளச் செலுத்துமாறு கோரப்படவில்லை.

தாங்கள் ஏற்றுமதி செய்யும் மூதற் பொருள்களின் விலைகளை, இறக்குமதி செய்யும் பொருட்களின் விலைகளுடன் தொடர்புறுத்தக்கூடிய ஒரு திட்டம் தேவையென வளர்முக நாடுகள் கோரி வந்துள்ளன. வளர்முக நாடுகளின் வர்த்தக அமைப்பில் காணப்படும் மிகப் பெரும்பாலான பொருட்களுள், இத் திட்டச் செயற்பாட்டுக்கென எவற்றைத் தெரிந்தெடுப்பது என்பதில்தான் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

மூல வளங்களை இடமாற்றம் செய்தற்கும், புதிய சர்வதேச பொருளாதார அமைப்பொன்றை உருவாக்குதற்குமான ஒரு வழிவகையாக பண்ட ஒப்பந்தங்கள் அமைய வேண்டுமென்பதை வளர்முக நாடுகள் வேண்டி வந்துள்ளது. இதில் ஏதாவது வெற்றி கிட்டியுள்ளதா? எண்ணெய் உற்பத்தியாளர்களது நடவடிக்கைகளும் அதிற் காட்டிய வெற்றியும், விவசாயப் பொருள் ஏற்றுமதியாளர்களையும், தங்களது மூல வளங்களைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தின. தமது சொந்த ஏற்றுமதிகளின் கொள்வனவுச் சக்தியை அதிகரிக்கும் ஒரு வழிவகையாக இப் பிரேரணைகள் அமைந்துள்ளன. இவை ஓரளவு — வரையறுக்கப்பட்ட — வெற்றியையே அளித்துள்ளன என்பதையும், விலைக்கோட்டில் குறுகிய கால மாற்றங்களையே கொண்டுவரக் கூடியனஎன்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது உண்மையே. தகர ஒப்பந்தத்தில் இது தெளிவாகத் தெரிந்தது. இவ்வொப்பந்தம் ஓரளவு வெற்றி தந்த ஒன்றென்பது எற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், பொது நிதியொன்றை உருவாக்க வேண்டுமென்ற அண்மைய ஒப்பந்தங்

**பண்டப் பேச்சுவார்த்தைகளின் தற்போதைய நிலை**

| ஒப்பந்தம் | | முக்கிய பங்குபற்றுநர்கள் | வளர்முக நாடுகள் | பொறிமுறை |
|---|---|---|---|---|
| கோப்பி | .. | பிரேசில், கொலம்பியா, பிரான்ஸ், ஜெர்மனி (சமஷ்டி), ஐவரி கோஸ்ட், உகண்டா, ஐ. அமெரிக்கா | 100 % | ஏற்றுமதி கோட்டாக்கள் |
| கொக்கோ | .. | பிரேசில், பிரான்ஸ், ஜெர்மனி (சமஷ்டி), கானா, ஐவரி கோஸ்ட், நெதர்லாந்து, நைஜீரியா, பிரிட்டன், ரஷ்யா | 100 % | ஏற்றுமதி கோட்டாவும், கையிருப்புத் தொகையும் |
| சீனி | .. | அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, கியூபா, ஜப்பான், தென் னாபிரிக்கா, ரஷ்யா | 70 % | ,, |
| கோதுமை | .. | அவுஸ்திரேலியா, ஆர்ஜன்டினா, பிரேசில், கனடா, ஐரோப்பிய பொருளாதார சமூகம், எகிப்து, இந்தியா, ஜப்பான், ஐ. அமெரிக்கா, ரஷ்யா | 4 % | இப்போதைக்கு ஒன்றுமில்லை |
| றப்பர் | .. | இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து | 100 % | உற்பத்திப் பங்கீடும், கையிருப்புத் தொகையும் |
| தகரம் | .. | மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, நெதர்லாந்து, பிரான்ஸ், பிரிட்டன் | 90 % | கையிருப்புத் தொகையும், கோட்டாக்களும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் ஓரளவு நம்பிக்கை ஒளியைத் தருகின்றன.

### முரண்பாடுகள்

புதிய பொருளாதார அமைப்பின் நோக்கங்களை எய்துவதில் ஏற்பட்டுவரும் மெதுவான முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு அண்மையில் எண்ணெய் ஏற்றுமதியாளர்கள் வெற்றிகரமாக மேற்கொண்ட ''முரண்பாட்டுக் கருதுகோளை'' பின்பற்றுவது பற்றி ஆராய்தல் பயன் தரவல்லது.

உற்பத்தியாளர்கள் எண்ணெய் உற்பத்தியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தமை, இறக்குமதியாளர்கள் அதில் பெருமளவு தங்கியிருந்தமை, பிரதியீடுகளுக்கான சாத்தியங்கள் மிகக் குறைவாகக் காணப்பட்டமை, நிரம்பலை வாபஸ் பெற்று வைத்துக் கொள்ளக் கூடிய நிலைமைகள் காணப்பட்டமை என்பன 'ஒபெக்' ஸ்தாபனத்தின் வெற்றிக்குக் காரணங்களாக அமைந்தன. நிரம்பலில் அல்லது விநியோகத்தில் ஏற்படுத்தப்படக் கூடிய தலையீடுகள் அல்லது குறைப்புக்கள், நுகர்வு நாடுகளின் பொருளாதாரங்களைச் சீர்குலைக்கத் தக்கனவாக அமைந்தன. மேலும், சில எண்ணெய் உற்பத்தியாளர்கள் உருவாக்கி கைவசம் வைத்திருந்த பிரமாண்டமான மேலதிக நிதித் தொகையானது எத்தகைய நிலைமைகளையும் எதிர்நோக்கவும், தங்களது நிதியிலிருந்து இறக்குமதிச் செலவினங்களைச் சமாளிக்கவும் வழி செய்திருந்தது.

எண்ணெயை உற்பத்தி செய்யும் நாடுகளைப் பொறுத்தளவில் நிலவிய மேற்கூறிய நிலைமைகள், ஏனைய பண்டங்களைப் பொறுத்தளவில் அத்துணை பெரிய அளவில் நிலவாதிருக்கலாம். பல்வேறு பண்டங்களையும் உற்பத்தி செய்யும் உற்பத்தி செய்வோர் இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கை மேலதிக வலுவைத் தரும். றப்பர், தகரம், மர எண்ணெய் போன்றவற்றை உற்பத்தி செய்யும் மூன்றும் மண்டல நாடுகளிலிருந்து, அவற்றின் பண்டங்களுக்குக் கிடைக்கும் விலைகளை உயர்த்திக் கொள்ளவென, குறித்தளவு உற்பத்தி, நிரம்பல் என்பனவற்றை மேற்கொள்ளும் விதத்தில் இந்நாடுகள் ஐக்கியப்பட வேண்டுமென்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. உங்டாட் ஸ்தாபனத்தின் திட்டத்தை விட, இந்த அணுகு முறை, நிச்சயமாக இலகுவானதாகவும், மலிவானதாகவும், தாக்கம் மிக்கதாகவும் விளங்கும் போலத் தோன்றுகிறது. பண்ட ஒப்பந்தங்களைத் தயார் செய்வதென்பது கஷ்டமானதும், நீண்ட கால வேலை தேவையானதுமான ஒரு செயல் முறை என்பதிலேயே இது அவசியமாகிறது. அத்துடன், பேச்சுவார்த்தைகள் மூலமான மாற்றங்களைக் கொண்டுவருவதில் கைத்தொழில் நாடுகள் அக்கறை காட்டாமை இதற்கொரு காரணமாகிறது. முரண்பட்டுக் கொள்ளுவதே பிரச்சினைக்கான தீர்வென்பது இதன் அர்த்தமல்ல; நாடுகள் ஒன்றிலொன்று தங்கியுள்ள இன்றைய நிலையில் இவ்விஷயம் விசேடமாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இருந்தாலும், குறித்த ஒரு பண்டத்தை உற்பத்தி செய்யும் நாடுகள் எல்லாம் ஒன்றிணைந்து, ஒன்றுபட்ட ஒரு நடவடிக்கையை — பேச்சுவார்த்தைகள் நடத்தி பேரம் பேசி தாங்களும் நன்மை பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நடவடிக்கையை — எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

### ஒரு புதிய பொருளாதார அமைப்பு

1973 - 74 ம் ஆண்டுகளில் 'ஒபெக்' நாடுகள் மேற்கொண்ட ஒருமுக நடவடிக்கைகளையடுத்து, மூன்றும் மண்டல நாடுகளிலிருந்து தோன்றிய தொடரான அமுக்கம், பேச்சு வார்த்தை நடத்தித் தீர்வுகான வேண்டுமென்ற உற்பத்தி நாடுகளின் விடாப்பிடியான கோரிக்கை போன்றவற்றின் விளைவாக, பேச்சுவார்த்தை மூலமான மாற்றங்களுக்கு கைத்தொழில் நாடுகள் பெருமளவு விட்டுக் கொடுக்க வேண்டியேற்பட்டது. ஆனால், பரஸ்பர கூட்டறவு தொடர்பான செயற் திட்டமொன்றை உள்ளடக்கிய பிரகடனமொன்றை அங்கீகரிப்பதானது அதனை உண்மையில் செயற்படுத்துவதை விட மிக இலகுவானதென்பதையும் இது காட்டியது. உண்மையில் நடவடிக்கைக்கென ஏராளமான காரணிகள் இருக்கின்றன: ஆனால் முதலாம் மண்டல நாடுகளுக்கு அதனைச் செயற்படுத்த தேவையான விருப்பு உண்டா? புதிய பொருளாதார அமைப்பொன்றை உருவாக்குதற்கான ஓர் உதவித் திட்டமாக, இப் பண்டங்கள் தொடர்பான ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்தை மூன்றும் மண்டல நாடுகள் கருதி வந்தாலும் 'இது சாத்தியமாகுமா?

ஐக்கிய நாடுகளின் முதலாம், இரண்டாம் பத்தாண்டு உபாயங்கள், வளர்முக நாடுகள் தங்களது அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு, தங்களது பொருளாதாரங்களை அபிவிருத்தி யடைந்த நாடுகளின் பொருளாதாரங்களுடன் நெருக்கமாக இணைந்து செயற்பட வேண்டுமென்ற சிந்தனையை வளர்த்தன. மறுவார்த்தைகளிற் கூறுவதாயின், இந்த அமைப்புக்குள் இந்நாடு இருக்க வேண்டும் அல்லது அது நிரந்தர வறுமைப்பட்ட நாடாக வேண்டியிருக்கும். இந்த அமைப்புக்குள், மேற்படி அமைப்பு கொள்வனவு செய்யக் கூடிய — அவ்வமைப்பு வழங்கக் கூடிய விலையில் — தனது பொருள், பண்டங்களை உற்பத்தி செய்ய வேண்டும். ஒரு நாடு வளர வேண்டுமெனில், அது, இந்த அமைப்பு வேண்டும் பண்டங்களையே உற்பத்தி செய்ய வேண்டும்; அந்நாடு விரும்பும் பொருள்களையல்ல. ஒருவரைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கை இதுவாகும்.

புதிய பொருளாதார அமைப்பானது, மூன்றும் மண்டல நாடுகளுக்கும், சர்வதேச அமைப்புக்குமிடையேயான உறவை புனரமைப்புச் செய்ய வேண்டியதை அவசியமாக்கிறது. சுய சார்புக் கொள்கையானது, அபிவிருத்தியென்பது உள்ளிருந்து தோன்றி வரும் ஒன்றென்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வறுமைப்பட்ட நாடுகள், 'தர்மங்கள்' கண்ணை மூடிக் கொண்டு பெற்றுவந்த விக்டோரியா யுக நாட்கள் மறைந்துவிட்டன; நைரோபியில் கூடிய உங்டாட் 4 ஆனது, புதிய பொருளாதார அமைப்பொன்றை உருவாக்குதற்கான மூன்றும் மண்டல நாடுகளின் தீர்மானத்தை ஆணித்தரமாக எடுத்து விளக்கிறது. புதிய பொருளாதார அமைப்பின் மூலக் கல்லாக அமையக் கூடிய, பண்டங்கள் மீதான ஒருங்கிணைக்கப்பட்ட திட்டம் கூட, சுய சார்பு அபிவிருத்திக்கு தேவையான மாற்றத்தை வழங்காது போலத் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நெல் களஞ்சியப்படுத்தல்

## தற்போதைய நிலைமையும் எதிர்காலமும்

— டி. பின்ஹுர் சப்பிடீன்

இலங்கை அடிப்படையில் ஒரு விவசாய நாடு; நாட்டின் முழு மக்கள் தொகையினதும் பிரதான உணவாக அரிசி இருந்து வருகிறது. உள்ளூர்த் தேவைகளை நிறைவு செய்யுமளவு உள்ளூர் உற்பத்தி இங்கு இன்னும் வளரவில்லை; இந்நிலையில் அரிசியில் தன்னிறைவை எய்தும் பொருட்டு, உற்பத்தியைப் பெருக்குதற்கான பல நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இலங்கையின் சராசரி தலா உணவுத் தானிய நுகர்வு வருடத்துக்கு 288 இருத்தல் என மதிப்பிடப்பட்டுள்ளது. தலைக்கான அரிசி நுகர்வு சுமார் 100 கி. கிராமாக இருக்குமென (220 இரு.) 1971 ல் வித்யாசாகர் மதிப்பீடு செய்திருந்தார். மீதி 30 கி.கிரோமும் (66 இரு) கோதுமை மாவாக இருக்கலாம். இம்மதிப்பீடுகளின் அடிப்படையில், 1978ல் காணப்பட்ட 14.1 மில்லியன் ஜனத்தொகைக்கான உணவுத் தேவையைப் பார்க்கையில், வருடாந்த அரிசித் தேவை சுமார் 1.39 மில்லியன் தொன்னுக (2.09 தொன் நெல்) இருக்கும். 1982ல் எதிர்பார்க்கப்படும் 1.54 கோடி ஜனத்தொகையின் அடிப்படையில் பார்க்கையில், நாட்டுக்கான வருடாந்த அரிசித் தேவை 1.52 மில்லியன் தொன்னுக (2.28 மில்லியன் நெல்லாக) இருக்கும். இம்மதிப்பீடுகளைக் கருத்திற்கொண்டு நோக்கையில், 1978 ல் பெறப்பட்ட 1.8 மில்லியன் தொன் நெல், 0.3 மில்லியன் தொன்னுல் மாத்திரம் குறைவாக இருந்திருக்கும்: இதே போன்று 1982 ல் எதிர்பார்க்கப்படும் 2.25 மில்லியன் தொன் உற்பத்தி, தன்னிறைவுக்கான தேவையில் 0.03 மில்லியன் தொன் மாத்திரமே பற்ருக் குறையாக இருக்கும். எனினும், (நிலைமைகள் யாவும் சாதகமாக இருந்தால்) 1982 ல் 2.58 மில்லியன் தொன் அரிசியைப் பெறலாமென்ற சாத்தியங்கள் காணப்படுவதன் காரணமாக, அந்த ஆண்டில் 0.255 மில்லியன் தொன் அரிசியை மேலதிகமாகப் பெறக்கூடிய சாத்தியங்களும் உள. எனவே, சுய தேவைப் பூர்த்தி என்ற எமது நீண்டகால இலட்சியத்தினை 1982 ல் நாம் தாண்டிச் செல்லக்கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

கடந்த இரு தசாப்தங்களில் இலங்கையில் நெல்லுற்பத்தி மிக வேகமாக அதிகரித்து வந்துள்ளது. 1960 ல் 0.82 மில்லியன் தொன்னுகக் காணப்பட்ட நெல் உற்பத்தியானது, 1976 ல் 1.59 மில்லியன் தொன்னுக — 55 சதவீதம் — உயர்ந்தது. வரட்சி காரணமாக உற்பத்தி பாதிப்புற்ற 1975, 1976 ம் ஆண்டு காலத்தை அடுத்து வந்த காலப்பகுதியில் உற்பத்தி எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எய்தியது. அது 1977 ல் 1.7 மில்லியன் தொன்னுகக் காணப்பட்டது. 1978 ல் உற்பத்தி இலக்கு 1.84 மில்லியன் தொன்னுக நிர்ணயிக்கப்பட்டது. ஆனுல், உற்பத்தி 0.04 மில்லியன் தொன்னுல் குறைந்தது. இச் சாதனைகளின் அடிப்படையிற் பார்க்கையில், உற்பத்திப் பெருக்கத்துக்கு அரசாங்கம் கொடுக்கும் ஊக்குவிப்புக்களுடன், 2.25 மில்லியன் தொன் இலக்கு 1982 ம் ஆண்டுக்குள் எய்தப்படல் வேண்டும்.

### களஞ்சியப்படுத்தலுக்கான தேவை

உற்பத்தி பருவகாலங்களில் நிகழ்வதும், நுகர்வு தொடர்ந்து நடைபெற்று வரும் ஒன்ருக இருப்பதுமே, எத்தகைய விவசாய உற்பத்திப் பொருளினதும் களஞ்சியப்படுத்தலையும் அத்தியாவசியமாக்குகிறது. மேலும், நெல்லைப் பொறுத்தளவில், நெல் குற்றும் கைத்தொழிலின் மிகத் திறமையான செயற்பாட்டுக்கு, களஞ்சியப்படுத்தல் மிக முக்கியமான அம்சமாகவுள்ளது. விவசாயிகள் நுகர்வுக்கும், பண்ணைத் தொழிலாளரது வேதனங்களை வழங்கவும், விதைகளைப் பெற்றுக்கொள்ளவும், வர்த்தகத்துக்கும் நெல்லைக் களஞ்சியப்படுத்துகின்றனர். அரசாங்க மட்டத்தில், நுகர்வுக்கும், விநியோகத்துக்கும் தேவையான அரிசியைப் பெற்றுக்கொள்ளவும், தொடர்ச்சியாக நெல் குற்றலை உறுதி செய்யவும் களஞ்சியப்படுத்தல் அவசியமாகிறது. மேலும், விலையை ஸ்திரமாக வைத்துக்கொள்ளல், தேவைப்படும் நேரங்களில் உபயோகிப்பதற்கென ஏற்படுத்தப்படும் உணவுப் பாதுகாப்புக் கையிருப்பு என்பனவற்றுக்கும் இது உதவும்.

நெல்லைக் களஞ்சியப்படுத்துவதில் வேறு பல நன்மைகளும் உள. குறிப்பிடத்தக்க நட்டங்கள் எதுவுமின்றி நெல்லை நீண்ட காலத்துக்கு களஞ்சியப்படுத்தி வைக்கலாம்; ஆனுல், அரிசியை இங்ஙனம் வைக்க முடியாது. அரிசியை இரண்டு அல்லது 3 மாதங்களுக்கு மேல் இங்ஙனம் சேமித்து வைப்பது கடினமாகும்; அப்படி வைப்பதாயின் அதற்கு உயர் தொழில்நுட்ப வசதிகள் தேவைப்படும். மேலும், நல்ல நிலைமைகளின் கீழ் களஞ்சியப்படுத்தி வைக்கப்படும் நெல்லானது, (அதனுள்ளேயுள்ள) அரிசியின் விளைச்சலைப் பெருக்குவதுடன், தானியத்தை மேலும் கெட்டியாக்கி, பசைத் தன்மையையும் புரதச் சத்தையும் பெருக்கின்றது. நீண்ட காலம் வைக்கப்பட்ட நெல்லின் அரிசி, சமையலின் போது அதிகமாக விரிவடைவதுடன் புதிதாக அறுவடை செய்யப்பட்ட அரிசியை போலன்றி அதிகமான நீரை உறிஞ்சி சுவையான சமையலையும் தருகின்றது.

### நெற்சந்தைப்படுத்தற் சபையின் களஞ்சியப்படுத்தல்

நெல்லைப் பதப்படுத்தல், போக்குவரத்துச் செய்தல், களஞ்சியப்படுத்தல் போன்ற நோக்கங்களை செயற்படுத்தவென 1971ல் இச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. சபை விவசாயிகளிடமிருந்து நெல்லை உத்தரவாத விலையில் கொள்வனவு செய்கின்றது. புசலுக்கான உத்தரவாத விலை தற்போது 40 ரூபாவாகக் (ஒரு தொன்னுக்கு 1948 ரூபா) காணப்படுகிறது. உத்தரவாத விலைக்கு நெல்லை விற்பனை செய்யாத விவசாயிகள் நெல்லை தனியார் வர்த்தகர்களுக்கு விற்பனை செய்கின்றனர்.

நல்ல களங்சியப்படுத்தல் வசதிகளும், அவை தொடர்பான ஏனைய கவனிப்பு வசதிகளும் இருப்பதானது கொள்வனவு இலக்குகளை எய்தமட்டுமன்றி, தடையற்ற நெல் குற்றல் நடவடிக்கைகளையும், விநியோகத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதி செய்யவும் உதவும். இப் பணியைச் செய்யவென நெற் சந்தைப்படுத்தற் சபை, 170 இடங்களில் 300 களஞ்சியங்களைக் கொண்டுள்ளது. இவை சராசரி 820 முதல் 1025 தொன் (40,000 முதல் 50,000 புசல்) நெல்லைக் கொள்ளக் கூடியவை: நெல் மூட்டைகளை இங்கு களஞ்சியப்படுத்தலாம். இவற்றுடன், சபை மேலும் 5 பிரதான களஞ்சியங்களையும், அவசர தற்காலிக களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகளுக்கென தார்போலின், கென்வஸ், பிளாஸ்டிக் துணிகளிலான களஞ்சிய வசதிகளையும் கொண்டிருக்கின்றது. இது குறித்த விவரங்கள் ஒன்றுடனொன்று முரண்பட்டவையாக இருக்கின்றன. 1978 ல் உலக உணவு ஸ்தாபனத்தின் உணவுப் பாதுகாப்புக் குழுவொன்று, நெற் சந்தைப்படுத்தற் சபையின் மூடைகளை அடுக்கக் கூடிய நிரந்தர களஞ்சியங்களின் மொத்தக் கொள்வனவு 258,200 தொன் என அறிவித்தது. இதே ஆண்டு நெற் சந்தைப்படுத்தல் சபை — அமெரிக்க உதவி கூட்டுத் திட்டமொன்று, சபையிடம் 255,300 தொன் களஞ்சிய வசதி காணப்பட்டதெனத் தெரிவித்தது. இதே ஆண்டு மே மாதம் சபை வெளியிட்ட பிரசுரங்களில் 291,370 தொன் களஞ்சிய வசதி இருப்பதாகத் தெரிவித்துள்ளது. உண்மையான களஞ்சியக் கொள்ளளவு என்ன? இவற்றுக்கும் மேலாக சபையிடம், 23,600 தொன் கொள்ளளவு சக்தியைக் கொண்ட பாரிய தொகை நெல்லைக் குவித்து வைக்கக்கூடிய பெரும் சைலோ களஞ்சியக் கட்டிடங்களும், தற்காலிகமாக நெல் மூட்டைகளைச் சேமித்து வைக்கக் கூடிய 20,000 முதல் 63,000 தொன் களஞ்சிய வசதிகளும் காணப்படுகின்றன.

### 1978 ல் களஞ்சியத் தேவைகள்

1978 ல் நெற் சந்தைப்படுத்தற் சபை 3.2 கோடி புசல் (657,389 தொன்) நெல்லைக் கொள்வனவு செய்தது. இது நிர்ணய இலக்கான 3.1 கோடி புசலைவிட 3 சதவீதம் அதிகமாகும். கொள்வனவு செய்யப்பட்ட மொத்தத் தொகையில் 45 சதவீதம் களஞ்சியப்படுத்தப்படுமென மதிப்பிடப்படும் பட்சத்தில், 295,825 தொன் கொள்ளளவைக் கொண்ட களஞ்சிய வசதிகள் தேவைப்பட்டிருக்கும். சபையிடம் 291,370 தொன் நெல் மூடைகளைக் கொள்ளக் கூடிய களஞ்சிய வசதிகளும், 23,600 தொன் நெல்லைக் குவித்துச் சேமித்துக் கொள்ளக் கூடிய களஞ்சிய வசதிகளும் (மொத்தம் 314,970 தொன்) இருப்பதால் பிரச்சினைகள் எழுந்திருக்க இடமில்லை. எனினும், பல்வேறு மாவட்டங்களிலும் 1978 பெரும் போகத்தில் மேற்கொள்ளப்பட்ட நெல் கொள்வனவுத் தொகையானது, 15 பிரதான நெல் விளையும் மாவட்டங்களில் களஞ்சிய வசதிகள் பற்றாக்குறையாகக் காணப்பட்டதைக் காட்டின. சபையின் களஞ்சியக் கட்டட வசதிகளைப் பொறுத்த வரையில் இப்பற்றாக்குறை நிலவ முடியாது. எனவே பிரச்சினை வேறெங்கோ காணப்படுகிறது.

1978 முதல் நெற் சந்தைப்படுத்தற் சபையானது, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய களஞ்சியப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்துள்ளது. 1978-79 ம் ஆண்டு காலப்பகுதியில் சபை, ஒவ்வொன்றும் 1025 தொன் (50,000 புசல்) களஞ்சிய வசதிகளைக் கொண்ட 15 ஏற்கனவே பொருத்தப்பட்ட களஞ்சியக் கட்டிட அமைப்புக்களையும், 14 நிரந்தரக் களஞ்சியங்களையும் அமைக்கவுள்ளது. இவற்றுள் 12 ஏற்கனவே பொருத்தப்பட்ட களஞ்சியங்களும், 3 நிரந்தரக் களஞ்சியங்களும் அமைக்கப்பட்டு விட்டன. இது, களஞ்சிய வசதிகள் பற்றாக்குறையாகக் காணப்படும் அனுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, மன்னார் மாவட்டங்களில் மேலதிகமாக 15,400 தொன் (750,000 புசல்) நெல்லைக் களஞ்சியப்படுத்திக் கூடிய வசதிகளை அளிக்கும். இதனுடன், திருகோணமலையில் மொத்தம் 4700 தொன் கொள்ளளவைக் கொண்ட (230,000 புசல்) 7 களஞ்சியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் 28 களஞ்சியங்கள் விஸ்தரிக்கப்பட்டுமுள. இது, 8,635 தொன் (420,000 புசல்) களஞ்சிய வசதிகளை வழங்கும். கொழும்பில் 3000 தொன் (150,000 புசல்) சேமிப்பு வசதி கொண்ட புதிய களஞ்சிய மொன்றும் நிறுவப்பட்டுள்ளது. இவை யாவும் சேர்ந்து 1979 ல் சபைக்கு 31,830 தொன் (15.5 கோடி புசல்) சேமிப்பு வசதியை வழங்கும். நட்பு நாடுகளின் உதவியுடனேயே இக் களஞ்சிய வசதிகள் அமைக்கப்பட்டன.

### 1982க்கான களஞ்சியத் தேவைகள்

களஞ்சிய வசதிகள் குழு (1977) தனது சிபார்சுகளில், 1982 ல் மேலதிகமாக 178,000 தொன் களஞ்சிய வசதிகள் தேவைப்படுமென தெரிவித்திருந்தது. மறுபுறத்தில், உலக உணவு ஸ்தாபன உணவுப் பாதுகாப்புத் தூதுக்குழு, 1982 ன் நெல்லுற்பத்தி இலக்குகளான 2.25 மில்லியன் தொன், 2.58 மில்லியன் தொன் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு, மொத்தம் 568,600 தொன், 688,700 தொன் சேமிப்பு வசதி தேவையென மதிப்பீடு செய்தது. மேற்குறிப்பிட்ட இரு உற்பத்தி இலக்குகளைப் பார்க்கிலும், 294,700 தொன், 406,200 தொன் களஞ்சிய வசதிகள் மேலதிகமாகத் தேவைப்படுமென இக் கணிப்பீடுகள் காட்டுகின்றன. எனினும், இவ்வெதிர்வு கூறல்கள் உத்தேச விலை ஸ்திரக் கையிருப்பு, உணவுப் பாதுகாப்புக் கையிருப்பு என்பவற்றையும் இக் களஞ்சியத் தேவை வசதிகள் உள்ளடக்குகின்றன என்பதையும் கவனத்திற் கொள்ளத் தவறக் கூடாது.

இத் தேவைகளை ஈடு செய்யவென, நெற் சந்தைப்படுத்தற் சபை, 7 நவீன பெரும் கட்டிடங்களை (களஞ்சியப்படுத்தவும் பதப்படுத்தவும்) அனுராதபுரம், பொலநறுவை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமைக்க உத்தேசித்துள்ளது. இவை ஒவ்வொன்றும் 3100 தொன் நெல்லைக் கொள்ளக் கூடியன. அத்துடன், மணிக்கு 2 தொன் நெல்லை இவை புழுங்க வைக்கும் வசதிகளையும் கொண்டவை. இது, சபைக்கு 21,700 தொன் மேலதிக களஞ்சிய வசதியையும், 63,000 தொன் வருடாந்தம் நெல் குற்றல் வசதியையும் வழங்கும். 1979 ம் ஆண்டின் பெரும் போகக் காலத்தில் இக் களஞ்சியக் கட்டிடங்கள் தயார் நிலையிருக்குமென ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்டிருந்தன.

இவற்றுடன், மீதி 3 ஏற்கனவே பொருத்தப்பட்ட களஞ்சியங்களும், 11 நிரந்தரக் களஞ்சியங்களும் இக் காலப்பகுதியுள் அமைக்கப்படவுள்ளன. 14,375 தொன் (700,000 புசல்) மேலதிக சேமிப்பு வசதிகளை இவை வழங்கும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு ஐரோப்பாவில் சுற்றுலாத்துறை

1970 களிலிருந்து சோவியத் ரஷ்யாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பலவும் மேறகததுய சுறறுலாப் பயணிகளைக் கவர அதிக உற்சாகம் காட்டி வநதுள்ளன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் யூகோஸ்லாவியா இதில் முன்னேடியாக செயல்பட்டிருப்பதுடன், மேறகததிய சுற்றுலாப் பயணிகள், மிக்க விருபபுடன் போய்ச் சேரும இடமாகவும் விளங்குகிறது எனினும், ரூமேனியாவும் பல்கேரியாவும் கூட கருங்கடல் கரையில் மேற்கத்திய பயணிகளுக்காகப் பாரிய சுகவாசஸ்தலங்களை ஸ்தாபித்துள்ளன. சித்தாந்த ரீதியாக இநத அரசாங்கங்கள் இவ்விதம் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கும்,மேற்கததிய பயணிகளைச் சார்ந்திருப்பதற்கும முழுமூக இணஙகாதிருநத போதிலும, இந்நாடுகளில பலவறறறகு இந்த அநநியாகள் கொண்டுவரும் கடினச் செலாவணி தேவைப்படுகின்ற தென மனதில்படுகிறது. 70 களின் ஆரம்பத்தில நடததபபட்ட ஓர் ஆராய்ச்சி, ரஷ்யாவுக்குள் வரும் ஓர் பயணி மூலம் கிடைக்கும் இலாபம் ''ஒன்பது தொன் நிலக்கரியும், பதினைந்து தொன எண்ணெயும், இரு தொன் தானியமும் ஏற்றுமதி செய்வதிலிருந்து கிடைக்கும் இலாபத்துக்குச் சமமாக'' இருந்ததென்பதை எடுத்துக் காட்டியது.

இந்தச் சோஷலிஸ்ட் நாடுகளில் சுற்றுலாப பயணிகளை வெகுவாக ''வசீகரிக்கும்'' இடம் ரஷ்யாவாக இருந்ததென்று சொல்லப்பட்டது. 1973 ம ஆணடில் ரஷ்யா வருடமொன்றுக்கு 25 இலட்சத்துக்கு மேற்பட்ட பயணிகளைப் பெற்று வந்தது. அவர்களில் கிட்டத்தட்ட 75 சதவிகிதத்தினர் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும், மற்றவாகள் பிரதானமாக மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான், ஸ்காண்டிநேவிய நாடுகளிலிருநதும் வந்தவர்களாவர். மேற்கத்திய சுறறுலாப் பயணத்துறை இயக்குனர்களினதும், இன்டூரிஸ்ட் (அரசாங்கத்துக்குச் சொந்தமான உல்லாசப் பயணத்துறை ஸ்தாபனம்) டினதும் கூட்டு ஏற்பாட்டின் பேரில் ஒப்பந்தச் சுற்றுப் பிரயாணங்களுக்காக ரஷ்யாவுக்குள் கொண்டுவரப்படும மேற்கத்தியர்களின் தொகை வளர்ந்து வந்ததால், 1980 ம் ஆண்டளவில் உல்லாசப் பயணிகள் வருகை சம்பந்தமாக ரஷ்யா 1 கோடி இலக்கை அடைந்து விடுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்தச் சோஷலிஸ்ட் நாடுகளில் உல்லாசப் பயணத்துறையின் வளர்ந்துவரும் முக்கியத்துவத்துக்குத் திருஷ்டாந்தமாக பல்கேரியாவின் விஷயம் விளங்குகிறது. அங்கே உல்லாசப் பயண வசதிக் கைத்தொழில் அந்நியச் செலாவணி ஈட்டும் ஒரு முக்கியமான மூலமாகிவிட்டது. கருங்கடல் கரையிலும் மலைப்பிரதேசங்களிலும் சுகவாசஸ்தலங்களை அபிவிருத்தி செய்வதில் பெரும் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒப்பந்தச் சுற்றுப் பிரயாணக் கம்பெனிகளின் சுற்றில் பல்கேரியா உறுதியாக ஸ்தாபிதமாகி விட்டதால், அந்நாட்டுக்கு வரும் அந்நியப் பயணிகளின் தொகை ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 40 இலட்சமாக இருக்கிறதென்று இப்பொழுது அறிவிக்கப்படுகிறது. இந்தப் பயணிகளில் பெருந்தொகையினர் பிரதானமாகத் துருக்கிக்கும, யூகோஸ்லாவயாவுககும போய் வரும் வழியில் தங்குபவர்களாவர். பல்கேரியா உலலாசப் பயணத்துறையின் அபிவிருத்திக்காகத் தனது 1976-80 ஐந்து வருட திட்டத்தில, தற்போதுளள ஹோட்டல்களைப் புதுப்பிததறகும், புதிய ஹோட்டல்களைக் கட்டுவதறகும; வீதிகள், இருப்புப் பாதைகள, கப்பற் போக்குவரதது, விமானப் போககுவரத்து போனற உள்ளமைப்பு வசதிகளை நவீனமயமாக்குவதற்கும் அநேக பாரிய செய்திட்டங்களைத் தயாரிககத் திட்டமிட்டது.

380 கிலோமீட்டர் நீளமுள்ள பல்கேரிய கருஙகடறகரையில் குதிரை லாடத்தின் உருவில் அமைந்துள்ள சித்திரச் சிங்காரமான விரிகுடாவில், பல்கேரிய அதிகாரிகள், நீரோட்டம் போல வளர்ந்துவரும் பயணிகளுக்குத் தங்குமிட வசதியளிப்பதறகாகத தங்களுடைய சுகவாசஸ்தலப் பகுதிகளில ஒன்றில நூறுக்கு மேறபட்ட ஹோட்டல்களை நிர்மாணித்துளளனர். ''இன்றைய பல்கேரியா'' எனனும் சஞ்சிகையின சமீபத்திய இதழொனறில் நாதியா ஸ்டிராஷி பிரோவா எழுதியுளள கட்டுரையில், மேற்கத்திய புகழ்ச்சி விளம்பரங்களில் காணப்படும் அதே தொனியில் இங்குள்ள சூரிய ஒளி, மணல், இயற்கைக் காட்சிகள், வரலாறு ஆகியவற்றைப் பின் வருமாறு வர்ணிக்கிறார்:

''கியூபான் ஹோட்டலின் பத்தாவது மாடியிலுள்ள எனது அறையின் முகப்பிலிருந்து சூரியப் பிரகாசமான கடற்கரையில அமைந்துள்ள சுகவாச ஸ்தானத்தின் அதியற்புதக் காட்சியைக் கண்டு களிக்கலாம். ஹோட்டல்களையும், டெனிஸ் விளையாட்டு மைதானத்தையும், விற்பனை நிலையங்களையும் சுற்றிக் கண்ணுக்கினிய பசுமையான தாவரங்கள் காட்சியளிக்கின்றன. முன்னல், எனது காலடியில் கிடப்பது போல், நீலக் கடல் நீட்டுக்கு விரிகின்றது. கடலலைகள் ஒன்றையொனறு இதமாகவும், அந்நியோந்நியமாகவும் துரத்திக் கொண்டு செல்வதும், மணலை முத்தமிடுவதும், பின்னர் தங்களுக்குப் பின்னல் வருவனவற்றிற்கு வழிவிடுவதற்காகப் பின்வாங்குவதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.''

''இந்த நீளமான கடற்கரைப் பரப்பில் என்ன இவ்வளவு பலமாக ஈர்ப்பது என்னவோ? கோடையில் மிக வெப்பமான நாட்களில் கூடக் காற்றைக் குளிர்ச்சியாக்கும் இளந் தென்றலா அது? அல்லது அந்த விசாலமான கடற்கரையில் விசித்திர உருவங்களில் அமைந்துள்ள மணல் மேடுகளா? அல்லது படிகம் போன்ற தெளிந்த நீருடனும் நீண்டு விரிந்த நீலக் கடலிலிருந்து வந்து தழுவிக் கொஞ்சும் அலைகளுடனும் மெதுவாகச் சரிந்துள்ள கடற்படுக்கையா?''

''எனக்குத் தெரியாது. அது செய்திட்டம் வரை பலகையை விட்டும் நீங்காதிருந்த வேளையில் சூரியப் பிரகாசமுள்ள கடற்கரை என்று சிற்பிகள் சொன்ன இந்த அற்புதமான இடத்தில் உள்ள ஒப்பற்ற இயற்கைக் காட்சிகளாக இருக்கக்கூடும். இது சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலை. முதலில் அவர்கள் கட்டுமிடததைத் தெரிவு செய்தார்கள். இந்த இடத்தைத் தெரிவுசெய்து, பின்னர் வரை படங்களைத் தயாரித்தவர்களிடையே உண்மையான கவிஞர்கள் இருந்திருக்க வேண்டுமென எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றல், 380 கிலோமீட்டர் நீளமுள்ள பல்கேரியக் கருங்கடல் கரையிலிருந்து குதிரை லாடம் போன்று தோற்றமளிககும இந்த ஆழமான, சித்திரச் சிங்காரமான விரிகுடாவைக் கவிஞர்களால் மட்டுமே பொறுக்கியெடுக்க முடியும். அத்துடன், கட்டடங் கட்டுவோரும், நிலக்காட்சிச் சிற்பிகளும் தங்களுடைய விரல்களால் அதன் இயற்கையழகையும், வசீகரமான சூழலையும் அதிகரிப்பார்களென்றும் அவாகள் நிச்சயப்படுத்திக் கொண்டுள்ளனர். இப்படித்தான ஏனைய எல்லாவற்றிலிருந்தும வததியாசப்படும் ஒரு புதய முதது, பல்கேரியக் கருங்கடலில் மாலைபோல் அமைந்துள்ள சுகவாச ஸ்தலங்களில் தோனறியது. ஏனென்றல், இந்த விரிகுடா தனது விநோதமான நிலக காட்சியுடன், திரேஸியரும், கிரேக்கரும், பைஸாந்தியரும், பல்கேரிய ஆதிவாசிகளும் எங்களுக்கு விட்டுச் சென்றுள்ள சிற்ப வேலைப்பாடமைந்த ஞாபகஸ்தம்பங்கள் நிறைந்த மலைப் பாறைகளைக் கொண்ட நெஸ்ஸிபர் தீபகற்பத்துடன் இரண்டறக் கலக்கின்றது. இந்தச் சூழல் பல்கேரியத் தேசியக் கட்டட நிர்மாண பாரம்பரியங்களை நவீன மாதிரிகளுடனும், கவர்ச்சி அம்சங்களோடும் ஒன்றிணைப்பதற்கு ஊக்கமளித்தது.''

''எனவே, சுற்றியுள்ள நிலத்தோற்றத்தின் ரம்மியத்துடன் பரிபூரணமாகப் பொருந்தி, விரிகுடாக்கரை நீட்டுக்குக் கடற் பறவைகள் குந்திக் கொண்டிருப்பது போல் இப்பொழுது 108 ஹோட்டல்கள் அமைந்துள்ளன.''

''... புள்ளிவிவரங்களிலிருந்து கோடைகாலத்தில் அந்தச் சுகவாச ஸ்தலத்திலே தினமும் சராசரியாக 11,000 குழந்தைகள் தங்குகின்றனர் எனத் தெரிகிறது. அது வயதானவர்களுக்குப் போலவே இளம் பிராயத்தினருக்கும் பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், குழந்தைகளுக்கு விசேஷ ஏற்பாடுகளையும் செய்துள்ளது. நீரில் தண்டு வலித்து நீந்தி விளையாடுவதற்குரிய குளங்கள், மற்றும் விளையாட்டு வசதிகளுடன் விளையாட்டு மைதானங்களும், தாதிமாருடன் பாலர் பாடசாலைகளும் உள்ளன. குழந்தைகளின் பெற்றோர் இரவுக் கிளப்பொன்றுக்கோ, நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காக ஒரு நாள் அல்லது பல நாள் பயணத்தின் மீதோ அல்லது இஸ்தான்புல், மாஸ்கோ, ஏதென்ஸ் ஆகிய நகரங்களுக்குச் சுற்றுப் பிரயாணத்தின் மீதோ போகும்போது இந்தத் தாதிமார் குழந்தைகளைக் கவனித்துக் கொள்கிறார்கள். சிற்றுண்டிச்சாலைகள் குழந்தைகளுக்கு விசேஷ உணவுப் பதார்த்தங்களை வழங்குகின்றன. குழந்தைகளின் விடுமுறை மிட்டாய்க்கடை தினமும் பொழுது போக்கு விளையாட்டுகளுக்கும் போட்டிகளுக்கும் ஏற்பாடு செய்கின்றது. வாரந்தோறும் பொம்மலாட்டக் காட்சிகளும் மற்றும் பல நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்தபாற் கந்தோரில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# பொருளியல் நோக்கு

**மக்கள் வங்கி** ஒரு சமூகப்பணித்திட்டமாக **பொருளியல் நோக்கை** வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், **மக்கள் வங்கி,** நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.



**விலை ரூ. 2/25**

பொருளியல் நோக்கில் பிரசுரிக்கப்படுபவற்றை பேற்றுக் குறிப்புடன்
மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு

தெஹிவளை, துட்டுகமுனு தெரு, 135 இல் உள்ள, திஸர அச்சகத்தில் அச்சிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org